124

T.N.L.A.D.
9.5.2000
V.103 NO.2

C

V211,31'Poe
800.103.2
223320

9–5–2000

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	191-232
2. கவன ஈர்ப்பு—	
(அ) பரமக்குடி தொகுதியில் கண்மாய் மற்றும் கால்வாய் உடைப்புகளை சரிசெய்தல்.	232-234
(ஆ) காவேரிப்பட்டினம் — கிருட்டிணகிரி தேசிய நெடுஞ்சாலையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம் பழுதடைந்துள்ளது.	234-236
3. சிறப்புக் கவன ஈர்ப்பு—	
சென்னை விலங்குகள் நல வாரிய அலுவலகம் டெல்லிக்கு மாற்றப்படுதல்.	236-238
திரு. சி. ஞானசேகரன்	236-237
மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்	237
4. அறிக்கைகள் அளித்தல்—	
(அ) பொதுக் கணக்குக் குழு	238
(ஆ) பொது நிறுவனங்கள் குழு	238
5. அறிவிப்புகள்—	
(அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.).	238
(ஆ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.).	239

223320

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000. — 239

(ஆ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000. — 240

7. மானியக் கோரிக்கைகள், 2000–2001, விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — திருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 9 — மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்
(இ) கோரிக்கை எண் 11—மாவட்ட திருவாகம் — 241-343

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 241, 256, 268, 311, 315-334

திரு. எ. தெய்வநாயகம் — 256-260

திரு. உ. திசைவீரன் — 260-266

திரு. கே. சுப்பராயன் — 266-271

திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு — 271-275

திரு. பி.ஆர். சுந்தரம் — 276-278, 280, 283-284, 285, 286-287

*திரு. சி. அன்பரசன் — 287-290

திரு. மா. இராமச்சந்திரன் — 290-296

திரு. ஜி. நிஜாமுதீன் — 296-303

*திரு. பா. வேல்துரை — 303-314

8. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் — 343

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 344-345

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 27, விக்கிரம – திருவள்ளுவர் ஆண்டு 2031
2000 மே 9, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. **பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.”

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உறுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 561, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

561—

கல்லூரி

***22436—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஏதாவது ஒரு கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட மாவட்டத்தில் உதவி பெறும் கல்லூரிகள் 5-ம், சுயநிதிக் கல்லூரிகள் 10-ம் இயங்கி வருகின்றன. தற்போது அரசின் நிதிநிலைமை காரணமாக புதிய அரசு கல்லூரிகள் தொடங்குவதில்லை என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ள நிலையில் மேற்கண்ட மாவட்டத்தில் அல்லது தொகுதியில் அரசு கல்லூரிகள் தொடங்க வாய்ப்பில்லை.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளும், சுயநிதிக் கல்லூரிகளும் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் கூறினாலும்கூட, பவானி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வாழக்கூடிய அந்தப் பகுதியில் 9 மேல்நிலைப் பள்ளிகளின் மாணவ, மாணவிகள் வருடா வருடம் 1,250 பேர்களுக்கு மேலாக வெளியே வரக்கூடிய அந்தச் சூழ்நிலையில், அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதி சார்பாக, இலவசமாக நிலம் கட்டடம் கட்டுவதற்கு அரசுக்கு கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தோமேயானால், பிறகு அரசு கல்லூரி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாகவே, அரசு கல்லூரிகள் தொடங்குவதிலே ஏற்படுகிற இடர்ப்பாடுகள், குறைபாடுகள் எல்லாம் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சுயநிதிக் கல்லூரி என்ற முறையிலே ஏற்படுத்தினால்தான், தகுந்த ஏற்பாடுகளோடு செய்யக்கூடிய வாய்ப்பிருக்கிறது. பவானி தொகுதி அதிக வசதி இல்லாதவர்கள் உள்ள தொகுதி என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னாலும்கூட, எவ்வளவு பேர் வசதி உள்ளவர்கள்

அந்தத் தொகுதியிலே இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எனவே, அந்த அடிப்படையிலே சுயநிதிக் கல்லூரி தொடங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *562*, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

562—

முழுநேர நூலகம்

***24563—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆவரைக் குளம் கிராமத்தில் முழுநேர நூலகம் அமைத்திட வேண்டுமென்பதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ன்படி 5,000 மக்கட் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் நூலகம் திறக்க அனுமதி உள்ளது. திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆவரைக்குளம் கிராமத்தின் மக்கட்தொகை 6,821 ஆகும். இருப்பினும் அரசு ஆண்டுக்கு 10 கிளை நூலகம் என்ற அளவிலே மட்டும் திறந்து வருகிற காரணத்தால், அந்த ஊரில் கிளை நூலகம் திறக்க தற்போது இயலாத நிலை உள்ளது. மேலும், அவ்வூர் பொதுமக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு

[2000 மே 9

அளிக்கும் பட்சத்தில் முதற்கட்டமாக பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவரைக்குளம் கிராமத்தில் 1,300 வீடுகள் இருக்கின்றன. புதிய நூலகம் கட்டுவதற்காக 1989 ஆம் ஆண்டு 5 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டு, இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 20,000 ரூபாய்க்கான தளவாடச் சாமான்கள் கொடுக்கப்பட்டு, ஒரு பகுதிநேர நூலகம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பகுதிநேர நூலகத்தில் 20,000 ரூபாய்க்கான தளவாடச் சாமான்கள் அந்த ஊர் மக்களே வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். 350 உறுப்பினர்கள் அங்கே இருக்கின்றார்கள். ஒரு புரவலர் 1,000 ரூபாய் கொடுத்து புரவலராகச் சேர்ந்து பகுதிநேர நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து, அதை முழுநேர நூலகமாக ஆக்கித்தரும்படி கோரிக்கை வைத்திருக்கிறேன். நம்முடைய நெல்லை மாவட்ட நூலக அதிகாரியைச் சந்தித்தபோதும், கடந்த ஆண்டே முழு நேர நூலகமாக ஆக்கித்தர என்னிடம் உறுதி அளித்தார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் இந்த ஆண்டு முழுநேர நூலகமாக ஆக்கித் தருவார்களா என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையிலிருந்து கிடைத்த விடை சரியான விடையாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அங்கே நடைமுறையாக இருக்குமானால், பகுதி நேர நூலகம் இருக்குமானால், துறை தந்த விவரம் சரியாக இல்லாத காரணத்தால் துறையினருக்கு அறிவுறுத்தி, கிளை நூலகம் அமைக்க விரைவில் ஆவன செய்யும்படிக் கேட்டுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 563, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

2000 மே 9]

563—

மின் கடத்திகள்

***29883—திரு. இரா. பொன்னார்டு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதியில் பரவலாக மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதுமான மின் கடத்திகள் அமைத்து சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

திரு. இரா. பொன்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்சாரம் இல்லாமல்கூட இந்த நாட்டில் வாழலாம். ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்பதை நினைவிலே கொண்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்ததற்கும், சிறப்பாகச் செயல்பட்டதற்கும் பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு, சில கடலோர கிராமங்களிலும், சில உள்நாட்டு குக்கிராமங்களிலும் இதுபோன்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதையும் விரைந்து சரிபடுத்த ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் இது ஒரு வாடிக்கையாக ஆகிவிட்டது. சம்சாரம் இல்லாமல் வாழ்ந்தாலும் வாழலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்று

[2000 மே 9

சொல்வது. (சிரிப்பு) அப்படிச் சொல்வார்களே தவிர, சம்சாரம் இல்லாமல் யாரும் வாழமாட்டார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெர்னார்டு அவர்கள் மகிழ்ச்சியடையக்கூடிய வகையில் மின்சார இலாகாவால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய குறைவான மின் அழுத்தத்தைப் போக்குவதற்காக 110/11 கிலோ வோட் திறன் கொண்ட துணை மின் நிலையம் ரூ.266.85 இலட்சம் செலவிலே அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், 0.40 எக்டேர் நிலத்தையும் கொடுப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணி தொடங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்குள்ளாக அந்தத் துணை மின் நிலையம் கட்டப்பட்டு, அந்தப் பகுதி மக்களுடைய குறைகள் போக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மின்சாரம் வேண்டி விண்ணப்பித்தவர்கள் ஆயிரக்கணக்கில் காத்திருக்கிறார்கள். 1994-லே, 1995-லே, மனு செய்தவர்களுக்கு இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. கேட்டால் தேவையான posts இல்லை, conductors இல்லை, கம்பிகள் இல்லை என்று சொல்கிறார்கள். தேவையான உபகரணங்கள் இல்லாத காரணத்தால்தான் காலதாமதம் ஆகின்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அங்கே பற்றாக்குறையாக இருக்கின்ற உபகரணங்களை உடனடியாக வழங்கி, வெகுவிரைவிலே, விண்ணப்பம் கொடுத்து காத்திருப்பவர்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் பொருள்கள் இல்லை என்ற குறைபாடு

2000 மே 9]

இல்லை. டிரான்ஸ்பார்மர்களாக இருந்தாலும், கண்டக்டர்களாக இருந்தாலும், மீட்டர்களாக இருந்தாலும், இப்போது தமிழ்நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும் அந்தப் பொருள்கள் இருக்கின்றன. ஆனால், விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலேதான் பிரச்சினை இருக்கிறது. ஏறக்குறைய 4 இலட்சம் விவசாயிகள் மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆண்டுக்கு 40,000 பேர்களுக்குத்தான் மின்சாரம் வழங்குவது என்று அரசாங்கம் ஏற்கெனவே கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. அதை எந்த 40,000 பேர்களுக்கு வழங்குவது என்ற பிரச்சினை வருகின்றபோது யார் ரூ.25,000/ கட்டி இருக்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு மாதத்திலேயும், யார் ரூ.10,000/- கட்டி இருக்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு வருடத்திலேயும், மீதியிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, அந்த சீனியாரிட்டி அடிப்படையில் கொடுப்பதற்கும் மின் வாரியம் முடிவு எடுத்திருக்கிறது. எனவே, விவசாயிகள் அப்படிப் பதிவு செய்வார்களேயானால், நிச்சயமாக அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மின்சாரம் தட்டுப்பாடாக இருந்தாலும்கூட, நகர்ப்புறங்களில் மின்சாரம் வழங்குவதற்கான நேரத்தை நிர்ணயித்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அந்தக் கிராமப்புறங்களில் முற்றிலுமாக எந்த நேரம் மின்சாரம் வருகிறது, எந்த நேரம் மின்சாரம் இல்லை என்கிற நிலை தெரியாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே படிப்பதற்கோ, அல்லது மருத்துவமனைக்கோ இல்லாவிட்டாலும்கூட, பாதுகாக்கப்பட்ட குடிநீருக்கு இன்றைக்கு மின்சாரம் இல்லாத காரணத்தால், பாதுகாக்கப்பட்ட தண்ணீரை வழங்க முடியாத சூழ்நிலை கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, குளம், குட்டைகளிலிருந்து தண்ணீரை எடுத்து, பருகக்கூடியவர்களுக்கு அதன்மூலமாக காலராவும், தொத்து நோயும் வருகிற வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, நகரத்தில் இருக்கிற சீரான மின்சார

[2000 மே 9

அழுத்தத்தை கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தி ஒரு சீரான விநியோகம் செய்வதற்கு அரசு முன் முயற்சி எடுக்குமா? அதேபோன்று நான் அமைச்சரிடத்திலே ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தேன் இதன் அவசியம் கருதி. அதன் மூலமாக அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று கருதுகின்றேன். இருந்தபோதிலும்கூட சீரான மின்சாரம் விநியோகம் இல்லாத காரணத்தினால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முடியாத ஒரு தேக்க நிலை கிராமப்புறங்களில் இருக்கிறது. இதைச் சரி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தை சீராக விநியோகிக்க வேண்டும் என்று ஏற்கெனவே மின்சார வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டு, விவசாயிகளுக்கு மட்டும் பகல் நேரத்திலே 4 மணி நேரமும், இரவு நேரத்திலே 8 மணி நேரமும் three phase current வழங்கப்படுகிறது. Single phase current-ஐப் பொறுத்தவரையிலே எங்கும் பிரச்சினை இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல குடிநீர்த் தொட்டிகளுக்கு தேவைப்படுகின்ற மின்சாரத்தைப் பொறுத்தவரையில் சில நேரத்தில் சில இடங்களிலே இடர்பாடுகள் இருந்தது உண்மை. அதையும் இப்போது மின்சார வாரியத்திற்கு எடுத்துச்சொல்லி குடிநீர்த் தொட்டிகளுக்கு தண்ணீரை ஏற்றுவதற்கு மின்சாரம் குறைந்தது 6 மணி நேரம் காலை நேரத்திலே வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மின்சார வாரியம் அதை அமல்படுத்திக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரையிலும் கடலோரக் கிராமங்கள் பூராவிலும் மின் அழுத்தக் குறைவு

2000 மே 9]

உள்ளது. அது ஏற்படுவதற்கு காரணம் மின்கம்பிகள் உப்புக்காற்று படுவதன் காரணமாக 6 மாதத்திற்குள்ளாக அதனுடைய மின் அழுத்தம் கம்மியாகிவிடுகிறது. எனவே, நவீன யுத்திகளைப் பயன்படுத்தி அந்த மின் கம்பிகளை எந்த வகையில் உப்புக் காற்று தாக்காமல் செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள், இந்தக் குடிநீர்த் திட்டங்களில் இந்த மின் வெட்டு என்பது இராது என்று. கடந்த வாரம் வரையிலும் 4 மணி, 5 மணிக்கு மேலாக நகராட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற மின் வெட்டின் காரணமாக குடிநீர் கொடுப்பதற்குக் கூட வசதி இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பிரத்யேக சூழ்நிலையில் இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரம் இருக்கக்கூடிய கிராமங்களிலே உப்புக் காற்று படுகின்ற காரணத்தினாலே மின்சார விநியோகத்திலே கொஞ்சம் சிக்கல் ஏற்படுகிறது என்றும், அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யப்படுமா என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இப்பொழுது தமிழ்நாட்டிலே மின் விநியோகம் செய்வதற்காக எல்லாமே அலுமினியம் கம்பிகளைத்தான் பயன்படுத்துகிறோம். அதனாலே, அந்த உப்புக்காற்று படுகின்ற காரணத்தினாலே மின்சாரத் தடை ஏதும் ஏற்பட்டு விடாது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகர்ப்புறங்களிலே குடிநீர்த் தொட்டிகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதுகுறித்து ஏற்கெனவே நான் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குச் சொல்லிய பதிலைத்தான் சொல்ல விரும்புகிறேன். இப்போது குடிநீருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு அவர்களுக்கு மின் விநியோகம் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

[2000 மே 9

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக சுமார் 4 இலட்சம் விவசாயிகள் இலவசமாக மின் இணைப்பு வேண்டி காத்திருக்கிறார்கள். நம் அரசு பொறுப்பேற்றவுடன் ஆண்டுக்கு 50,000 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்தது. ஆனால், முழுமையாக எல்லோருக்கும் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் மின் கம்பம் நட்டு அவர்களுக்கு சர்வீஸ் கொடுக்கப்படுமானால் அதிலே 10,000; 20,000 பேர்களுக்கு அந்த அளவுக்கு வழங்குவார்கள். 'On the line service' என்று மின் கம்பங்களே நடாமல் ஏற்கெனவே அருகில் இருக்கின்ற மின் கம்பிகளிலிருந்து மின்சாரம் வழங்கி சர்வீஸ் கொடுப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. மு. அப்பாவு: ஆனால், கடந்த 4 ஆண்டுகளாக இந்த நிலை மாறிவிட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 4 இலட்சம் விவசாயிகள், காத்திருப்பவர் பட்டியலில் இருப்பவர்களுக்கு எப்போது மின் இணைப்பு வழங்குவார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 50,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதாக அரசு அறிவித்தது என்று சொன்னார்கள். அரசு அப்படி எப்போதும் அறிவிக்கவில்லை. ஆண்டு ஒன்றுக்கு 40,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது என்றுதான் அறிவித்திருக்கிறது. அப்படி 40,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதென்றால் 4 இலட்சம் விவசாயிகள் 10 ஆண்டுகாலத்திற்கு பொறுத்திருக்க வேண்டும். அதனால்தான் இந்த அரசாங்கத்தால் அந்த விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் கொடுப்பதற்காக ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு, 25,000 ரூபாய் கொடுக்கிறவர்களுக்கு உடனடியாகவும், 10,000 செலுத்துபவர்களுக்கு ஓராண்டு காலத்திற்குள்ளாகவும் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று அறிவித்தோம். அது 4 ஆண்டுகளாக அல்ல; 2 ஆண்டுகளாகத்தான். இந்த இரண்டு ஆண்டுகளில் அப்படி விவசாயிகள் பணத்தைச் செலுத்தி மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டும் இலவசமாக மின்சாரம் கொடுக்கின்றவர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையிலேயும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

2000 மே 9]

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது இன்று ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய மின்சார இலாகா முழுமையாக மின்சாரம் கொடுப்பதற்கு முடியாத இடங்களில், குறிப்பாக இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இயங்குகின்ற இடங்களில் ஜெனரேட்டர் வாங்கி வைத்து, மின்சாரம் இல்லாத நேரத்தில் ஜெனரேட்டர் மூலம் குடிதண்ணீர் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2, 3 மாதங்களுக்கு முன்னாலேயே, கோடைகாலத்திலே குடிதண்ணீர் பஞ்சம் வரும் என்பதை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று மின் வாரியத்திற்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அது எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி, அது அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு தனிப்பட்ட கிராமத்திலே அவர்களுக்குக் குடிநீர் கொடுப்பதாக இருந்தாலும் சரி, அனைத்து மக்களுக்கும் குடிநீர் கொடுப்பதற்கு 6 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கின்றோம். இப்போது, அந்த அறிவுரை

[2000 மே 9

வழங்கியதற்குப் பிறகு, எங்கேயிருந்தும் அரசாங்கத்திற்குப் புகார் வரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்கேயாவது அப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களே யானால், உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *564*, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

564—

துணை மின் நிலையம்

***32206—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அல்லது புதுக்குடியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) செங்கிப்பட்டிக்கு அருகில் உள்ள சாணூராப்பட்டியில் 2 ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு, நிலம் கையகப்படுத்துவதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், இந்த நிதியாண்டில் இப்பணி சேர்க்கப்பட்டு பணி முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2000 மே 9]

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. செங்கிப்பட்டி பகுதியில் மத்திய அரசினுடைய Gas-filling units மற்றும் சிறு தொழிற்சாலைகள் அதிகமாக வருகின்றன. மேலும் அங்கு தஞ்சை மாவட்ட வருவாய் அலுவலர் நிலத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்வதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க வேண்டும். குடிநீர்த் தொட்டிகள் மற்றும் அவற்றின் தலைமையிடங்கள் எல்லாம் காட்டுப் பகுதியிலேதான் இருக்கின்றன. அதனாலே, தங்கு தடையின்றி வழங்குவதற்கு, குடிநீருக்கு 6 மணிநேரம் மின்சாரம் போதாது. சில நகராட்சிப் பகுதிகளிலே ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள். அதனால் தனி டிரான்ஸ்பார்மர் அமைத்து குடிநீர் வழங்குவதற்கு—எப்போதும் மின்சாரம் இருந்தால்தான் மேல்நிலைத் தொட்டியிலே தண்ணீர் ஏற்ற முடியும். அந்த வகையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். குடிநீருக்கு 6 மணி நேரமெல்லாம் மின்சாரம் வழங்குவது போதாது; ஒரு இலட்சம் மக்கள் இருக்கிற இடங்களில் கூடுதலாக குடிதண்ணீர் கொடுப்பதற்கும், மின்சார வெட்டு இல்லாமல், கூடுதலாக மின்சாரம் கொடுப்பதற்கும் அதாவது 10 மணி நேரம் கொடுப்பதற்கும், தனி டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்திற்காகத் தனியாக டிரான்ஸ்பார்மர் போட வேண்டிய அவசியம் இல்லை. பகலிலே 6 மணி நேரம் குடிநீர்ப் பிரச்சினைக்காக மின்சாரம் வழங்க வேண்டுமென்று, three phase current வழங்க வேண்டுமென்று சொல்கின்ற நேரத்தில், அது போதாது சில இடங்களில் ஒரு இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக

இருக்குமானால் அந்த இடங்களிலே இரவு 10 மணியிலேயிருந்து காலை 6 மணிவரையிலே three phase current கிடைக்கிறது. அந்த நேரத்திலே அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களோ, நகராட்சி மன்றத் தலைவர்களோ மின்சாரத்தை எடுத்து தொட்டிகளை நிரப்பிக் கொள்ளலாம். எனவே, அதற்காக என்று தனியாக டிரான்ஸ்பார்மரோ அல்லது மின்சாரமோ வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. மோகனதாசன்.

திரு. கோ. மோகனதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காட்டில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. அந்த நிலங்களையெல்லாம் தனியார்கள் ஆக்கிரமிக்கின்ற சூழ்நிலை உள்ளது. போலீஸ் மூலமாக அந்த இடங்களிலே இருந்து அவர்கள் எல்லாம் அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த இடத்தில் உடனடியாக துணை மின் நிலையம் அமைத்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மின் அழுத்தக் குறைவைப் போக்குவதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டிற்குள்ளாக அந்தப் பணிகள் முடிவடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 565, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

565—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***6117—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடம்பாக்கம் பேரூராட்சியில் மல்லீஸ்வரி நகர், யஷ்வந்த் நகர் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாடம்பாக்கம் பேரூராட்சி மல்லீஸ்வரி நகர் மற்றும் யஷ்வந்த் நகர் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் விரைவில் அளிக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் இந்தத் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடம்பாக்கம் பேரூராட்சிப் பகுதி வெகு வேகமாக வளர்ந்து வருகின்ற புறநகர்ப் பகுதி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே நிரம்ப வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்தப் பகுதி மக்களுக்கும் பயன்தரும் அளவுக்கு விரைந்து அந்தச் செயல் திட்டத்தை முடித்துக் கொடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடுவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆவது ஆண்டினுடைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 16,500 மக்கள் தற்போது அங்கே இருக்கிறார்கள். நாம் வைத்திருக்கிற உச்சகட்ட மக்கள் தொகை கணக்கெடுத்தால் 47,500 என கணக்கு வருகிறது. அதன் அடிப்படையிலே இந்தப் பேரூராட்சிக்கு

[2000 மே 9

தினசரி ஒரு நபருக்கு 70 லிட்டர் குடிநீர் கிடைக்க வேண்டிய அளவுக்கு புதிய மேம்பாட்டு திட்டம் ஒன்று போடப்பட்டு, அந்தத் திட்டம் ஏற்கெனவே இருந்த ஆழ்குழாய் கிணற்றோடு சேர்த்து, திறந்தவெளிக் கிணறு ஒன்றிருந்ததை மூன்றாக உயர்த்தி, அதனுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 4 இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி 69 கிலோ மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களை அமைக்க உத்தேச மதிப்பீடு 2 கோடியே 64 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. அந்தப் பரிசீலனை முடிந்த பிறகு அரசுக்கு அது வரும். அரசு நிர்வாகத்தின் அடிப்படையிலே அதற்கு அனுமதி வழங்கினால் அநேகமாக இந்த ஆண்டே இந்தத் திட்டத்தை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் பல ஊர்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கும், தமிழ்நாட்டிலே பல இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் Rig வண்டிக்காரர்கள் புதிய ரேட் வேண்டுமென்று கேட்பதால் எந்தப் பகுதியிலுமே தற்பொழுது போர்வெல் போடாமல் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய பகுதியிலே ரேட் கட்டுப்படியாகாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதை அரசு உணர்ந்து, அவர்களை அழைத்துப் பேச வேண்டும். உடனடியாக குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த Rig உரிமையாளர்களை அரசு அழைத்துப் பேச முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள் 6 மாதத்திற்கு, 4 மாதத்திற்கு ஒரு முறை இப்படிப்பட்ட பிரச்சினையைக் கிளப்பி சட்டமன்ற உறுப்பினர்கள், ஊரிலே உள்ள முக்கியஸ்தர்கள் இவர்களை எல்லாம் அணுகி இந்தப் பிரச்சினையில் மிக காலதாமதம் ஆகும், உடனடியாக இதைத் தீர்த்து வையுங்கள் என்று சொல்கிற பழக்கம் தொடர்ச்சியாக உண்டு. அதனடிப்படையில் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் அணுகியிருக்கிறார்கள் என்று கருதுகின்றேன். ஒரு உதாரணத்தை உங்களுக்குச் சொல்கிறேன். ஆந்திராவில் இப்படிப்பட்ட பணிகள் தொடங்குகிற நேரத்தில் அதிகமானவர்கள் இங்கேயிருந்து அங்கே

2000 மே 9]

செல்கிறபோது ஒரு நெருக்கடி ஏற்படும். பிறகு அவர்கள் வந்தவுடன் அவர்களுக்கு வேலையே கிடைக்காத நேரத்தில் எந்த விலைக்கும் எடுத்துக்கொள்வார்கள். எல்லா விவரங்களும் பேசி முடிக்கப்பட்டு அந்தப் பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பிரச்சினை தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குழந்தை தமிழரசன்.

திரு. குழந்தை தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் நான்காவது முறையாக தமிழகத்திலே பொறுப்பேற்றதற்குப் பின்னால் 31-3-2000 வரை ஒவ்வொரு தொகுதியிலும் நடந்த குடிநீர்த் திட்டங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு புத்தகம், அதேபோன்று உள்ளாட்சித் துறை மூலமாக ஒவ்வொரு கிராமம், ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி ஆகியவற்றில் நடந்த பணிகளை ஒரு புத்தகமாக அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மிக அற்புதமாக பொதுமக்களுக்கு தேர்தல் நேரத்திலே எடுத்துச்சொல்கிற அளவுக்கு விவரங்கள் அந்தப் புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதர அமைச்சர்களுக்கும் எடுத்துச்சொல்லி, அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் செய்திருக்கிற பணிகள் அடங்கிய புத்தகத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 566, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

566—

பாதாளச் சாக்கடை

***33408—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 9

(அ) அரக்கோணம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழுகிற பகுதி. அங்கே கிரீஸ் நகர், பெரியார் நகர் போன்ற பகுதிகளில் ஆரம்பித்து ஒரு கால்வாயும், அதேபோல அசோக் நகரில் ஆரம்பித்து ஒரு கால்வாயும், ஆக இரண்டு கால்வாய்கள் நகரத்தின் முக்கியப் பகுதியில் இணைந்து பிரகாஷ் திரையரங்கம் வழியாக பெரிய ஏரியை அடைகிறது. அதேபோன்று புதுப்பேட்டை பகுதியில் ஆரம்பித்து ஒரு கால்வாய் அங்காளம்மன் கோவில் வழியாகவும், கிரிபின்ஸ்பேட்டை பகுதியிலிருந்து ஆரம்பித்த ஒரு கால்வாய் கேப்ரியல் உயர்நிலைப் பள்ளி வழியாகவும், இரண்டும் இணைந்து டி.என். நகர் வழியாக சிற்றேரியை அடைகிறது. அரக்கோணம் நகரிலே சிறுமழை பெய்தால்கூட அந்தப் பகுதியிலுள்ள அந்தக் கால்வாய்கள் நிறைந்து அசுத்த நீர் வீடுகளில் புகுந்து சுகாதார சீர்க்கேட்டை ஏற்படுத்துகின்றன. எனவேதான், இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நாங்கள் வலியுறுத்தினோம். உடனடியாக அப்படிப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை என்றாலும், அந்தக் கால்வாய்களில் தூர் வாரி, அந்தக் கரையோரங்களில் தடுப்புச் சுவர்களையாவது அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற அக்கறை பாராட்டு

2000 மே 9]

குரியதுதான். இருந்தாலும், நகராட்சி அது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுடைய நிதியாதாரம் இதற்கு ஒத்து வரவில்லை என்ற ஒரு கருத்து இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பொதுவாகவே, தமிழ்நாட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி நகராட்சிகள், இன்னும் பேரூராட்சிகள் இவைகளிடம் எல்லாம் ஒரு பொதுவான கருத்து நிலவுகிறது. இவ்வளவு பணிகள், மற்றவைகளில் செய்கிறபோது, இது சற்றுக் குறைவாகக் காணப்படுகிறதே என்ற எண்ணம் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்கூட என்னிடத்தில் விழுப்புரத்தைப் பொறுத்த வரையில் எல்லாவிதமான நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம், அந்தத் திட்டத்திற்கு ஆதரவு இன்னும் வரவில்லை என்று தெரிவித்தார்கள். பொதுவாக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு இலகுவாக ஒரு முடிவு எடுத்து, மாவட்ட தலைநகரத்தில் அதை ஆரம்பிக்கலாம்; ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலைநகரத்திலே ஆரம்பிக்கலாம். இலட்சம் மக்களுக்குக் குறையாமல் மக்கள் தொகை இருக்க வேண்டும். கடன் வசதி பெறுவதற்குத் தகுதி இருக்க வேண்டும். திரும்ப அதைச் செலுத்துகின்ற தகுதி இருக்க வேண்டும். அதனால் ஒவ்வொரு இணைப்புக்கும் மக்கள் தடையின்றி அதற்கு அவ்வப்போது பணம் கட்டுவதற்கு உறுதி தர வேண்டும். முன்பணம் கட்டுவதற்கும் உறுதி தர வேண்டும். குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமானால் இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே கேட்ட கேள்வி அத்தனைக்கும் ஒட்டுமொத்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை நினைவுபடுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே அதைச் செய்தால், அநேகமாக இத்தனை ஆண்டுகளைவிட இந்த ஆண்டு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான அபிவிருத்திகள் அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழுப்புரம், அநேகமாக அதற்குத் தகுதியானதாக இருக்கிறது என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதுவெல்லாம் தகுதியாக இருந்தால், இந்த ஆண்டில் அதை எடுத்துப் பணியாற்ற முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *567*, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2000 மே 9

567—

தரிசு நிலங்கள்

***30550—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள இலட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற அரசு ஏதேனும் முயற்சி எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அளவிற்கு வெற்றி கிடைத்துள்ளது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் மாநில அரசின் மூலம் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் 10 மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மைய அரசின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் 14 மாவட்டங்களில் 83,939 எக்டேரில் ரூ.38.55 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளைநிலங்கள் எல்லாம் இப்போது அதிகமான வீடுகள் கட்டக்கூடிய அளவிற்கு ஒருபுறம் மாறிக்கொண்டு வருகின்றன. இன்னொருபுறம், ஜனத்தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கிறது. ஆனால், எந்த அளவிற்கு—இந்த புரொபசல் அடிப்படையில்—விவசாயத்திற்காக அதிகமான தரிசு நிலங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தோடு இந்தக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அத்தோடு இன்னொன்று, புதியதாகக் கொண்டு வரக்கூடிய இந்த விளைநிலங்களுக்கான இரசாயன உரங்கள், அதுபோன்று இரசாயன மருந்துகள் அடிப்படைதைக் குறைவாகப் பயன்படுத்தி, அதிகமான இயற்கை உரங்களை மட்டும் இட்டு அந்த நிலங்களினுடைய தன்மை கெட்டுப்போகாமல் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2000 மே 9]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், தரிசு நிலங்களை விளைநிலங்களாகக் கொண்டு வருவதன் மூலமே எதிர்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப உணவு உற்பத்தியிலே நாம் நிறைவு காண முடியும் என்று கருதிதான், டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே தரிசு நில மேம்பாட்டுக் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழு ஒரு அறிக்கையை அரசுக்கு வழங்கியது. தமிழ்நாட்டில் மொத்த நிலப்பரப்பு 130.2 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 20 இலட்சம் எக்டேர் பரப்பு தரிசு நிலங்களாக இருப்பதாகக் கண்டறியப்பட்டு, இந்தத் தரிசு நிலங்களை விளைநிலங்களாகக் கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையில் 1999-2000 ஆம் ஆண்டில் மாநில அரசு திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை, விருதுநகர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, பெரம்பலூர், ஈரோடு, புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஆயிரம் எக்டேர் வீதம் மொத்தம் 10,000 எக்டேர் பரப்பில் 489.603 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஓர் எக்டேருக்கு தரிசு நில மேம்பாட்டிற்காக தமிழக அரசு ரூ.4,896 செலவு செய்திருக்கிறது. மத்திய அரசாங்கம் ஓர் எக்டேருக்கு 4,000 ரூபாய் என்ற அளவில் ஒதுக்கீடு செய்திருக்கின்றது. அந்த அடிப்படையிலே விளைநிலங்கள், தொழிற்சாலைகள் அல்லது குடியிருப்புப் பகுதிகளாக மாறி இருந்தாலும், இதுபோன்ற முயற்சிகளை எடுப்பதன் மூலம் அவற்றை விளைநிலங்களாக நாம் கொண்டு வருகிறோம்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரைக்கும் நல்ல தொழில் நுட்பங்களை நாம் விவசாயிகளுக்குக் கொடுத்து வரக்கூடிய காரணத்தால், நல்ல வீரிய வித்துகளைக் கொடுக்கக்கூடிய காரணத்தினாலே, உற்பத்தி அளவும் ஆண்டுக்காண்டு அதிகரித்துத்தான் வருகிறதே தவிர, ஒன்றும் குறைவு ஏற்படவில்லை.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 568, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மே 9

568—

பாசன வசதி

***21271—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடவாறு பாசன மற்றும் வடவாறு பாசன விரிவாக்கப் பகுதி விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு கல்லணைக் கால்வாயில் முறை வைக்காமல் தண்ணீர் விடுவதுபோல் வடவாறு பாசனக் கால்வாயிலும் முறை வைக்காமல் தண்ணீர்விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையின் நீர் இருப்பை பொறுத்து காவிரி மற்றும் வெண்ணாறு ஆகியவற்றுக்கு தலைப்பில் முறை வைத்து நீர் வழங்கப்படுகிறது. கல்லணைக் கால்வாயின் தலைப்பில் முறை வைக்காமல் தொடர்ந்து நீர் வழங்கப்பட்டு வருகிறது. வடவாறு, வெண்ணாற்றின் கிளை வாய்க்காலாகும். வடவாறு விரிவாக்கக் கால்வாய், வடவாற்றிலிருந்து பிரியும் கிளைக் கால்வாயாகும். இந்தக் கால்வாய்க்கு வெண்ணாற்றின் மூலம்தான் தண்ணீர் செல்ல வேண்டுமாதலால் முறை வைக்காமல் தொடர்ந்து தனியே தண்ணீர் வழங்க இயலாது. இந்த வாய்க்கால்களில் ஆரம்பத்தில் இருந்தே (வெண்ணாற்றைச் சார்ந்து) முறைப்பாசனம் பழக்கத்தில் உள்ளது.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடவாறு பாசனப் பகுதியினுடைய விரிவாக்கப் பகுதி கடைமடைப் பகுதி வரையிலும் தண்ணீர் வரவில்லை என்ற பிரச்சினை தொடர்ந்து 20 ஆண்டுகளாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. இது வெண்ணாற்றிலிருந்து செல்ல வேண்டும் என்று இருக்கிற நிலைமையில் ஏதாவது மாறுதல் செய்ய முடியுமா என்ற சிந்தனையின் அடிப்படையிலேதான் அப்படி அவர்கள் கேட்கச் சொல்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே ஒரு பகுதியான மதுக்கூர் பகுதியிலேயும், திருவாரூர் மாவட்டத்திலே

2000 மே 9]

இருக்கின்ற மன்னார்குடி, கோட்டூர் ஒன்றியப் பகுதியிலேயும், பெரும்பாலான பகுதிகள் பாசனப் பகுதிகளாக இருக்கின்றன. ஆண்டுதோறும் இது பிரச்சினைக்குரியதாக இருக்கிற காரணத்தாலே இதிலே மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அதோடு ஒரு வேண்டுகோள், அந்த வெண்ணாறு பாசனப் பகுதியிலிருந்து இந்தக் கடைமடைப் பகுதி பாசனப் பகுதியாக இருக்கிற அந்த வடவாறு விரிவாக்கப் பாசனப் பகுதிகளிலே சில அணைகள் கட்ட வேண்டி இருக்கின்றன. தடுப்பணைகள் கட்டி நீரைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதேபோல, இந்த மேலேற்று நிலையத்தைச் சென்ற இரண்டு வருடங்களாக கேட்டு வருகின்றேன்; அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் சபையிலே பேசி ஆகாது என்ற காரணத்தாலே என்னுடைய தாழ்மையான வேண்டுகோள், அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னால் ஒரு தேதியிட்டு, அந்தப் பகுதியை வந்து பார்த்து அதற்குரிய மாறுதல் என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து செய்வதற்கு உரிய முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலைமையை உணர்ந்திருப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம் என்னைவிட அவருக்கு தஞ்சை மாவட்டத்தினுடைய பாசன முறை தெரியும். ஆகவே, அவரிடத்திலிருந்துதான் நான் யோசனையை எதிர்பார்க்கிறேன். காரணம், கல்லணைத் தலைப்பிலிருந்து வெண்ணாறு பிரிகிறது. வெண்ணாற்றினுடைய 34/4-ன்கீழ் இருந்துதான் வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு பிரிகிறது. அந்த வடவாற்றிலிருந்துதான் வடவாறு விரிவாக்கக் கால்வாய் பிரிகிறது. வடவாறு விரிவாக்கக் கால்வாய்க்கு முறை வைக்காமல் பாசனம் அளிக்க வேண்டுமானால், வெண்ணாறு, வடவாறு, வெட்டாறு, இங்கே இருப்பவர்களும் அதே முறையைத்தான் கேட்பார்கள். இரண்டாவது, உங்களுக்குத் தெரியும், அது காவிரி டெல்டா பகுதி. இருந்தாலும் மாண்புமிகு மேட்டூர் திட்டம்; இது உறுப்பினருடைய கோரிக்கையில் நியாயம் உண்டு என்பதை நான் உணர்கிறேன். எனவே, அந்தக் குறையைப் போக்குவதற்காக தண்ணீர் தருகிற முறை வைக்கிறபோது, கொஞ்சம் அதிகமான தண்ணீரைத் தந்து, முறை வைக்காத காலகட்டத்திலும், ஒரு Turn system—தண்ணீர் வராத காலத்திலும்கூட, கொஞ்சம் தண்ணீரை அந்தப் பகுதிக்கு விட வேண்டும் என்றும் தனியாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே,

இடை இடையே சில அணைகள் கட்டுவது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். அது கடைமடைப் பகுதியாக இருக்கிற காரணத்தால், அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர் விருப்பப்படியே இந்தக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் நானே—இப்போது அங்கே desilting வேலை நடக்கிறது—பார்வையிட வருகிறபோது, வடவாறு விரிவாக்கக் கால்வாயைப் பார்வையிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 569, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.*

569—

மின் வசதி

***36737—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை பகுதியிலுள்ள புல்மலையில் கட்டப்பட்டுள்ள விருந்தினர் விடுதிக்கு மின் வசதி ஏற்படுத்தி நவீனமயமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புல்மலையில் அமைந்துள்ள வனக்குடில் ஓர் ஓய்வு விடுதியல்ல, இது ஒரு ஆய்வு விடுதியாகும். (Inspection Bungalow) இக்குடில் அமைந்துள்ள வனப் பகுதி இந்திராகாந்தி தேசிய பூங்காவிற்கு உட்பட்ட சூழியல் உணர்வுகள் நிறைந்த பகுதியாகும். மேலும் இக்குடில் அமைந்துள்ள வனப் பகுதி காட்டு யானைகள் இடம் பெயர பயன்படும் வழித்தடம் ஆகும். மேலும், இப்பகுதி அரிய வன உயிரினமான நீலகிரி வரையாடுகள் புகலிடமாகும். இத்துடன் இக்குடில் அமைந்துள்ள வனப் பகுதி கேரள மாநில இறவிகுளம் தேசிய பூங்காவிற்கு நுழைவு வாயிலாக உள்ளமையால் ஆய்வு விடுதிக்கு மின் இணைப்பு வழங்கிடும் எண்ணம் வனத் துறையின் பரிசிலனையில் இல்லை.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக்காலத்திலே, வால்பாறை, அதனுடைய உயரம் காரணமாக

ஒரு சுற்றுலாத் தலமாக விரைவாக மாறி வருகிறது. அதற்குச் செல்லும் வழியிலேதான் ஆளியாறு இருக்கிறது, குரங்கு நீர்வீழ்ச்சி போன்ற பகுதிகளெல்லாம் இருக்கின்றன. பாலாஜி கோயில்கூட அங்கே இருக்கிறது. ஏராளமான மக்கள் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களில் ஏராளமானோர் வந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் மக்களை ஈர்ப்பதற்கு வால்பாறைக்கு எல்லாத் தகுதியும் இருக்கிற காரணத்தால், இந்தப் புல்மலை—Grass Hills-ஐ—ஒரு சுற்றுலாத் தலமாக இல்லாவிட்டாலும்கூட, தொலை தூரத்திலிருந்தாவது மக்கள் பார்க்கிற அளவுக்குச் சாலைகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற புல்மைதானம் அல்லது புல்மலை இருக்கிறதே, அது Prohibited Area. மக்கள் வரக்கூடாது என்று நாங்கள் கருதுகிற இடம். காரணம், அங்கு அரிய உயிரினங்கள் வாழ்கின்றன. இரண்டாவது, அந்த மலைக்கு சாலை அமைத்துக் கொடுத்தால், மின்விளக்கு கொடுத்து, T.B.யை ரிப்பேர் செய்துவிட்டால் ஆயிரக்கணக்கான பேர்கள் வருவார்கள். எனவே, அந்த உயிரினங்கள் அழியக்கூடிய வாய்ப்பு உண்டு என்று வனத் துறை கருதுவது மட்டுமல்ல, வனத்துறையின் சட்டமும் அதைத்தான் சொல்கிறது. மூன்றாவது, அந்த இடத்திற்கு மக்கள் போக முடியாது. அது அட்டைக் காடு. நீங்கள் போய் வருவதற்குள், உங்கள் உடம்பு முழுவதும் அட்டையாகிவிடும். காரணம், நீண்டதூரம், 40 கி.மீ. உள்ளே நடந்து போகவேண்டும். நான்காவது, யானைகளும், சிறுத்தைகளும் அதிகம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அங்கு போகாமல் இருப்பதுதான் நல்லது என்பதற்காக இந்தச் சௌகரியங்கள் செய்யப்பட மாட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *570*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

570—

புதிய வழித்தடம்

***25108—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 9

திருத்தணியிலிருந்து சித்தூருக்கு அம்மையார்குப்பம், ஆவலகுண்டா வழியாகப் புதிய வழித்தடப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *571*, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

571—

சொகுசுப் பேருந்து

***30037—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, வீரசோழனிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய வீரசோழன் மிகப் பெரிய ஊர்களில் ஒன்று. ஏறத்தாழ 6 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற இடம். அதிலே பெரும்பாலானோர் இஸ்லாமியர்களாக இருக்கின்ற காரணத்தால், சென்னையிலே அவர்களுக்கு வர்த்தகத் தொடர்பு மிக அதிகமாக இருக்கிறது. எனவே, அங்கிருந்து சென்னைக்கு ஒரு நேரடிப் பேருந்து இயக்க வேண்டுமென்பது அவர்களுடைய நீண்டநாள்

2000 மே 9]

கோரிக்கையாக இருக்கிறது. அதை நிறைவேற்ற முடியாதபட்சத்தில், இப்பொழுது சென்னையிலிருந்து சாயல்குடிக்கு, பார்த்திபனூர், அபிராமபுரம், கமுதி வழியாக இயக்கக்கூடிய பேருந்தை, பார்த்திபனூரிலிருந்து வீரசோழன் வழியாக அபிராமபுரம், கமுதி வழியாக சாயல்குடிக்கு இயக்க முடியுமா? இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த வழித்தடத்திலே பேருந்தை இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரசோழனிலிருந்து அருப்புக்கோட்டைக்கு நிறைய பேருந்து வசதிகள் இருக்கின்றன. அருப்புக்கோட்டையிலிருந்து மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கேற்ப சென்னைக்கு சொகுசுப் பேருந்துகளே இயக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அருப்புக் கோட்டையிலிருந்து நிறைய போக்குவரத்து வசதிகள் இருக்கிற காரணத்தால், வீரசோழனிலிருந்து அருப்புக்கோட்டை வழியாக அந்த வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஒவ்வோர் உறுப்பினரும் தங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற கிராமங்களிலிருந்து சென்னைக்கு நேரடியாக பேருந்து கேட்க முற்படுவார்கள் என்று சொன்னால், அத்தனைப் பேருந்துகளையும் விடுவதற்கு இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *572*, திரு. செங்கை சிவம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

572—

கிழக்குக் கடற்கரைச் சாலை

***33261—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் முதல் தூத்துக்குடி வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கும் இரண்டாம் கட்டப் பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 மே 9

உலக வங்கி உதவியுடன் 2000-2001-ல் இப்பணி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கடலூர் வரை போடப்பட்டிருக்கிற சாலை மிகக் குறுகலாக இருக்கிறது. ஆக, இதையும், இனி போடப்படுகிற சாலையையும் நான்கு வழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசுக்கு உண்டா? அதை தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே சேர்க்கிற எண்ணம் உண்டா? அதற்கு சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்கிவிட்டதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில் கிழக்குக் கடற்கரைச் சாலை என்ற இந்த மிகப் பெரிய திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே முதலமைச்சராக இருநதபோதே, அதற்கான திட்டங்களை உருவாக்கினார்கள். இப்போது, சென்னையிலிருந்து கடலூர் வரையில் சாலை போட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையில் சாலை அமைப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு, உலக வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை நான்கு வழிச் சாலையாக அமைக்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், இந்தச் சாலை அமைப்பதற்கான முயற்சி எடுத்துக்கொண்டபோதே சில தொண்டு நிறுவனங்கள் இதிலே குறுக்கிட்டு, இந்தச் சாலையை அகலப்படுத்தினால் சுற்றுச்சூழல் கெட்டுவிடும் என்று நீதிமன்றத்திற்கே போனார்கள். நீதிமன்றத்தினுடைய அறிக்கையின்படி மத்திய சுற்றுச்சூழல் துறை நம்முடைய தமிழக அரசுக்கு சில தாக்கீதுகளை வழங்கியிருக்கிறது. அதன் அடிப்படையில் கடலூர் வரையில் இரு வழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து தூத்துக்குடி வரையிலேயும் இரு வழிச் சாலைதான் அமைக்க முடியும். சுற்றுச்சூழல் துறைக்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் தமிழக அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் அனுப்பி இருக்கிறது. இரண்டு கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன இன்னொரு கூட்டம் நடைபெற இருக்கிறது. விரைவில் அதற்கான அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2000 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப. தங்கவேலன்.

திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-ல் இந்தப் பணி தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் தெரிவித்திருக்கிறார்கள். இதில் டெண்டர் விடுவதில் காலதாமதம் ஆகிற காரணத்தினால் இப்போது போக்குவரத்திற்கு இலாயக்கற்ற பகுதிகளைச் சீரமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உலக வங்கியின் மூலமாக நிறைவேற்றப்படும் என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். உலக வங்கியிலிருந்து நமக்கு நிதியாதாரம் கிடைப்பதிலே சற்று காலதாமதம் ஆகிறது என்பது உண்மைதான். அதுவரையில், கிழக்குக் கடற்கரைச் சாலையில் சீரழிந்து இருக்கக்கூடிய அல்லது சீர்கெட்டு இருக்கக்கூடிய பகுதிகளை மேம்படுத்துவதற்காகத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அது விரைவில் நிறைவேறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் முதல் நாகப்பட்டினம் வரை இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை திட்டத்தின் இரண்டாவது பணி தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே சீர்காழி, நாகூர், நாகப்பட்டினத்திற்கான புறவழிச்சாலையும் சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல, ஒவ்வொரு முறையும் கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கப்படும்போதும் சுற்றுப்புறச்சூழல் என்று சொல்லி சில தொண்டு நிறுவனங்கள், அன்னியநாட்டு உதவிகளைப் பெறக்கூடிய நிறுவனங்கள், வேண்டுமென்றே இதில் வந்து தலையிட்டு குழப்பங்கள் விளைவிக்கின்றன. இந்தத் தொண்டு நிறுவனங்கள் குறித்து ஒழுங்குமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தப் புறவழிச்சாலை திட்டமும் இந்தத் திட்டத்திலே இணைக்கப்பட்டிருக்கிறது. நாகூர் இருக்கிறது, நாகப்பட்டினம் இருக்கிறது, சீர்காழி இருக்கிறது. எனவே, அதுவும் இந்தத்

திட்டத்தோடு சேர்ந்து நிறைவேற்றப்படும். சுற்றுச்சூழலைப் பொறுத்தவரையில், ஒரு திட்டவட்டமான முடிவு உருவாக்கப் பட்டிருக்கிறது. அதை நம்முடைய அரசும் பின்பற்றித்தான் ஆக வேண்டும். C.R.Z. *1, 2, 3,* என்று பகுதி இருக்கிறது. அதிலே C.R.Z. என்று சொல்லக்கூடிய முதல் பகுதியில் சாலைகளோ, கட்டடங்களோ அமைக்கக் கூடாது என்று திட்டவட்டமாக சட்டம் இருக்கிறது. ஆகவே, சில இடங்களில் இந்தச் சாலை C.R.Z. *1*-லே வருகிறது. அதற்காகத்தான் சுற்றுப்புறச்சூழல் துறையினுடைய அனுமதியை நாம் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. அதுகுறித்து நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *573*, திரு. குத்தாலம் பி. கல்யாணம் மற்றும் திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

573—

பாலம் கட்டுதல்

***37714—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :**

திரு. கோ. மோகனதாசன்:

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், அரும்பாக்கம்-திருவிளையாட்டம் கிராமங்களை இணைக்கும் வீரசோழன் ஆற்றுப் பாலம் பழுதடைந்து போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகப் பாலம் பழுதுநீக்கப்படவோ அல்லது மாற்றுப் பாலம் கட்டவோ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி பாலத்தின் தற்காலிக பழுதுநீக்கப் பணி ரூ. *3.08* இலட்சத்திற்கு குனைட்டிங் (Gunneting) மூலம் பழுது நீக்கம் செய்ய தனி மதிப்பீடு ஒப்புதல் அளித்து ஒப்பந்ததாரருக்கு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்காலிக பழுதுநீக்கும் பணி ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம், பொதுவாக, குத்தாலம் பகுதியையும் பூம்புகார் பகுதியையும் இணைக்கிற ஒரு பெரிய பாலம். இதன் வழியாகத்தான் புதுவை மாநிலத்திலே இருக்கின்ற காரைக்கால் பகுதிக்கு குறைந்த தூரத்திலே செல்ல முடியும். அதேபோல, பொறையார், சங்கரமந்து வழியாக செம்பனார்கோவில் வந்து மயிலாடுதுறைக்கு குறைந்த தூரத்திலே செல்ல வசதியாக உள்ள பாலம். எனவே, இந்தப் பால வேலை தொடங்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நான் இரண்டு தினங்களுக்கு முன்பு சென்று பார்த்திருக்கிறேன். இன்னும் தொடங்கப்படவில்லை. எனவே, அந்தப் பாலத்தினுடைய அவசியம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இந்த ஒரு மாத காலத்திற்குள் பணி முடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி ரூ. *3.08* இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, குனைட்டிங் (Gunneting) என்ற ஒரு புதிய முறையின் மூலமாக அந்தப் பாலத்தைச் செப்பனிடுவதற்கு ஒப்பந்தம் பெறப்பட்டு பணி வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இன்னும் பணி தொடங்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார். உடனடியாக அதுகுறித்து அறிவுறுத்தப்பட்டு, பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, இந்தப் பாலத்தைப் புதிய பாலமாக மாற்றிக் கட்டுவதற்கும் நாம் நபார்டுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். *57* இலட்சம் ரூபாயில் அதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. மோகனதாசன்.

திரு. கோ. மோகனதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பாலம் இடிந்துவிட்ட காரணத்தினாலே, அந்தப் பகுதியில் இருக்கின்ற திருவிளையாட்டம் உயர்நிலைப் பள்ளிக்கு *15* ஊர்களுக்கும் மேற்பட்ட இடங்களிலிருந்து பள்ளி மாணவர்கள் வந்து போகின்ற நிலை பாதிக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே பேருந்து

[2000 மே 9

செல்லமுடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிட்டது, ஆறுமாத காலமாக. அதுமட்டுமல்லாமல், அந்த இடத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுப் பாலம் அமைப்பதற்காக *57* இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு நபார்டுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விரைவிலே அந்தப் பாலத்தை முடித்தால்தான் அந்தப் பகுதியில் இருக்கின்ற கிராமங்களிலே இருக்கின்றவர்கள், நம்முடைய குத்தாலம் கல்யாணம் அவர்கள் சொன்னதுபோல, புதுவை மாநிலத்திற்கும், அதேபோல் தரங்கம்பாடி வழியாக நாகப்பட்டினம் செல்வதற்கும் வசதியாக ஒரு நல்ல சாலை. எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அதை விரைவிலே ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் செம்பனார்கோவில்-நல்லாடை சாலையிலே அமைந்திருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட செங்கல் வளைவு பாலம் பழுதுபட்டிருப்பது உண்மை. கனரக வாகனங்கள் அதுவழியாகச் செல்லாமல் மாற்றுப் பாதையிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே சிருந்துகளும் இருசக்கர வாகனங்களும் போவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்றாலும் பழுது பார்ப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. டெண்டர் விடப்பட்டிருக்கிறது. பணி விரைவில் முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *574*, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

574—

கூட்டுறவு வங்கி

***22977—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், நல்லவன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து புதியதாக பண்டிதப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

2000 மே 9]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை வட்டம், நல்லவன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, பண்டிதப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மணிவர்மா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *15* ஊராட்சிகளுக்குட்பட்ட 40-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டதுதான் நல்லவன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி. வேளாண்மை இடுபொருட்களான உரம், யூரியா போன்றவற்றை வழங்குகின்றபோது விவசாயிகள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, இருபதுக்கும் மேற்பட்ட கூட்டுறவுக் கடைகள் இருக்கின்றன. ரேஷன் பொருட்கள் ஒன்றாம் தேதி முதல் *15* ஆம் தேதி வரையில் கொடுக்கின்ற நிலைமையில் நிர்வாகத்தினர் *15* ஆம் தேதி வரைக்கும் கொடுக்கின்றார்கள். ஆகவே அத்தியாவசியப் பொருள்களை மக்கள் பெறுவ்தற்கு முழு காலதாமதம் ஆகின்றது. அதன் காரணத்தினால், பண்டிதப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தனியாகப் பிரித்து தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அல்லது உடனடியாக ஒரு கிளை வேளாண்மை வங்கியாவது தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், நல்லவன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை *31-3-1999*-லே நூறு இலட்சம் ரூபாய் இருக்கிறது. அதிலே தவணை தவறிய கடனாக ரூ. *15.86* இலட்சம் வசூலாகி இருக்கிறது. *31-3-2000*-ல் கடன் நிலுவை *149* இலட்சம் ரூபாய் இருக்கிறது. அதிலே, தவணை தவறிய கடன் *16* இலட்சம் ரூபாய் வசூலாகி இருக்கிறது. நல்லவன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி *19* வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. இதிலே நபார்டு நிறுவனம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க வேண்டுமானால் ஐயாயிரம் ஏக்கர் நிலம் விவசாயம் செய்ய

[2000 மே 9

வேண்டும். ரூ. 10 இலட்சம் குறுகியகாலக் கடனாக இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே அவர்கள் ஒரு சட்டம் வகுத்திருக்கிறார்கள். இப்போது சட்டமன்றத்திலே இந்த ஆண்டு நாம் அறிவித்திருக்கிறோம். புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆங்காங்கே தொடங்கப்பட வேண்டுமென்று. ஐயாயிரம் ஏக்கரைக் குறைத்து 2,500 ஏக்கராகவும், 10 இலட்சம் குறுகியகாலக் கடனை 5 இலட்சம் ஆகவும் குறைத்து, நபார்டு வங்கிக்கு நாம் அனுப்பி இருக்கிறோம். நபார்டு அனுமதி கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த நல்லவன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரிக்கக்கூடிய சாத்தியக்கூறு அப்போதுதான் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, விரைவாக அந்த அனுமதியைப் பெற்று திறந்து தரலாம். ஆனால், முயற்சி எடுக்க வேண்டும். இங்கே ஏற்கெனவே கடந்த ஆண்டு 19 இடங்களிலே கேட்டார்கள்; 19 இடங்களிலும் அனுமதி தரப்பட்டு இருக்கிறது. ஆனால், 14 இடங்களிலே தான் தொடங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அந்தப் பகுதி கிராம மக்களுடைய சார்பில் ஒரு மனுவை தருவார்களேயானால், அதை நபார்டுக்கு அனுப்பி அனுமதியைப் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 575, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

575—

கூட்டுறவுச் சங்கம்

***22608—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றை இலாபகரமாக இயக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

2000 மே 9]

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பால் வழங்கும் சங்கங்கள் இயங்கவில்லை.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் பால் வழங்கும் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை நட்டத்திலே இயங்கி வருகின்றன? அவற்றை இலாபகரமாக நடத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்னென்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் 585 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 53 சங்கங்கள் மட்டும் நட்டத்தில் இயங்கி வருகின்றன. நட்டத்தில் இயங்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானிய விலையில் பால் பரிசோதனைக் கருவி, பால் கேன்கள் மற்றும் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்குத் தாட்கோ திட்டத்தின் மானியத்தின் மூலம் கறவை மாட்டுக் கடன்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் கறவை மாட்டுக் கடன்கள், செயற்கைக் கருவூட்டல் மூலம் ஈன்ற கறவையினக் கன்றுகளுக்கு இலவசத் தீவனம் ஆகியவை வழங்கப்பட்டு சங்கங்கள் இலாபகரமாக இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நட்டத்தில் இயங்கும் சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்து இலாபகரமாக இயங்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 576, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

576—

வாடகைக் குடியிருப்புகள்

***29199—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சி.ஐ.டி. நகர், மாடல் அவுஸ் ரோடு, மாடல் அவுஸ் லேன் ஆகியவற்றில் வாடகைக்குக் குடியிருப்போருக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமானியப்பட்ட மக்கள்தான் குடியிருந்து வருகிறார்கள். இதற்கு முன்னரும் நம்முடைய வீட்டு வசதி வாரியம் தமிழ்நாட்டில் வேறு பல பகுதிகளில் குடியிருந்தவர்களுக்கு மலிவான விலையில் அந்த வீடுகளை உரிமையாக்கிய முன்னுதாரணங்கள் நிறைய இருக்கின்றன. எனவே, இந்த விஷயம் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய இல்லை என்ற பதிலை மறுபரிசீலனை செய்து, குடியிருப்பவர்களுக்கே அந்த வீடுகளை உரிமையாக்குகிற கொள்கை முடிவு எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வாரியம் அதை நிராகரித்துவிட்டது. இப்போது குடியிருப்பவர்கள் அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தால், அரசு அதில் எந்தவித நடவடிக்கையும் இப்போது எடுப்பதற்கு முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு உரிமையாக்குவதற்கு அரசு உடன்படவில்லை என்பதால்தான் வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். உரிமையாக்குவதற்கு மாநில அரசு உடன்படுமேயானால் வழக்கை வாபஸ் பெறுவதில் பெரிய சிக்கலோ, நெருக்கடியோ இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு உரிமையாக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க முன்வந்தால் வழக்கு வாபஸ் பெறப்படும். அதற்குரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நகரத்தின் மையப் பகுதியாகும். அவை மிக மதிப்பு வாய்ந்த சொத்துக்களாக இருக்கின்றன. கடன் வழங்குகின்ற நிறுவனத்திடம் நாங்கள் அதை அடமானம் வைத்துக் கடன் பெறக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் வாரியம் இவற்றை எல்லாம் பரிசீலித்து எதிர்காலத்திலே அதைப்பற்றி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 577, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

577—

கடனுதவி

***21295—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட கடனுதவி மூலம் நிறுவனங்கள் பெற்றுள்ள நிதி அளவு எவ்வளவு?

(ஆ) இதன்படி பெற்ற கடன் திருப்பிச் செலுத்தப்படாமல் நீண்டகால நிலுவையாக எவ்வளவு தொகை உள்ளது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை தங்களுடைய அனுமதியோடு இங்கே வழங்க விரும்புகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) 1994 ஆம் ஆண்டு வரை நம்முடைய சிறு தொழில் துறை மூலமாக வழங்கப்பட்ட மாநில தொழில் கடன்களும் - State Aid Loans—மற்றும் ஊரக வளர்ச்சிக் கடன்களும் மொத்தம் அசல் ரூ. 6,66,37,340; அதிலே நீண்ட காலமாக திருப்பிச் செலுத்தப்படாமல் இருப்பது ரூ. 2,90,76,768.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு வாங்கிய கடனைத் திருப்பிச்

செலுத்த இயலாத அளவிற்கு அந்த சிறு தொழில்கள் நெருக்கடிக்கு ஆட்பட்டு இருப்பதற்கு என்ன காரணம் என்பதுபற்றி ஆய்வு செய்தார்களா? அப்படி ஆய்வு செய்திருந்தால், தொழிலைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் அந்தக் கடனைத் திருப்பி வசூலிப்பதற்கான உதவியை மீண்டும் அந்தத் தொழிற்சாலைகளுக்கு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல துறையின் மூலமாக, மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக வழங்கப்பட்ட கடன்களிலே ஏற்பட்ட நிலுவையின் காரணமாக இந்தக் கடன்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. சிறுதொழில்களுக்காக வழங்கப்படுகிற கடன் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக வழங்கப்படுகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் வழங்கப்பட்ட கடன், 1996 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நாம் கடனாக வழங்கியிருப்பது 827 கோடியே 36 இலட்சம் ரூபாய்; அரசு திரும்ப வசூலித்திருப்பது 1229 கோடியே 98 இலட்சம் ரூபாய். பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்து வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு கடன் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து 2000 வரை, இந்த அரசு வழங்கியிருக்கிற வங்கிகளிடமிருந்து பெற்று வழங்கியிருக்கிற கடன் தொகை 27,039.41 இலட்சம் ரூபாய். அதே சமயத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை கடந்த ஆட்சிக் காலத்திலே பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக சிறு தொழில்களுக்காக பெற்றுத் தந்திருக்கிற கடன் தொகை 15,329.86 இலட்சம் ரூபாய். ஆகையால் இன்றைக்கு இருக்கிற நிலவரத்தின்படி, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு தொழில்களுக்காகக் கடன் வாங்கித் தருகிற நடவடிக்கையிலே காட்டுகிற அதே வேகம், ஒரு குழு அமைத்து அதன் மூலம் கடனைத் திரும்ப வசூலித்து, வங்கிகளுக்குத் திரும்ப ஆர்வமாகக் கட்டப்படுகிற காரணத்தால், இந்தியாவிலேயே இந்த ஆண்டு பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே தமிழகம் முதல் நிலை பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி நீண்ட பதில் அளிக்கும் நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுத்து மூலமாகவே பதில் அளித்து விடலாம்.

வினா எண் *578*, திரு. நாசர், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

578—

கயிறு தயாரித்தல்

***29695—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வெள்ளையம்பாளையத்தில் புளிச்சநாரைப் பயன்படுத்தி கயிறு தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், வெள்ளையம்பாளையத்தில் புளிச்சநாரைப் பயன்படுத்தி கயிறு தயாரிக்கும் தொழிற்கூடம் நிறுவுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இந்த வினா எழ வாய்ப்பில்லை.

திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கத்தாழையிலிருந்து புளிச்சநார் உற்பத்தி அதிகமாகச் செய்யப்படுகிறது. இந்தப் புளிச்சநாரைத் தனியார்கள் வாங்கி, கயிறு நெய்து, அதை மும்பை, கல்கத்தா போன்ற பகுதிகளுக்கு அனுப்புகிறார்கள். எனவே, இந்தப் புளிச்சநாரைக் கொண்டு கயிறு உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை அரசின் மூலமாக வெள்ளையம்பாளையத்தில் தொடங்கி, இந்தப் புளிச்சநாரை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு அரசு உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மே 9

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, இந்தத் தொழிலைச் செய்ய பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக தனியாகக் கடன் பெறலாம் அல்லது வங்கிகளின் மூலமாக கடன் பெற தனியார் விரும்பினால் அரசு முழு ஒத்துழைப்பு தரும். சேலம் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் நிறைய கூட்டுறவு கயிறு திரிக்கும் சங்கங்கள் இருக்கின்றன. அதைப்போன்று இதற்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் வைத்தால் அதன்மூலமாக அங்கிருக்கின்ற உறுப்பினர்கள் பயன்பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *579*, அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 580, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

580—

மீன்பிடி உரிமம்

27734*—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடி உரிமத்தை மீன்வளத் துறையிடம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு நீர்நிலைகளிலே மீன்கள் வளர்க்கப்படுமானால் கிராமங்களுக்கு பெரிய வருவாய் வருவதற்கான ஒரு வாய்ப்பிருக்கிறது. இப்போது கிராமப்புறங்களில் ஏற்படக்கூடிய தகராறுகளுக்கெல்லாம்

2000 மே 9]

அடிப்படைக் காரணமாக இருப்பது ஏரி-வயலும், ஏரி-மீனுமாகத்தான் இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் நெறிமுறைப்படுத்த, ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு அத்தகைய நீர்நிலைகளை மீன்வளத் துறையின் மூலமாக நெறிமுறைப்படுத்தி அதனுடைய வருவாய் முழுக்க முழுக்க இந்தக் கிராமத்திலே உள்ள அனைத்து மக்களுக்கும் பயன்பெறுகிற மாதிரி நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன். மேலும் இந்த உள்ளூர் நீர்நிலைகளிலே இறால், கட்லா போன்ற உயர்ந்த மீன் குஞ்சுகளை வாங்கித் தந்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்நிலைகளைப் பொறுத்தவரையில், அவை எந்தெந்த துறைகளுக்குச் சொந்தமானதோ, அந்தந்த துறைகளே அவற்றை ஏலம் விடுகின்றன. மீன் வளத் துறைக்குச் சொந்தமானது, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது, வருவாய்த் துறைக்குச் சொந்தமானது, வனத் துறைக்குச் சொந்தமானது போன்ற நீர்நிலைகள் மீனவர்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறுகிற வகையில்தான் ஏலம்விடப்படுகின்றன. ஊராட்சிக்குச் சொந்தமான நீர்நிலைகளை பொது ஏலம்விட்டு, அந்தப் பொது ஏலத்தில் மீனவர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏலத்தில் பங்கு பெற்றால், அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: அந்த வருவாயை ஊராட்சி மன்றங்களே அந்தக் கிராமப்புற வளர்ச்சிக்காக ஏற்றுக்கொள்கின்றன. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் இதுவும் பொது ஏலம் விடப்பட்டு யார் வேண்டுமாலும் பயன்பெறலாம். மீனவர்களுக்கு இதில் முன்னுரிமை கிடையாது. யார் என்றாலும் பயன்பட்டுக்கொள்ளலாம். இப்படி நடத்தப்படுகிறது. நகராட்சியும், அதுபோல அறநிலையத்துறையும் நடத்துகின்றன. இப்படி ஒரு விதிமுறை ஏற்படுத்தி இந்த நீர்நிலைகள் எல்லாம் ஏலம் விடப்படுகின்றன. மீன் வளத் துறையிலிருந்து மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து மீனவர்களுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் வழங்கி,

நீர்நிலைகளில் அதை விட்டு வளர்த்து மீனவர்கள் பங்குபெற இந்தத் துறை நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) பரமக்குடி தொகுதியில் கண்மாய் மற்றும் கால்வாய் உடைப்புகளை சரி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. திசைவீரன் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. உ. திசைவீரன்.

திரு. உ. திசைவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி தொகுதியில் ஏற்பட்ட கண்மாய் மற்றும் கால்வாய் உடைப்புகள் சரி செய்யப்பட வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பரமக்குடி தொகுதியில் 1999 ஆம் ஆண்டில் வெள்ளத்தால் உடைப்புகள் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட கண்மாய்கள் மற்றும் கால்வாய் ஏதும் இல்லை.

திரு. உ. திசைவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்தேன். இதிலே அதிகாரிகள் உண்மைக்குப் புறம்பான பல்வேறு கருத்துகளை – எந்தவித கண்மாய்களும் உடைக்கப்படவில்லை என்று இங்கே கூறியிருக்கிறார்கள். இதை

நினைத்து, அதிகாரிகளுடைய அலட்சியப் போக்கை நினைத்து, சிரிப்பதா அல்லது தொகுதி மக்களுடைய நிலைகுறித்து அழுவதா என்றே எனக்குப் புரியவில்லை. கண்மாய்கள் மற்றும் கால்வாய்கள் உடைக்கப்பட்டவுடனே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அதுபோல மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்களும் மூவரும் நேரடியாக வந்து அந்த இடங்களைப் பார்வையிட்டார்கள்.

நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆணையிட்டு அந்தச் சாலைகள் முழுவதும் செப்பனிடப்பட்டன. ஆனால் இதுவரையில் சுமார் 50-க்கு மேற்பட்ட கண்மாய் கால்வாய்கள் அடைக்கப்படவில்லை. முக்கியமாக ஆற்றின் கரை உடைக்கப்பட்ட பகுதிகள் மட்டும் மாவட்ட நிருவாகம் நேரடியாகத் தலையிட்டு பொது மக்களுடைய பங்கோடு ஆற்றின் கரைகள் இப்போது அடைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, போகலூர், நயினார்கோயில் ஒன்றியங்களிலே 50-க்கு மேற்பட்ட கண்மாய்கள் மற்றும் கால்வாய்கள் உடைக்கப்பட்டு இன்றைக்கும்கூட அவை அடைக்கப்படாமல் வலகரையோடு நிற்கின்றன. இதனால்தான் இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலே குடிநீர் பஞ்சம்கூட வந்துவிட்டது என்று மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதில் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, மறுபரிசீலனை செய்து அதிகப்படியான நிதிகளை ஒதுக்கி இந்த நிதியாண்டிலே, இப்போதே அவற்றை அடைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு confusion ஏற்பட்டிருக்கிறது. காரணம் கேட்டால், 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட கண்மாய்கள் உடைப்புகளை சரி செய்யவில்லை என்று சொன்னார். அதைத்தான் அதிகாரிகள் 1999 ஆம் ஆண்டு உடைப்பு ஏற்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் 1998 ஆம் ஆண்டு உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. 107 கண்மாய்கள் உடைந்திருக்கின்றன, 9 சப்ளை சேனல்கள் உடைந்து இருக்கின்றன. வைகை ஆற்றிலே 6 உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக கிட்டத்தட்ட 122 வேலைகள் 1998 ஆம் ஆண்டு இறுதியிலே ஏற்பட்டதை 1999 ஆம் ஆண்டோடு மாண்புமிகு உறுப்பினர் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார். பிரச்சினை அதுதான். இதிலே

பல இடங்களில் வேலைகள் முழுமையாக செய்யப்படவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். காரணம் அந்த அவசரக் காலத்திலே அங்கே ஏற்பட்ட நிலையோடு சில வேலைகள் முடிந்துவிட்டன, சில வேலைகளை நிறைவேற்றி இருக்கிறோம். மிச்சம் அங்கே இருக்கிறது. அதற்குக் காரணம், வெள்ளக் காலங்களில் ஏற்படுகிற இப்படிப்பட்ட விபத்துகளைத் தடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் நிதியினைத் தரவேண்டும். அந்த வகையிலே இன்னும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முழுமையான பணம் வராத காரணத்தால்தான் அவசரக் காலத்தில் செய்தவைகளோடு சில வேலைகள் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நினைவூட்டுக் கடிதங்கள் பொதுப் பணித் துறை மூலம் எழுதப்பட்டிருக்கின்றன. விரைவில் அந்த நிதியை மாவட்ட ஆட்சித் தலைவர் தருவார் என்று எதிர்பார்க்கிறோம். வந்தால் மீதி இருக்கிற வேலைகளை முடித்துவிடலாம்.

(ஆ) காவேரிப்பட்டினம் – கிருட்டிணகிரி தேசிய நெடுஞ்சாலையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம் பழுதடைந்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி.எஸ். வெங்கடேசன் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ``காவேரிப்பட்டினம் - கிருட்டிணகிரி தேசிய நெடுஞ்சாலையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுதடைந்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தேசிய நெடுஞ்சாலை எண் *7*-ல் கி.மீ. *103/2*-ல் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே *1952* ஆம் ஆண்டு கட்டப்பட்ட பாலத்தின் மேல்பூச்சு (Weathering Coat) மற்றும் கிருட்டிணகிரி பக்கம் உள்ள தாங்கு கற்கள் (Revetment) ஆகியவை சென்ற ஆண்டு பெய்த கனமழையின் வெள்ளப் பெருக்கால் பழுதடைந்துள்ளன. இப்பழுதடைந்த பகுதிகளை செப்பனிட ரூ. *7.30* இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டவுடன் விரைவில் இப்பணியை ஆரம்பிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-35

திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் *1952* ஆம் ஆண்டு கட்டப்பட்டப் பாலம். அன்றைக்கு அந்தப் பாலத்தினுடைய தகுதி *15* டன்கள் என்று கணக்குப்போட்டு கட்டியுள்ளார்கள். ஆனால் இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலை *7* என்று ஆனபின்னால், கிட்டத்தட்ட *40* டன்கள் அளவுக்கு உள்ள கனரக வாகனங்கள் அதன்மீது சென்றுக் கொண்டிருந்த காரணத்தினாலே, கடந்த ஆண்டு பெய்த மழையின் காரணமாக பாலத்தின் வடக்குப்புறம், கீழே கருங்கல்லால் கட்டப்பட்டு இருக்கின்ற detaining walls சரிந்து ஒரு பக்கம் சரிந்த நிலையிலே இருக்கிறது. அதை உடனடியாக சரிசெய்து கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலே weathering coat அதாவது மேல் பூச்சு ஆங்காங்கே உடைந்து விரிசல் ஏற்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக சரிசெய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதோடு, பாலத்தின் அருகிலேயே மணல் அதிகமாக வாரக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே அந்தக் காலத்திலே கருங்கல்லால் கட்டப்பட்ட அந்தப் பாலத்தினுடைய கம்பங்கள் சிறிது சிறிதாக சாய்ந்த நிலையிலே இருக்கின்றன. மிகப்பெரிய பாலம். அதைப் பழுதுபார்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதைச் சீக்கிரம் பழுதுபார்த்துக் கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[2000 மே 9

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 7 இல் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள இந்தப் பாலம், சென்ற முறை ஏற்பட்ட கன மழையின் காரணமாக சேதாரம் அடைந்துள்ளது உண்மைதான். அந்தச் சேதாரத்தைச் சரி செய்வதற்கு ரூ. 7.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய தரை வழி போக்குவரத்துத் துறை அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி கிடைத்தவுடன் இது சரிசெய்யப்படும். தேவைப்படுமானால் இந்தப் பாலம் புதுப்பித்துக் கட்டப்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்படும்போது, அதுவும், மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை விலங்குகள் நல வாரிய அலுவலகம் டெல்லிக்கு மாற்றப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், Animal Welfare Board of India என்ற அலுவலகத்தை சென்னையிலிருந்து டெல்லி மாநகரத்திற்கு மாற்ற மத்திய அரசு உத்தரவிட்டு இருப்பது குறித்து, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டிலிருந்து, நம்முடைய தலைநகரான சென்னையிலே Animal Welfare Board of India என்கிற நிறுவனம் அலுவலகத்தை வைத்து மிகச் சிறப்பாக, அகில இந்தியாவிற்கே நம்முடைய சென்னையில்தான் இதனுடைய அலுவலகம், பல ஆண்டுகளாக நம்முடைய சென்னை மாநகரத்திலே நடந்துகொண்டு இருக்கிறது. ருக்மணிதேவி என்கிற ஒரு பெண்ணால் ஆரம்பிக்கப்பட்ட அந்த நிறுவனம் மிகச் சிறப்பாக பணியாற்றி, இப்போது 1 கோடி ரூபாயிலே திருவான்மியூரிலேகூட அவர்கள் பெரிய கட்டடத்தை எல்லாம் கட்டி இருக்கிறார்கள். அது SPCA போன்று ஒவ்வொரு மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிறுவனங்களிலே பல சேவைகளை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிற அந்த அலுவலகத்தை இப்போது மத்திய அரசு

2000 மே 9] [திரு. சி. ஞானசேகரன்]

திடீரென்று டெல்லிக்கு மாற்றுவதற்கு உத்தரவிட்டு, அதை எடுத்துச் செல்ல இருக்கிறார்கள் என்று நேற்று முந்தின நாள் Hindu பத்திரிகையில் மிக விவரமாக அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தார்கள். நான் மாண்புமிகு முதல்வரை கேட்டுக் கொள்வதெல்லாம், எப்படியாவது—1962ஆம் ஆண்டிலிருந்து, நம்முடைய சென்னையில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த நிறுவனத்தை திடீரென்று டெல்லிக்கு மாற்றவேண்டிய அவசியம் என்ன?—இதில் முதல்வர் அவர்கள் தலையிட்டு, மீண்டும் பழையபடி சென்னையிலேயே அந்த அலுவலகம் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள மத்திய அரசு விலங்குகள் நல வாரியத்தின் பணியாளர் நலச் சங்கச் செயலாளர் 18-4-2000 ஆம் நாளிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில் அந்த வாரியத்தின் சென்னை அலுவலகத்தை டெல்லிக்கு மாற்றுவதற்காக எழுத்து மூலம் மத்திய அரசால் அனுப்பப்பட்டுவிட்டது என்றும், அப்படி மாற்றுவது இந்த வாரியத்தின் செயல்பாட்டையும், 20, 30 ஆண்டுகளாக சென்னையில் இருந்து பணியாற்றி வரும் அதன் பணியாளர்களையும் பெரிதும் பாதிக்கும் என்றும், மத்திய அரசின் இந்த முடிவினை தடுத்து நிறுத்திட வேண்டுமென்றும் கோரி இருந்தார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில், 27-4-2000 அன்று தமிழக அரசின் சார்பில், இந்தியப் பிரதமருக்கும், அந்தத் துறை அமைச்சர் திருமதி மேனகா காந்தி அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேர்முகக் கடிதங்கள் எழுதி மத்திய அரசு எடுத்துள்ள இந்த முடிவை உடனடியாக கைவிட வேண்டும் என்று FAX மூலமாகவே கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதிய அந்தக் கடிதத்திற்கு மே திங்கள் 2 ஆம் நாளன்று மத்திய அமைச்சர் திருமதி மேனகா காந்தி அவர்கள் அனுப்பிய பதிலில் சென்னையில் உள்ள விலங்குகள் நல வாரிய அலுவலகத்தை டெல்லிக்கு மாற்றப்போவதில்லை என்றும், டெல்லியில் தனியாக வேறொரு அலுவலகத்தை புதிதாக அமைத்துக் கொள்வதாகவும், சென்னையில் உள்ள பணியாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்கள். எனவே, இதில் எந்தவிதமான பதற்றமான நிலைக்கும் இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரனுக்கு எப்போதுமே பதற்றம்தான். அதனால் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (சிரிப்பு)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். அக்குழுவின் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து மூன்றாவது முதல் இருநூற்று ஐம்பத்து ஏழாவது வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக அளிக்கிறேன்.

முற்பகல் 10-40

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், அக்குழுவின் தலைவர் திரு. வ. வேலுசாமி.

திரு. வ. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து இரண்டாவது முதல் நூற்று இருபத்து ஆறாவது வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

2000 மே 9]

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

``2000 ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் `ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் `இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தத்) சட்டமுன்வடிவு, 2000

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் 'முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2000–2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

(இ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம்

(அ) கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2000-2001ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 124,74,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1711, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கையால் நெய்யப்படும் தரைக் கம்பளத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 124,74,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1441, திரு. நா. பெரியசாமி.

*திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, `பெருந்துறையிலிருந்து கேரள மாநிலத்திற்கு விற்பனை வரி செலுத்தப்பட்ட எண்ணெய் கொண்டு செல்லும் கோவை வியாபாரிகள் கேரள மாநில எல்லையில் உள்ள சோதனைச் சாவடியில் டிரான்சிட் பாஸ் என்ற பெயரில் துன்புறுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4774, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அனைத்து சமையல் எண்ணெயின் மீதும் விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1400, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் பதிவுச் சான்று பெற்று சைக்கிள் சீட் கவர்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள சுமார் 100 சிறிய தொழில் தயாரிப்பாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வெளி மாநில மற்றும் உள்ளூர் விற்பனை வரியை முற்றிலும் விலக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1823, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, `கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2025, திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர். ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, `விற்பனை வரிகள் தொடர்பான படிவங்கள் வணிகர்களுக்குக் காலதாமதமின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3446, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, `விவசாய பம்பு மற்றும் கைப்பம்புகளுக்கு பயன்படுத்தப்படும் தோலினால் ஆன வாஷர்களுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1502, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, `விவசாய இடுபொருள்களுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2370, திரு. எ. தெய்வநாயகம்.

[2000 மே 9

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1979*, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நலிவுற்ற நூற்பாலைகளைக் காப்பாற்ற அந்நூற்பாலைகள் செலுத்த வேண்டிய வரியினை தவணை முறையில் செலுத்த அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3204*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விற்பனை வரி சம்பந்தமான படிவங்களை எளிமையாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *4015*, திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நுழைவு வரியினை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2000 மே 9] [திரு. பி. ஆர். சுந்தரம்]

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2929*, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் வேளாண் விளைபொருட்களின்மீது விதிக்கப்படும் வரியினை முழுமையாக நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3610*, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உற்பத்தியாகும் ரப்பர், தேயிலைப் பொருட்களுக்கு வரிச் சலுகைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3114*, திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2000 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *5045*, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாண்டிச்சேரி மாநிலம் காரைக்காலில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு வரி விலக்கு கொடுப்பதால் அனைத்துத் தொழில் முனைவர்களும் அங்கு சென்று தொழில் தொடங்கும் நிலையினைப் போக்க நாகையில் தொழில் தொடங்குவோருக்கு 5 வருடம் வரி விலக்கு அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *764*, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்திய முறை மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.124,74,19,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 9 – மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 9–மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.178,78,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2000 மே 9] [திரு. ஆலடி அருணா]

முற்பகல் *10-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1723*, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைச்சர்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் மனுக்கள்மீது எடுத்த நடவடிக்கைகள் குறித்த விவரங்களை உடனுக்குடன் உறுப்பினர்களுக்கு அளிக்க ஏதுவாக அமைச்சர்களுக்கும் கூடுதல் உதவியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1950*, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *4778*, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாநில தலைமை அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்து, நிருவாகக் குறைபாடுகளைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1418*, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1833*, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாநில அமைச்சர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட தலைநகரங்களில் மக்கள் குறை தீர்க்கும் முகாம்களை நடத்த வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2065*, திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடமும், துறைச் செயலாளர்களிடமும் கொடுக்கும் மனுக்கள் மீதான நடவடிக்கையை 10 நாட்களுக்குள் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1529*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கலந்துகொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1226*, திரு. க. மணிவர்மா.

திரு. க. மணிவர்மா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர்களுக்கு அலுவலகம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3460*, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2376*, திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எ. தெய்வநாயகம்] [2000 மே 9

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3216*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் துறைகள் குறித்த மனு நீதி நாள் முகாம்களை மாவட்டம் தோறும் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3999*, திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3720*, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கும் புகார் மனுக்கள்மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளின் விவரத்தினை உறுப்பினர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2000 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2775*, திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,78,72,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 11 – மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் *11*—மாவட்ட நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 577,55,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் *1707*, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு பழைய கட்டடம் என்பதால் அதை அருங்காட்சியகமாக மாற்றி விட்டு, மாவட்ட ஆட்சியருக்கு புதிய குடியிருப்பு சத்துவாச்சாரியில் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1958*, திரு. நா. பெரியசாமி.

*திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட அளவில் நடைபெற்றுவரும் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய 45 நாட்களுக்கு ஒருமுறை சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் ஆணையத்தில் அங்கீகரிக்கப் பட்ட, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டி விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4788, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி பிரச்சினைகளைத் தீர்க்க ஏதுவாக சட்ட ஆலோசனை வழங்க, சட்ட வல்லுநர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1827, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டத்தில் மாதம் தோறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2075, திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாலுகா தலைமை அலுவலகங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களையும் தலைமைச் செயலகத்துடன் கணினி மூலம்

இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1544, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் நிறைவேற்றப் படும் தீர்மானங்களை உடனுக்குடன் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1218, திரு. க. மணிவர்மா.

திரு. க. மணிவர்மா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட நிர்வாகத்துடன் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3462, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2378, திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1472, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அனைத்து மாவட்டங்களிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களின் பரப்பை சரியாகக் கண்டறிந்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து', விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3211, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட ஆட்சித் தலைவரை பொதுமக்கள் தினந்தோறும் நேர்காணுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4037, திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு குறை தீர்க்கும் அலுவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3802, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களைக் கொடுக்கும்போது மனுதாரர்களுக்கு நடவடிக்கையைப் பற்றி உடனே தெரிவிப்பது பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1386, திரு. பி. வெங்கடசாமி.

THIRU B. VENKATASAMY: Hon'ble Speaker Sir, 'To discuss the need to reply immediately on the petitions sent by the MLAs by the District Administration', I move—

"That the allocation of Rs. 577,55,89,000/- under Demand No. 11—District Administration be reduced by Rs. 100/-".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2773, திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.577,55,89,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் மற்றும் மாவட்ட நிருவாகம் ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோரிக்கை எண் 9—மாநில ஆளுநர், அமைச்சர்கள் மற்றும் தலைமையிடப் பணியாளர்கள் ஆகியோரின் செலவினம் கொண்ட ஒரு கூட்டுக் கோரிக்கையாகும். இதில் மாநில ஆளுநர் அவர்களின் செலவின வருவாயும், மாநில ஆளுநர் அவர்களின் செலவினமும், சாட்டிய செலவினத்தின்கீழ் வருவதால், இத்தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் எதுவும் சட்டமன்றத்தில் வைக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகள்மீது தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏறத்தாழ 11 உறுப்பினர்கள் இன்று பேசுவதாக இருக்கின்றார்கள். காலத்தின் அருமை கருதி, தங்கள் பேச்சை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு, சில உறுப்பினர்கள் அதிகம் பேசுவதாகவும், தங்களுக்கு நேரம் கிடைக்க வில்லையென்றும் சிலபேர் குறை கூறுகின்றார்கள். அதற்கு இடமில்லாமல், அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லோருக்குமே பத்து நிமிடம்தான். மாண்புமிகு உறுப்பினர் தெய்வநாயகம் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

முற்பகல் 10-50

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம் மற்றும் மாவட்ட நிருவாகம் சார்பாக, 2000-2001ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த

@ 347 முதல் 404 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

தங்களுக்கு முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2000-2001ஆம் ஆண்டிற்கான, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைகளில் சில திருத்தங்களையும், இன்னும் சில முக்கிய வரி மாறுதல்களையும் பரிசீலித்து அறிவித்திட வேண்டுமெனக் கோருகிறேன். இப்போது இருக்கிற வரி விதிப்பு உள்ளபடியே மக்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கிறது. தமிழக அரசு நமக்கு வரிச் சலுகைகளைப் பல கட்டங்களிலே அளித்திருக்கிறது. அந்தவகையிலே, மொத்த வரிச் சலுகைகள் கிட்டத்தட்ட 670 கோடி ரூபாய் கொடுத்தாலும்கூட, வரி வருவாயிலே கிட்டத்தட்ட 7,380 கோடி ரூபாய் வரி விதிப்பிலே வசூல் செய்த பெருமையை ஈட்டித் தந்துள்ள அதிகாரிகள் பெருமக்களையும் நான் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போது இருக்கிற சூழ்நிலையில், நான் ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளின் முக்கிய பங்கான பால் உற்பத்தி, பல மாவட்டங்களிலே அபரிமிதமாக இருந்து கொண்டிருக்கிறது. பால் உற்பத்தியிலே, அவர்களுக்கு வரி விதிக்கக் கூடாது என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரையிலே, 14-11-1999 அன்று தொழில் வர்த்தக சங்கக் கட்டடத் திறப்பு விழாவிற்கு வந்து கலந்துகொண்டபோது, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, அவர்கள் நிச்சயமாக அதற்கு வரி விதிப்பு இல்லை என்று சொல்லி, உறுதியும் கொடுத்தார்கள். 2000-2001ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில், பதப்படுத்தப்பட்ட பாலுக்கு வரி விலக்கு உண்டு என தாங்கள் அறிவித்தும்கூட—அதனை நாங்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்—பட்ஜெட் பிரேரணையில் 1-4-2000 முதல் அது அமலுக்கு வரும் என்று அறிவித்திருந்தும், 1-4-2000-க்கு முன்பே, பதப்படுத்தப்பட்ட பாலுக்கு வரி உண்டு என்று சில அதிகாரிகள் அதற்கு விளக்கம் சொல்கிறார்கள். அந்த விளக்கத்தைப் பார்த்தவுடன் விவசாயிகளுக்குக் கொஞ்சம் பயமாகவே இருக்கிறது. அதை நீக்குவதற்கு அரசு முன்வந்து, 1993ஆம் ஆண்டில் இருந்தே, பதப்படுத்தப்பட்ட பாலுக்கு வரி இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. தெய்வநாயகம்] [2000 மே 9

அடுத்தபடியாக, உபரியாக உள்ள பாலை கெட்டு விடாமல் விற்பதற்காக, பால்கோவாவாகத் தயாரித்து பல இடங்களிலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பால்கோவாவிற்கு தற்போது 16 சதவிகித வரி—Schedule I, Part-E, Item-4-ன்படி விதிக்கப்படுகிறது. Sweet Stallsகளில் தயாரிக்கப்படும் பால்கோவாவிற்கு வரி விலக்கு உண்டு. இதர தயாரிப்பாளர்களுக்கு 16% வரி. எனவே, வணிகச் சின்னத்துடன் தரமான பால்கோவா தயாரிக்கும் தொழிலைத் தொடங்க யாரும் முன்வருவதில்லை. பாலுக்கு வரி விலக்கு உண்டு. ஆனால், அதிலிருந்து தயாரிக்கப்படும் பால்கோவாவிற்கு 4½ சதவிகிதம் வரி விதித்தால், தரமான பதிவுபெற்ற வணிகச் சின்னத்துடன் பால்கோவா தயாரிக்கும் தொழில்கள் உருவாகும். இதனால் அந்தத் தொழில் வளர்ந்து வேலைவாய்ப்பும் பெருகும். அரசுக்குப் புதிய கூடுதலான வரி வருவாயும் கிடைக்கும். பால் வீணாகாமல், பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள்.

அதைப்போலவே, ஐஸ் கிரீம்; பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடக்கூடிய வகையில், ஐஸ் கிரீம் தயாரிப்பவர்கள விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேதான் இருக்கிறார்கள். அதிலும், தமிழகத்திலே இந்தப் போட்டியைச் சமாளிக்கக்கூடிய தயாரிப்பாளர்கள் கொஞ்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள். அதற்குத் தற்போது 11% வரி விதிக்கப்படுகிறது. கூடுதலான வரியின் காரணமாக, சிறு ஐஸ் கிரீம் தயாரிப்பாளர்களுக்கிடையே பெரும் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது. இதனால், நேர்மையான தயாரிப்பாளர்கள் பாதிக்கப்படுவதுடன், அவர்களால் பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடக்கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைய முடியவில்லை. இப்போது, சென்னையிலேகூட தாசப்பிரகாஷ், ஜாய் போன்ற உள்நாட்டு ஐஸ் கிரீம் தயாரிப்பாளர்கள்கூட உற்பத்தியை நிறுத்திவிட்டார்கள். ஓரிருவர்களால்தான் தாக்குப் பிடிக்க முடிகிறது. ஐஸ்கிரீமை நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பதால், அவர்களிடமிருந்து வரியை வசூலிக்க முடியாமல், தயாரிப்பாளர்களே தங்கள் கையிலே இருந்து வரியைச் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. முன்பு, தங்கள் ஆட்சிக் காலத்தில் ஐஸ்கிரீமிற்கு 4 சதவிகித வரிதான் இருந்தது. பின்னர் வந்த அரசு, வரியை மிக அதிக அளவில் உயர்த்திவிட்டது. ஐஸ்கிரீம் மீதான விற்பனை வரியை 4½ சதவிகிதமாகக் குறைக்காவிட்டாலும், 8 சதவிகிதமாகக் குறைத்தால், இன்னும் அத்தொழில் வளர்ச்சிபெறும். தரமான ஐஸ்கிரீம் பொதுமக்களுக்குக் கிடைக்கும்; அரசின் வரி வருமானமும் உயரும்.

2000 மே 9] [திரு. எ. தெய்வநாயகம்]

அடுத்தபடியாக, இப்போது உணவுத் தானியங்கள் அனைத்துக்குமே, கிட்டத்தட்ட பயறு வகைகள் அத்தனைக்குமே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்டுப் பயறு வகைகள், அதாவது புஞ்சைப் பயிர் என்று சொல்வார்கள். மொச்சை, காணம் இப்படிப்பட்ட பயிர்களுக்கெல்லாம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அவை நமது நாட்டிலே விளையக்கூடிய புஞ்சைத் தானியங்கள். அதற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பதை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதுமட்டுமல்ல, இன்றைக்கு கொண்டைக் கடலைக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து வரக்கூடிய பொரிகடலைக்கு 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைத்து இருக்கின்றார்கள். அதற்கு நான் நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தக் கொண்டைக் கடலையிலிருந்து வருவதுதான் மாவு. மாவு தயாரிப்பது என்பதற்கு ஒரு இன்டஸ்ட்ரி மாதிரி, பெரிய தொழிற்சாலை கிடையாது. கிட்டத்தட்ட ரூபாய் 30 ஆயிரம், 40 ஆயிரம் பணத்திலேயே அந்த மில்லை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாவுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று பலமுறை நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். 2 சதவிகிதம்தான். அதுவும் எங்கள் மதுரையிலே, மாவு உற்பத்தி செய்கின்ற அந்த மில்கள் 7, 8 தான் இருக்கின்றன. டவுனில் ஒரு காட்டேஜ் இன்டஸ்ட்ரி மாதிரி உள்ளன. இந்த மாவிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி. இன்றைக்கு கைத்தறி சிட்டா நூலுக்கு 2 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அந்த வரியையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதேபோல, local-லிலேயே நாட்டுக் கம்பளங்கள் எல்லாம் தயார் செய்கிறார்கள். ஆனால் அதற்கு பெங்களூர், மைசூர் கம்பளங்கள்போல், 2 சதவிகிதம் வரி விதித்திருக்கின்றார்கள். இவையெல்லாம் சின்னச்சின்ன வியாபாரங்கள்; உள்நாட்டிலேயே சிறு தொழில் செய்யக்கூடிய ஒரு பகுதியாக இருக்கிறது. அதற்கும் வரியை நீக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தங்க ஆபரணம். தங்க ஆபரணத்திற்கு இன்றைக்கு 1/2 சதவிகிதத்திலிருந்து, 1 சதவிகிதமாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள்.

ஆனால், அதற்கு இப்போது 4 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தங்க விற்பனை ரூ. 50 இலட்சம் மொத்த விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகள் கொஞ்சம் பேர்கள்தான். கிட்டத்தட்ட பெரிய வியாபாரம் செய்பவர்கள் 5, 6 பேர்கள்தான். மதுரையில் மட்டும் 2,500 வியாபாரிகள் இருக்கின்றார்கள். அந்த 2,500 வியாபாரிகளிலே, இவ்வளவு பெரிய வரிக்குக் கட்டுப்பட்டவர்கள் 5, 6 பேர்கள்தான். ஆனால் வரியைக் குறைத்தால், நிச்சயமாக மொத்த வரி வருமானம் கூடும். வியாபாரிகள் எப்போதுமே அரசுக்கும், மக்களுக்கும் ஒரு பாலமாக இருக்கக்கூடியவர்கள். அந்த வரியைக் குறைத்து, வருமானத்தைப் பெருக்குவதற்கு உண்டான யுக்திகளை இந்த அரசு கடைபிடித்து, உண்மையாக நடத்தி, வெற்றி கண்டு இருக்கிறது. ஆகவே, இந்தத் தருணத்திலே இந்த வரிச் சலுகைகளைக் குறைத்து, நல்ல பல செயல் திட்டங்களைச் செயல்படுத்த மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மைகளை எப்படி இந்த 4 ஆண்டுகளாகச் செய்து வந்தீர்களோ, அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. உ. திசைவீரன்.

திரு. உ. திசைவீரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம், மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்து கொண்டு எனது கருத்துகளைக் கூற அனுமதித்த தங்களுக்கு எனது நன்றியை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் முன்பே, வணிகப் பெருமக்களை அழைத்துப் பேசி அவர்களது எண்ணங்களுக்கு தீர்வாக, நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே, இந்தியாவிலேயே முன்னோடியாக நமது தமிழகம் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. இந்த நிதிநிலை அறிக்கை 3 சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது. முக்கியமாக, அன்றாடம் பொதுமக்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள் மீது வரி விதிக்காமை, அதே நேரத்திலே ஒரு சில பொருட்கள் மீது குறைந்தபட்சமாக 4 சதவிகிதம் அளவிற்கு குறைந்த வரி, ஆடம்பரப் பொருட்கள் மீது அதிகமாக வரி என்று மூன்று விதமாகப் பிரித்து, இந்த அரசு நல்ல முடிவை எடுத்து, வரி

விலக்கு அளித்த வகையிலே, இந்த 5 ஆண்டுகளிலே சுமார் 2,700 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகை அளித்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, அன்றாடம் மக்கள் பயன்படுத்துகின்ற பதப்படுத்தப்பட்ட பால், உயிர் காக்கும் மருந்துகள், ரொட்டி, உப்பு, மஞ்சள், புளி, மிளகாய், அடுப்புக்கரி, கோழி மற்றும் கால்நடைத் தீவனங்கள், பூண்டு மற்றும் இஞ்சி, தீப்பெட்டிகள், விறகு, விவசாயக் கருவிகள், கல்வி சார்ந்த எழுதுபொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்றவற்றுக்கு முழுமையாக வரி நீக்கம் செய்யப்பட்டதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, வணிகர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை நமது அரசு செய்து வருகின்றது. தமிழ்நாடு வணிகர் நல வாரியம் ஆரம்பித்தது, வணிக உரிமங்களைப் புதுப்பிப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தால் போதுமானது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது, அதேபோல, வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கும் விதத்தில், ஒரு வாரக் காலத்திலே அந்தச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டு வந்தது போன்ற பல்வேறு நன்மைகள்; குறிப்பாக, ஆண்டுக்கு மொத்த விற்பனை 3 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடிய சிறு வணிகர்களுக்கு, விற்பனை வரியிலே விலக்கு அளித்திருப்பது சிறு வணிகர்களுக்கு மிகப் பெரிய நன்மையைக் கொடுப்பதாக இருக்கிறது.

முற்பகல் 11-00

அதே நேரத்திலே, கேளிக்கை வரி மூலமாகக் கிடைக்கும் வருவாயிலே 90 சதவிகிதத்தை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு கொடுத்து, அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு உயிர் ஊட்டுவதாக இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, 2,000 கோடிக்கு வரிச் சலுகை அளித்தாலும், மக்களின் அன்றாடத் தேவைக்குப் பயன்படுகின்ற ஒரு சில பொருட்களுக்கு வரிச் சலுகை அளிக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். காரணம், 'கேளுங்கள் தரப்படும்' என்றார் ஏசுகிறிஸ்து. அதேபோல கேட்டதையெல்லாம், தரக்கூடிய கலைஞர் அவர்களுடைய நல்ல ஆட்சியிலேதான், வரிச் சலுகை பெறமுடியுமென்று பெருமையோடு, அந்த மக்கள் பேசிக்கொண்டிருக்கின்றனர். எனவே, ஒரு சில

[திரு. உ. திசைவீரன்] [2000 மே 9

அமைப்புகளுக்கு நீங்கள் வரிச் சலுகை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகம், தொழில் வளர்ச்சியிலே முதலிடத்தை நோக்கி வளரும் இந்த நிலையில் தமிழகத்திலுள்ள சிறு தொழில்கள், தமிழகத்தில் தயாராகும் உணவுப் பொருட்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் மீது வரிச்சலுகையில், தனிக் கவனம் செலுத்துவதுதான் நமது குறிக்கோள் வெற்றியடைய ஒரு வாய்ப்பாக அமையும். பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியினால் தடுமாறும் உள்நாட்டு தயாரிப்பு நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட முடியும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மென்பானங்கள் ஒரு லிட்டர் அளவிற்கு உள்ளதற்கு, அதிகபட்ச விலையாக 29 ரூபாய், அதற்கு மேலும் உள்ளவற்றிற்கு 20 சதவிகிதம் விற்பனை வரி உள்ளது. இதனால், பன்னாட்டு நிறுவனங்களுக்குத்தான் அதிகமான சலுகை கிடைக்கின்றது. எனவே, சிறிய தயாரிப்பாளர்களைப் பாதுகாக்க, ஆண்டின் மொத்த விற்பனையைக் கணக்கில்கொண்டு, ஆண்டிற்கு 5 கோடிக்குக் கீழுள்ள தயாரிப்பாளர்களுக்கு வரிச்சலுகை அளிக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பழரச பானங்களுக்கு இன்றைக்கு 4 சதவிகிதம் அளவிற்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கின்றேன்.

அதேபோல, பதப்படுத்தப்பட்ட பாலுக்கு வரி விலக்கு என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு 1-4-2000-க்குப் பின் வரி இல்லை என்று, இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கின்ற காரணத்தாலே, மிகவும் ஒரு குழப்பமாக இருக்கிறது. எனவே, ஏற்கெனவே வரி வசூல் செய்யாத, வரியைக் கட்ட இயலாத சூழ்நிலையில் 1-4-1993 முதல் அமல்படுத்த அதற்குத் தகுந்த சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல உணவு எண்ணெய் மீதான வரி, ஆண்டிற்கு 100 கோடிக்கு மேல் விற்பனை உள்ளவைக்கு வரி விதிக்கப்படும் என்று இருக்கிறது, அதுவும் குழப்பமான ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. அதை 300 கோடி என்று உயர்த்தி, 1-3-1999 ஆம் தேதியிலிருந்து, அதை அமல்படுத்த அரசாணை கொண்டு வரப்படவேண்டுமென்று

2000 மே 9] [திரு. உ. திசைவீரன்]

கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 100 கோடி என்று சொன்னால், 100 கோடி வரை அவர்கள் வரி வாங்க மாட்டார்கள்; அல்லது 101 கோடி விற்றாலும்கூட, ஆறரை சதவிகிதம், வரி கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலையில் மிகவும் சிரமமான நிலையில் வணிகர்கள் தங்களுடைய தொழிலை விடக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே, அதை கவனத்தோடு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பஞ்சு கழிவுக்கு வரி 8 சதவிகிதம் இருக்கிறது. இதனால், வெளி மாநிலத்தோடு போட்டி போடுகின்ற நிலை மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தால், அதை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல ஐஸ்கிரீம். இன்றைக்கு அதற்கு 11 சதவிகிதம் நமது வரிவிதிப்பு இருக்கின்றது. அதிலேகூட, பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டிபோடுகின்ற நிலை வருகின்றபோது நமக்கு சிரமமாக இருக்கிறது. அதை 8 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, உணவுப்பொருட்களுக்கான, கடலை மாவு போன்ற பொருட்களுக்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கின்றேன். பெயிண்ட் மற்றும் பெயிண்ட் பொருட்களுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக கேரளாவைப் போல, நீங்கள் அந்த வரி விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறு தொழில்கள் மூலமாக தயாராகின்ற டிடர்ஜெண்ட் சோப்பிற்கு 16 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. ஆந்திரா, மற்றும் கேரளாவிலே 4 சதவிகிதமாக இருக்கின்ற காரணத்தாலே, நமது மாநிலத்திலும் 4 சதவிகிதம் வரி விதித்தால்தான், சிறிய தொழிற்சாலைகள் நலம் பெறும், நடைபெறும் என்று நான் கூறிக்கொள்கின்றேன்.

இந்த நான்கு ஆண்டுகளிலே 2,700 கோடிக்கு வரி விலக்கு அளித்திருக்கின்றீர்கள். அப்படிப்பட்ட பொருட்கள், மார்க்கெட்டிலே, சந்தையிலே வருகின்றபோது, அந்தக் குறிப்பிட்ட பொருட்களுக்கு உள்ளபடியே வரிவிலக்கு காரணமாக விலைகள் குறைந்து இருக்கின்றதா

என்பதைக் கண்காணிப்பதற்கு தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, சிறிய பிளாஸ்டிக் பைகள், கூடை பின்னும் ஒயர்; குடிசைத் தொழில்களாக, தென் மாவட்டங்களில் 3,000 பேர்கள் இன்றைக்கு அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவற்றுக்கு 8 சதவிகிதமாக வரிகள் இருக்கின்றன. எனவே, அண்டை மாநிலங்களில் உள்ளதைப்போல அதை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தேங்காய். ஏழையெளிய மக்கள், குறிப்பாக தெய்வ காரியங்களுக்குப் பயன்படுத்துகின்ற பொருளாக அது இருக்கின்றது. இப்போது, அந்தத் தொழில் மிகவும் நலிவடைந்து இருக்கின்ற காரணத்தாலே, தேங்காய் விற்பனை வரியை முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைவிட பெரிய பிரச்சினை, அடகு வணிகம் புரிபவர்கள். இவர்கள் வணிகர்களே இல்லை. நகைகள் வாங்குவதும் இல்லை, விற்பதும் இல்லை. எனவே, அவர்களை விற்பனை வரிச் சட்டத்தின் கீழே கொண்டுவருவது நியாயமாக இருக்காது. ஏலம் விடுவதுகூட, அரசு அதிகாரி தான், அந்த ஏலத்தை நிர்ணயிக்கிற அதிகாரிதான் ஏலம் விடுகின்றார். எனவே, அவர்களை அந்தச் சட்டத்தில் கொண்டு வராமல் ,அவர்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மேல்முறையீடு. முதல் மேல்முறையீடு செய்வதற்கு முன்னதாக சர்ச்சைக்குரிய வரி 25 சதவிகிதம் கட்ட வேண்டும். இரண்டாவது மேல்முறையீடு வருவதற்கு முன்பாக 100 சதவிகிதம் கட்ட வேண்டுமென்று இருக்கிறது. இதனால், வரிச் சட்டம் 31, 31 (a) மற்றும் 36 பிரிவுகளிலே திருத்தங்கள் கொண்டு வந்து, இந்தத் திட்டங்களை நீங்கள் வாபஸ் பெற வேண்டும். வரி விதிப்பதை எதிர்ப்பதுதான் இந்த முறையீடு. எனவே, குறைந்தது 6 மாத காலமாவது ஒரு வாய்ப்பைக் கொடுத்து, அதன்மூலமாக அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்றாடம் உபயோகிக்கும் மொச்சை, காணம், அவரை, பீன்ஸ், பட்டாணி, காராமணி, தட்டை போன்ற பயறு வகைகளுக்கும் நீங்கள் வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கால்நடைத் தீவனமாக இருக்கக்கூடிய புண்ணாக்குக்கு நீங்கள் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவு வகைகள், வறுகடலை போன்றவற்றிற்கும் முழுமையாக வரிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

இதைவிட முக்கியமாக அலுமினிய உலோகக் கலவையிலானப் பொருட்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்கிறேன்—நீங்கள் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இன்றைக்கு கைத்தறி நெசவு மிக மோசமான நிலையிலே இருக்கிறது. சிட்டா நூலுக்கு 2 சதவீதம் நீங்கள் வரி விதித்திருப்பதை முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்கள் கோரிக்கைகளைக் கொடுக்கின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே வட்டாட்சியர் அளவிற்கு ஓர் அதிகாரியை நியமித்து, அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்த மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தை கணினிமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டிலே பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால், இராமநாதபுரம் மாவட்டம், அதேபோல, திருவண்ணாமலை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் முழுமையாகப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, குடிதண்ணீருக்கு அதிகப்படியான நிதியை நீங்கள் ஒதுக்கித் தர வேண்டும்.

பரமக்குடியிலே, போக்குவரத்து மிக நெருக்கடியாக இருக்கிற காரணத்தினாலே, அங்கே ஒரு புறவழிச்சாலை, கமுதக்குடி, மேலாய்க்குடி, அரியனேந்தல் வழியாக புறவழிச்சாலை அமைத்துத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக, தென் மாவட்டங்களிலே இன்றைக்கு அந்த மக்களுடைய பிரச்சினைக்காக அமைக்கப்பட்ட நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையில் அமைந்த குழுவானது கொடுத்திருக்கின்ற அறிக்கை பிரகாரம் எங்கள் பகுதியிலே ஒரு புதிய தொழிற்சாலையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தென் மாவட்டங்களிலே ஒரு புதிய மருத்துவமனையை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை போன்று ஒரு மருத்துவமனையை ஆரம்பிக்கலாம் என்று நீங்கள் சொன்னீர்கள். அதை நீங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலே ஆரம்பிக்க வேண்டுமென்று, இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில குறிப்பான விஷயங்களை மட்டுமே பேசுவதற்காகத்தான் நான் இந்தக் கோரிக்கையிலே பேசுகிறேன். முதலில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இரண்டொரு பிரச்சினைகளை அவற்றின் முக்கியத்துவம் கருதி, அவசியம் கருதி, அவற்றின் நியாயம் கருதி இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

முதலில், இந்தக் கழிவுப் பஞ்சு, தமிழ்நாட்டிலேயிருந்து வியாபாரம் செய்கின்றவர்கள், கடுமையான நெருக்கடியிலே இருக்கிறார்கள். நான் இன்று காலையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்தச் சங்கத்தின் சார்பில் கொடுத்த முறையீட்டு மனுவை அளித்தேன். அதில் அவர்கள் பரிவோடு எழுதினார்கள். என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அநேகமாக அவர்கள் positive-ஆகத்தான் எழுதியிருப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கை, அவர் தலையசைத்ததிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அதாவது பிற மாநிலங்களோடு போட்டி இடுவதற்குரிய வழிவகை அவர்களுக்கு இல்லை என்கிற நியாயமான கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள்.

உத்தரப்பிரதேசத்திலும், கர்நாடகாவிலும் 4 சதவிகிதம் என்று குறைத்துவிட்டார்கள் கடந்த 1-4-2000-த்திலிருந்து. ஆனால், இங்கே 8 சதவிகிதம் என்று சொல்கிறபோது, இவர்களின் மார்க்கெட்டை, நம்முடைய தமிழ் மாநிலத்தின் மார்க்கெட்டை பிற மாநில வியாபாரிகள் கைப்பற்றிக்கொள்வதற்கு இந்த வரி விதிப்பு முறை ஒரு காரணமாக

அமைந்து விடக் கூடாது என்கிற நியாயமான முறையீடு அதிலே இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, இதற்கு அனுசரணையான முறையிலே ஒரு பதில் அளிக்க வேண்டும். பதில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக பார்ம்-17 கொடுத்தாலே நூல் உற்பத்தியாளர்கள் வெறும் 3 சதவிகிதம் வரியைச் செலுத்தி அதை முடித்துவிடுகிறார்கள். எனவே, 8 சதவிகிதம் என்று இவர்களுக்கு இருப்பது கடுமையான நெருக்கடிதான். இது நீண்டகாலப் போராட்டம். அந்தப் போராட்டத்திற்கு இன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் பதிலளிக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு முறையீடு. இதுவும் ஒரு நியாயமான முறையீடுதான். நம்முடைய தமிழ்நாட்டில், குறிப்பாக, மானாமதுரை வட்டாரத்திலே மண்ணை வைத்து கூட்டுறவு சொசைட்டி மூலம் மண்பாண்டங்கள் செய்து வருகின்றவர்கள் இருக்கிறார்கள். கூஜாக்கள், அதேபோல கோப்பைகள், அழகுப்பொருட்கள், இந்த மாதிரியான பொருட்களைச் செய்கிற மண்பாண்டத் தொழிலாளர்கள், கூட்டுறவு அமைப்பின் மூலம் அதைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு கதர், கிராமத் துறை 3 சதவிகிதம் சேவைக் கட்டணத்தை விதித்திருப்பது ஒரு கடுமையான நெருக்கடியை ஏற்படுத்துகிறது. அதுவும், மண்ணைப் பிசைந்து ஏதாவது ஒரு வடிவத்தில் வடிவமைத்து விற்றுக் கொண்டிருக்கிறவர்களுக்கு இத்தகைய 3 சதவிகிதம் சேவைக் கட்டணம் போட்டிருப்பது, அந்த நெருக்கடியை அதிகமாக ஏற்படுத்துகிறது என்பதை நம்முடைய மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு தங்கமணி அவர்களும் முதலமைச்சர் அவர்களுக்கு இது விஷயமாக ஒரு கோரிக்கை மனு கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மண்பாண்டங்களைச் செய்கிற அந்தத் தொழிலாளர்கள்மீது பரிவு கொண்டு, கதர் கிராமத் தொழில் துறை விதித்திருக்கிற அந்த 3 சதவிகித சேவைக் கட்டணத்தை நீக்க வேண்டும், நீக்கி உத்தரவிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அடுத்து, இதே மாதிரி இன்னொரு கண்ணீர் முறையீடுதான். அதுவும் ஒரு சாமானியப்பட்ட மக்களின் முறையீடு. தமிழ்நாட்டில் 2,000 தொழிலாளர்கள் சைக்கிள்களுக்கான சீட் கவர் செய்கிற வேலைகளிலே

ஈடுபட்டு வருகிறார்கள். மொத்தமாகவே கூட்டிப் பார்த்தால் 2,000 தொழிலாளர்கள்தான் அதில் ஈடுபடுகிறார்கள். அதிலும் உற்பத்தியாளர்கள் என்று பார்த்தால் 250 பேர்தான் உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். அதிலும் 100 பேர்தான் பதிவு செய்திருக்கிறார்கள். எனவே, ரெவின்யூ என்று பார்த்தால் மிக மிக, மிக மிகக் குறைவான ஒரு விஷயம். அதுவும் இன்றைக்கு சைக்கிள் என்பது அருகிக் கொண்டிருக்கிற ஒரு வாகனம். வேறு வகையில் சைக்கிள் பின்தங்கி இருக்கின்ற ஒரு நிலையில், அந்த சைக்கிள்களுக்கான சீட் கவர்களைச் செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றவர்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். அந்த விற்பனை வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயம் சொல்லப்படுகிறது. பிளாஸ்டிக் பைகள், பிற மாநிலங்களில் 4 சதவீதம்தான் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் 8 சதவீதம் என்று இருக்கிறபோது ஒரு சமச்சீர் வரி விதிப்பு முறை இருந்தும்கூட, பிற மாநிலங்களில் 4 சதவீதம் இதே பிளாஸ்டிக் பொருள்களுக்கு, ஆனால் இங்கே 8 சதவீதம் என்றால், பிற மாநில பிளாஸ்டிக் பைகள்தான் மார்க்கெட்டில் நிற்கும் தமிழ்நாட்டு பிளாஸ்டிக் பை உற்பத்தியாளர்கள் மார்க்கெட்டில் field out ஆகி விடுவார்கள். எனவே அவர்களைக் காப்பாற்றுவதற்காக, சம நிலைப்படுத்துவதற்காக, அதை 4 சதவீதம் என்ற நிலையில் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: துணைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் பைகளுக்கு பிற மாநிலங்களில் 4 சதவீதம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். எனக்குத் தந்திருக்கின்ற தகவலின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 8 சதவீதம். ஆனால் கேரளாவில் 12 சதவீதம்.

திரு. கே. சுப்பராயன்: நான் கேரளச் சட்டமன்றத்திலே இருந்தாலும், இதைத்தான் சொல்லியிருப்பேன். எனவே, தமிழ்நாடு சட்டமன்றம் என்கிற காரணத்தினால் அவற்றை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்றுதான் நம்முடைய பிளாஸ்டிக் பை உற்பத்தியாளர்கள் கோரி வருகிறார்கள். நம்முடைய பிளாஸ்டிக் பை உற்பத்தியாளர்களின் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் கவனத்திற்கொண்டு, அவற்றுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கத்தின் சார்பில் ஒரு விரிவான மகஜர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விரிவான விவரங்களுக்குள்ளே நான் போனால் காலம் அதிகமாகிவிடும். அதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெய்வநாயகம்கூடப் பேசினார்கள். மொச்சை, கானம், அவரை, பீன்ஸ், பட்டாணி, காராமணி, தட்டை போன்ற உணவுப் பொருள்களுக்கு 4 சதவிகித வரியை முற்றிலும் விலக்கு அளிக்கலாம். அதே போன்று, புண்ணாக்கு மற்றும் வறுகடலை போன்றவற்றிற்கும்கூட விலக்கு அளிக்கலாம். இவற்றில் அதிக ரெவின்யூ வருவதற்கு வாய்ப்பில்லை. இவை உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட விஷயம் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவற்றில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னொரு நெருக்கடியான பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவற்றை நன்கு அறிவார்கள். அதில்கூட, எப்படிச் செய்வது என்பது குறித்துகூட அவர்கள் சிந்தித்திருக்கக் கூடும். இந்தப் பன்னாட்டுக் குளிர் பானங்கள், தமிழ்நாட்டில் நம்முடைய தொழிலை பெருமளவிற்கு சீரழித்துக் கொண்டிருக்கின்றன. அதில் தட்டுத் தடுமாறுகின்றவர்களுக்கு சில சலுகைகளை அளிப்பதற்காகக் கடந்த முறையும் சில முயற்சிகளை மாநில அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால், அந்த முயற்சிகள் மிகப் பலன் அளிக்கவில்லை என்பதை நடைமுறை அனுபவம் உணர்த்துகின்ற காரணத்தால், நடைமுறை அனுபவங்களிலே நமக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த அறிவின் வெளிச்சத்திலேயிருந்து புதிய முடிவை எடுக்க வேண்டிய நிலைமைக்கு மாநில அரசு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். எனவே, தமிழ்நாட்டில் பெப்சி கோலா, கோக்கோ கோலா போன்ற பன்னாட்டு குளிர்பானங்களின் போட்டியால் அழிந்து கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டு உற்பத்தியாளர்களைக் காப்பாற்றுவதற்கு தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கம் சில பயனுள்ள ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை நாம் பணிவோடும், கனிவோடும் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட நிருவாகம் என்ற முறையில் நான் கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்னரும் குறிப்பிட்டேன். மாவட்ட நிர்வாகத்திலே மீண்டும் நாம் அந்த D.D.C.யைக் கொண்டுவருவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த

மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை வேகப்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தாலும்கூட, அந்த மாவட்ட அளவில் நடைபெறுகிற வளர்ச்சிப் பணிகளைப் பற்றிய விவரங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு கண்காணிப்பு என்பது நடைமுறையில் இல்லை. நிருவாக ரீதியாகப் பல விஷயங்கள் இருந்தாலும்கூட, ஜனநாயகக் கட்டமைப்பில் ஜனநாயக ரீதியான நிர்ப்பந்தங்கள் இல்லாமல் இந்த கவர்ன்மென்ட் மெஷினரி ஒருபோதும் ஒழுங்காக இயங்காது. கவர்ன்மென்ட் மெஷினரி அதிகமாகத் துருப்பிடித்துவிட்டது. அரசை நடத்துகின்ற கட்சியினர் கருதுகின்ற செயலைக்கூட மக்களுக்குக் கொண்டு செல்வதில் பின்தங்க வைப்பதே இந்த மெஷினரிதான். எனவே, இந்த மெஷினரியைக் கண்காணிப்பதில் ஜனப் பிரதிநிதிகளுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட அமைப்பிலே, சட்டமன்ற அல்லது யூனியன் லெவல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப் பிரதிநிதிகள் இந்த மாநில அரசின் வளர்ச்சி நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு உரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேபோல பட்டா வழங்குவதிலேகூட நீண்டகாலப் பிரச்சினை சுளுவாக்கப்பட்டு இருக்கிறது. நீண்டகாலமாகத் தேங்கிக் கிடந்த அந்தப் பிரச்சினையில் பட்டா வழங்குவதில் எளிய சில அணுகுமுறைகளை நிருவாகத்திற்கு மாநில அரசு வழங்கியிருக்கிறது. ஆனால், அந்த எளிய அணுகுமுறைகள்கூட சில இடங்களில் தேங்கிவிடுகின்றன. அதுபற்றி எனக்குப் பட்டியலிட நேரம் இல்லை. குறிப்பாக, என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். சில மனுக்களைக் கொடுத்தால்— இந்த valuation patta விஷயத்திலேயே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்போதுகூட நாம் அறிவித்திருக்கிறோம். இந்த valuation patta-விலேயே கூட ஒரு மாற்றம் கொண்டு வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். என்னவென்றால் வீடற்ற மக்களுக்கு வீடு வழங்க வேண்டும் என்ற நிலையிலேயும் காலம் காலமாக சுதந்திரத்திற்குப் பிறகு இன்றுவரையிலும் இந்த நிலத்தின் கிளாசிபிகேஷன் காரணமாகப் பட்டா வழங்குவதில் ஏற்பட்ட பல இடையூறுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற முடிவைக் கடந்த பட்ஜெட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பாராட்டுதலுக்குரிய ஒரு அறிவிப்புதான். அந்த அறிவிப்பு செயல்வடிவம் பெறவேண்டுமானால் நடைமுறையில் அந்த அறிவிப்பை நாட்டுமக்கள்

(மணியடிக்கப்பெற்றது) —ஒரேயொரு விஷயம்.—பயன்படுத்திக்கொள்ள வேண்டுமானால் நிருவாக ரீதியாக இருக்கிற தடைகள் நீக்கப்பட வேண்டும். இந்த valuation-ல் அந்த அதிகாரம் உள்ள சிலர்—நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. அந்த அதிகாரம் உள்ள சிலர்—என்னுடைய ஏரியாக்களில், சொந்த அனுபவத்தில் சொல்கிறேன், bargain செய்கிறார்கள். 'நீ இப்படிச் செய்யவில்லை என்றால் இவ்வளவு ஏற்றிப் போட்டுவிடுவோம்' என்று சொல்கிறார்கள். இதன்மூலம் மாநில அரசுக்குக் கெட்டப் பெயரை ஏற்படுத்துகிற நெருக்கடியை கீழ்மட்டங்களில் இருக்கிற ஒரு சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எதிர்த்துச் செய்ய முடியாத சில சிக்கல்கள், சங்கடங்கள் நடைமுறையில் நிலவுகின்றன. எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்துக்கொள்கிற ஒரே ஒரு விஷயம். இந்த விஷயத்தில் நீங்கள் அறிவித்த அறிவிப்பு நல்ல செயல்வடிவம் பெறவேண்டுமானால் வீடற்றவர்களுக்கு free patta என்ற ஒரு நிலையைக் கொண்டுவர வேண்டும். அல்லது commercial purpose-க்குப் பயன்படுத்துகிறவர்களுக்கு நீங்கள் valuation patta போடலாம். ஆனால், அவர்கள் சொந்த வீடோ, நிலமோ இல்லாதவர்கள்—அவர்கள் பிற்படுத்தப்பட்ட ஜாதியோ, முற்பட்ட ஜாதியோ, ஆனால் அவர்களுக்குச் சொந்த வீடும் இல்லை, நிலமும் இல்லை 50 வருடங்களுக்குப் பின்னாலும் குடியிருக்க வீடு இல்லை என்றால் அவர்களுக்கு free patta வழங்க வேண்டும் என்று உரிய திருத்தம் அந்த அரசாணையில் செய்யப்படுமானால் நல்ல பலன் அளிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். கடைசியாக இந்த தலைமையிடப் பணியாளர்களுக்கு உரிய சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். இங்கே பலர் temporary ஆகப் பணியாற்றுகிறார்கள். Temporary என்ற முறையில் இருக்கின்றவர்களை நிரந்தரப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு.

திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி, ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம், மாவட்ட நிருவாகம் ஆகியவற்றில் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருக்கின்ற நேரத்திலேதான் வணிகர்களுக்கு என்று ஒரு வாரியத்தை அமைத்தார்கள். இப்போது நான்காவது முறையாக பொறுப்பேற்ற பின்னால் பதினோராவது நிதி நிலை அறிக்கையினைக் கொடுப்பதற்கு முன்னால் வணிகர்களை எல்லாம், வணிக சங்கங்களையெல்லாம் அழைத்து அவர்களது கருத்துகளையெல்லாம் கேட்டு அதற்குப் பின்னால் சில பொருள்களுக்கு முழுமையான வரிச் சலுகைகளும், சில பொருள்களுக்கு வரி விகிதத்தைக் குறைத்தும் செய்திருக்கிறார்கள். அது வணிகர்களின் வயிற்றில் பால் வார்த்ததைப்போல் இருப்பது கண்டு முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

5 ஆண்டுகள் மட்டும் ஏறத்தாழ 2,700 கோடி ரூபாய் வரை வரிச் சலுகை அளித்த முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்படாது, பதிலுரையிலே சொல்லப்பட்ட சலவையாளர்களுக்கு நல வாரியம் அமைத்து, அதுமட்டுமின்றி அவர்கள் பயன்படுத்தக்கூடிய இஸ்திரிப் பெட்டிகளுக்கு 16 சதவிகிதமாக இருந்த வரி விதிப்பை 12 சதவிகிதமாகக் குறைத்த முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணிகர்கள், அவர்கள் பதிவு செய்துகொள்ள பல மாதங்கள் ஆவதைத் தடுக்கக்கூடிய விதத்தில் அவர்கள் பதிவு செய்கின்ற காலத்தை ஒரு வாரத்திற்குள் பதிவு செய்வதற்கும், அதேபோல அவர்கள் வணிக வரித் துறையின் மூலம் சில ஆவணங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது என்கின்ற காரணத்தினால் வணிகர்கள் தாங்களே அவற்றை அச்சடித்து ஒப்படைக்கலாம் என்கின்ற ஒரு அறிவிப்பை அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 11-20

அடுத்து, உள்ளாட்சிகள் கூடுதல் நிதி ஆதாரத்தைப் பெற கேபிள் டி.வி. நடத்துபவர்கள் மீது தமிழ்நாடு கேளிக்கை வரிச் சலுகைச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் கேளிக்கை வரிக்கு மிகையாகாமல் உள்ளாட்சி அமைப்புக்கள் தாங்களே கேளிக்கை வரியை வசூலித்துக்கொள்ளலாம் என்று அனுமதி அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட நிருவாகம் என்கின்ற அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருவள்ளூர் மாவட்டம் என்று பிரித்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் திருவள்ளூர் மாவட்ட மக்களின் சார்பிலே தெரிவித்து, ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை விரைவாக முடிக்க இருப்பதற்குக் காரணமாக இருந்த முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 9 ஏக்கர் நிலம் அங்கே ஒதுக்கப்பட்டு இருக்கிறது, அதையும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, சிலர் சொல்வார்கள், சில மாவட்டங்களுக்கு மட்டுமே முன்னுரிமைகள் வழங்கப்படும் என்று. ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி 14 ஊராட்சி ஒன்றியங்கள், 8 வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி மயத்தை புகுத்தி தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலிருந்தும், வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்தும் இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அந்தக் கணினி மூலமாகத் தொடர்பு கொள்ளக்கூடிய திட்டத்தைக் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல் வருமுன் காப்போம் திட்டத்தை இங்கே அறிவித்தார்கள். அதை திருவள்ளூர் மாவட்டத்திலே நம்முடைய முண்டியம்மன் நகரிலே தமிழக முதல்வர் அவர்களே ஆரம்பித்து வைத்தார்கள். அதற்காக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, உழவர் சந்தையை அறிவித்த முதல்வர் அவர்கள் 24-3-2000 அன்று நிதிநிலை அறிக்கையிலே உழவர் சந்தையிலே கைவினைப் பொருள்களை இடைத்தரகர்கள் இல்லாமல் விற்க பூமாலைத் திட்டத்தை அறிவித்தார்கள். 9-4-2000 அன்று எங்களது மாவட்டத்தில் அம்பத்தூரிலே அந்த உழவர் சந்தையிலே பூமாலைத் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்த முதலமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

10 ஆவது மற்றும் 12 ஆவது வகுப்பு படித்த மாணவர்கள் மேல் படிப்பிற்குச் செல்கின்ற நேரத்திலே சாதிச் சான்றிதழ் கிடைக்குமா என்று ஏங்கித் தவித்து பலரை அணுகியும் கிடைக்காதவர்கள் உண்டு. அதைப் போக்கக்கூடிய விதத்திலே மாணவர்கள் 10 ஆவது, 12 ஆவது படிக்கின்ற நேரத்திலேயே தலைமையாசிரியர்கள் மூலமாக வட்டாட்சியர்களுக்கு அது அனுப்பப்பட்டு அந்த மாணவ மாணவியர்கள் பள்ளிப்படிப்பு முடித்து மேல் படிப்புக்குச் செல்கின்ற நேரத்திலேயே அந்த சாதிச் சான்றிதழையும் கொடுக்க வைத்த நம்முடைய முதலமைச்சரை என்னுடைய நெஞ்சார மனமார நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதுமட்டும் அல்ல, மனுநீதி நாள், குறை தீர்க்கும் நாள் என்று மாதம் ஒரு முறைக்கு இரண்டு நாட்களை வைத்து, அதனாலே பல இலட்சக்கணக்கான மனுக்கள் இன்றையதினம் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆளுநர் உரையிலே, குடிசைகளோ அல்லது வீடுகளோ இருந்தால் 20 ஆண்டுகளாக இருந்தார்கள் என்றால் பட்டா வழங்கப்படும் என்று இருந்ததை மாற்றி நிதிநிலை அறிக்கையிலே தலைவர் 10 ஆண்டுகள் இருந்தால் போதும் என்றார். ஆனால், பதிலுரையிலே இரண்டு ஏக்கர் நிலம் இருந்தால் 10 ஆண்டுகள் வாழ்ந்து குடிசை போட்டிருந்தாலும் பரவாயில்லை, 7 ஆண்டுகளாகக் குடிசை போட்டிருந்தாலும் பரவாயில்லை, 2 ஆண்டுகளாகக் குடிசை போட்டிருந்தாலும் பரவாயில்லை, அதில் 1-1/4 ஏக்கருக்குத் தந்துவிட்டு, மீதமுள்ள 75 சென்ட் நிலம் இருக்குமேயானால் அந்த ஊரிலே உள்ளவர்களுக்கு, நிலம் இல்லாமல், வீட்டுமனை இல்லாமல் இருக்குமேயானால் அவர்களுக்கும் அது வழங்கப்படும் என்று சொன்ன முதலமைச்சருக்கும், அந்த அடிப்படையிலே எங்களது மாவட்டத்திலே சிறப்பாகச் செயல்படக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

எனது தொகுதியிலே சில பணிகளை மாத்திரம் சொல்லி நான் ஒரே நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன். பொன்னேரி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தைக் கட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்த ஆண்டு, என்னுடைய தொகுதியும் பொன்னேரி

தொகுதியும் இணைந்து இருக்கக்கூடிய கோட்டாட்சியர் அலுவலகத்தைப் பொன்னேரியிலே கட்டித் தர வேண்டும் என உங்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களிடத்திலே தீயணைப்புத் துறை இருக்கின்ற காரணத்தினால், அந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ என்கின்ற காரணத்தினால் சொல்கிறேன். ஊத்துக்கோட்டையிலே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டும். பெரியபாளையத்திலே பவானி அம்மன் ஆலயம் இருக்கிறது. முன்பு ஆடி மாதத்திலேதான் திருவிழா என்று சொல்வார்கள். ஆனால், இப்போது வாரந்தோறும் திருவிழா நடைபெற்று அங்கே கடைகள் எல்லாம் அமைக்கப்படுகிற காரணத்தினால் தீ விபத்துகள் ஏற்படுகின்றன. நம்முடைய ஆட்சியில், மறைந்த திரு.கே.பி. கந்தசாமி அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலே தீவிபத்தின்போது அந்த வியாபாரிகளுக்கு எல்லாம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டது. ஆகவே, தீ விபத்தைத் தடுக்கக்கூடிய விதத்தில் பெரியபாளையம் பவானி அம்மன் ஆலயம் இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தைக் கட்டித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே, எனது ஊரான கவரப்பேட்டைக்கு கடந்த ஆண்டு காவல் நிலையத்தைத் தந்த தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் காவல் நிலையத்திற்கு கட்டடத்தைக் கட்டித் தரவேண்டும், அதேபோன்று, பூவலம்பேடு பகுதியிலே ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும். காரணம் மாதர்பபாக்கம், பாதிரிவேடுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் தேர்வாயிலிருந்தோ, கண்ணன்கோட்டையிலிருந்தோ, பரணிப்புத்தூரிலிருந்தோ அல்லது பாலவாக்கத்திலிருந்தோ ஏறக்குறைய 30 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டியுள்ள காரணத்தினால் பூவலம்பேடு பகுதியிலே ஒரு காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும்.

அதேபோன்று தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலையிலே சோதனைச் சாவடி இருக்கிறது. அதை வணிகர்களே கட்டித் தந்திருக்கிறார்கள்; உரிய காவல் நிலையம் போல. ஆகவே, அங்கே காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இப்போது தேங்காய்க்கு 1 சதவிகிதம் வரி விதித்துள்ளீர்கள். அதை நீக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, விடைபெறுகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி, மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேச அனுமதித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் அதிகப்படியாக வரி விதிக்கப்பட்டுள்ள சில பொருட்களுக்கு விற்பனை வரியை எல்லாம் குறைக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அந்த விதத்திலே வறுகடலை மீதான வரி, ஆயுர்வேத மருந்துகளுக்கு 4 விழுக்காடுகளாக இருக்கின்ற வரி, நீரேற்று இயந்திரங்களுக்கு 4 விழுக்காடுகளாக இருக்கின்ற வரி, சிட்டா நூலுக்கு உண்டான 2 சதவிகித வரி, கழிவுப் பஞ்சுக்கு 8 சதவிகிதமாக இருக்கின்ற வரி, அதைப்போல பருப்பு, வெல்லம், வத்தல், புளி, பலசரக்கு என்று சொல்லப்படுகின்ற பொருட்களுக்கு எல்லாம் வரியில்லாத நிலையில் மொச்சை, அவரை, பீன்ஸ், பட்டாணி போன்ற பயிர்களுக்கெல்லாம் இருக்கின்ற 4 சதவிகிதமான வரி—குளிர்பானங்களுக்கு 12 சதவிகிதமாக இருக்கின்ற வரி 20 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நான் முன்பு கூறியதற்கெல்லாம் முழுமையாகக் குறைக்க வேண்டும். இப்போது சொல்கிற அந்த குளிர்பான வரியையும்,—பெயின்ட் பொருட்களுக்கு 16 சதவிகிதம் என்பது வெளிமாநிலங்களில் 4 சதவிகிதமாக இருக்கிறது—கையால் தயாரிக்கப்படுகின்ற சோப்புக்கு 4 சதவிகிதம் வரி என்று இருப்பதையும், சலவை சோப்புக்கு 16 சதவிகிதம் வரி என்பதையும் மாற்றி அமைக்க வேண்டும். கால்நடைத் தீவனமாகவும், விவசாயிகளுக்கு உரமாகவும் இருக்கின்ற காரணத்தினால் புண்ணாக்குக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். அதைப்போல, கடலை மாவு, பட்டாணி மாவு பற்றியெல்லாம் கூறியிருக்கிறார்கள். இவற்றுக்கு எல்லாம் வரி விலக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற SAGOSERVE என்று அழைக்கப்படுகின்ற Salem Starch and Sago Manufacturers' Association-ஐ பொறுத்தவரையில் அது நல்ல முறையிலே கடந்த 10 ஆண்டு காலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே வியாபாரம் நல்லமுறையிலே நடந்துகொண்டிருக்கின்றது.

முற்பகல் 11-30

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற குச்சிவளிக் கிழங்குகளை ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி ஆலைகளுக்குக் கொடுத்து, அந்தப் பொருட்கள்

உற்பத்தி செய்யப்பட்டு, அங்கு பொருட்கள் எல்லாம் 'சேகோசர்வ்'-க்கு விற்பனைக்கு வருகின்றன. முன்பெல்லாம் அவை வெளிச் சந்தையிலே விற்கப்பட்டன. அவை எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு அந்த 'சேகோசர்வ்'-லே விற்றுக்கொண்டிருக்கிற காரணத்தாலே தற்போது அந்த 'சேகோசர்வ்' என்று சொல்லப்படுகின்ற நிறுவனத்தினுடைய விற்பனை பல இலட்ச ரூபாயில் நடந்துகொண்டிருக்கின்றது. அந்த 'சேகோசர்வ்'-ஆனது, உற்பத்தி செய்பவர்களுடைய பொருட்களை வாங்கி விற்கின்ற ஒரு ஏஜெண்டாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது, அது வியாபாரம் செய்வது இல்லை. அந்தப் பொருட்களை வாங்கி வெளிமாநிலத்திற்கு வியாபாரிகளுக்கு கொடுத்து அந்த வியாபாரிகள்தான் விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதுவே கிட்டத்தட்ட பல கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடந்து கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடந்துகொண்டிருக்கின்றது. அதற்கு additional sales tax—அதாவது 100 கோடி ரூபாய்க்கு மேலே சென்றுவிட்டால், அதற்கு அரசாங்கத்திற்கு additional sales tax 2½ சதவீதம் கொடுக்க வேண்டும் என்று, போட்டிருக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற தலைவர்கள், உற்பத்தியாளர்கள் எல்லாம் பலமுறை, இதுசம்பந்தமாக சிறுதொழில் துறை அமைச்சர் மாண்புமிகு ஐ. பெரியசாமி அவர்களிடம் கடந்த 2, 3 ஆண்டு காலமாக எடுத்துக்கூறியும், அவர் அதை முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தாரோ, கொண்டு வரவில்லையோ என்று தெரியவில்லை. அந்த 'சேகோசர்வ்' கொடுக்கின்ற additional sales tax-ஆனது 2½ சதவீதமாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தச் சங்கத்தினுடைய தலைவர்களை, மேலாண்மை இயக்குநர்களை வரவழைத்துப் பேச வேண்டும். அவர்களும் 2½ ஆண்டுகளாக முதல்வரைச் சந்திக்க நேரம் கேட்டிருக்கிறோம், கிடைக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி, 'சேகோசர்வ்' விவசாயிகளுக்கு உற்ற நண்பனாக இருக்கின்ற காரணத்தினால், அதிலே விற்பனை செய்கின்ற அனைத்துப் பொருட்களும் 'சேகோசர்வ்' என்ற பெயரில் பில் போடப்படுகின்ற காரணத்தினால்—உறுப்பினர்களுடைய பில்லிலே போடாமல்—அதற்கு முழுப்பொறுப்பும் 'சேகோசர்வ்'-க்கு இருக்கின்ற காரணத்தால், அந்த 2½ சதவீதம் கூடுதல் வரியைக் குறைக்க வேண்டும். நீங்கள் அரசுக்கு என்ன இலாபம் என்று நினைக்கலாம், அதற்கு 2 1/2 சதவீதமாக இருக்கின்ற அந்த வரியை 1 சதவீதம் விற்பனை வரியாகக் கூட நீங்கள் அறிவித்து பல இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பி. ஆர். சுந்தரம்] [2000 மே 9

அடுத்தபடியாக மாவட்ட நிர்வாகம். நான் சென்ற முறை பேசியபோது, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் முதல்வருடைய கையைவிட்டே அந்த நிர்வாகம் போய்விட்டது; எங்களுடைய மாவட்டத்தில், சேலம் மாவட்டத்தில், D.R.O.-வாக இருந்த நடராஜன் அவர்களுக்கு இருமுறை மாறுதல் உத்தரவு வந்து, அதை நீங்கள் மாற்றிக் கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் கூறினேன். சட்டமன்றத்திலே பல முறை இது விவாதிக்கப்பட்டு, நீங்கள் அந்த நடராஜனுக்கு எப்போது நான் ஆர்டர் கொடுத்தேன் என்று கூறினீர்கள். நடராஜனுக்குக் கொடுத்த ஆர்டர் காப்பியை நடராஜனுக்கே கொடுத்திருக்கிறீர்கள். அவருக்கு மூன்றாவது எண்—நடராஜனுக்கு மூன்றாவதாக காப்பியைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் இதில் அதிகம் செல்லவில்லை. நேரத்தின் அருமை கருதி. இதை நான் எதற்காக தெரிவிக்கிறேன் என்றால், அந்த D.R.O. நடராஜன் அங்கு மீண்டும் பணியிலே எதற்காக அமர்த்தப்பட்டார் என்றால், ஆளும் கட்சியினருக்கு வசதியாக, இப்போது அங்கே சேலம் அச்சுவான் ஏரியில் இருக்கின்ற நிலத்தை 4 ஏக்கர் 91 சென்ட் நிலத்தை, அரசு கையகப்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்திற்காக அந்த மாவட்ட வருவாய் அலுவலரை நீங்கள் அங்கே மீண்டும் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சருடைய பெயரிலே கொண்டு வந்தது வெட்ட வெளிச்சமாகி இருக்கின்றது. அந்த நிலத்தை அபகரிக்க வேண்டும். அந்த நிலத்தை நீங்கள் . . . . .

*__மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கின்ற மாவட்ட வருவாய்த் துறை அலுவலரை நீடிக்கச் செய்து அவர் மூலம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அமைச்சருக்குச் சாதகமாக சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் நகரப் பேருந்து நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 4 ஏக்கர் 91 சென்ட் நிலத்தை அபகரித்துக் கொள்வதற்காக, இப்படி அவரை நீடிக்கச் செய்தீர்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை அவதூறாக இங்கு பேசியிருக்கிறார். அதை நிரூபிக்க முதலிலே அவர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். பொறுப்பேற்றுக்கொள்ள அவர் தயாராக இருந்தால் நானும் அந்தப் பொறுப்பை இந்தப் பேரவையிலே ஏற்றுக்கொள்ள சம்மதிக்கின்றேன். எனக்குத் தெரிந்த சில தகவல்களை நான் இங்கு தருவது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் தின நாளேடு ஒன்றுகூட அந்த விவரங்களைப் பற்றி கற்பனையாக ஒரு கட்டுக் கதையைக் கட்டி எழுதி இருக்கின்றது. தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் கந்தசாமி அவர்கள்கூட ஓர் அறிக்கையை, அந்தப்

2000 மே 9] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

பத்திரிகையிலே வந்த செய்தியை ஒட்டி வெளியிட்டதற்கு, நான் அவருக்கு பதில் தந்திருக்கின்றேன். ஆனால் அந்த செய்தித்தாளுக்கு பதில் தருவதற்கு இப்போது நான் தயாராக இருக்கின்றேன். அந்த விவரத்தைத்தான் இவர் இங்கு பேசுகிறார்.

முற்பகல் 11-35

1950-51-க்கு முன்பு இனாம்தாரர்கள் வசம் அந்தப் பகுதி இருந்தது, எஸ்டேட் நிலம். அப்போது இனாம்தாரர் ஒருவர் இடத்தில் பச்சையப்பன் என்பவர் குதிரை கட்டுவதற்காக கொட்டகை போட்டு அந்த இனாம்தாரரிடத்திலே கையெழுத்து வாங்கினார். அப்போதெல்லாம் இனாம்தாரரிடத்திலே ஒரு வெள்ளை பேப்பரில் எழுதி வாங்கிக் கொண்டால் போதுமானது. பிறகு அதை சர்வே செய்து பட்டா கொடுத்துவிடுவார்கள்; அப்படி எழுதி வாங்கிக் கொண்டார். பிறகு 1954-லே இரண்டாவது சர்வே செய்கிறபோது, அது உண்மை அல்ல, இது அரசுக்கு சம்பந்தப்பட்ட ஏரி, அச்சுவான் ஏரி என்று அந்த 9 ஏக்கர் நிலம் முழுமையும் அரசுக்குத்தான் சொந்தம் என்று புறம்போக்கிலே, ஏரிக் கணக்கிலே அது வந்திருக்கிறது. பிறகு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும், புறநகர் பகுதி பஸ்கள் எல்லாம் வெளியிலே வந்து நிற்க வேண்டும், நகரத்தினுள்ளே இட நெருக்கடி இருக்கிறது என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டு 1983-ல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது கால்கோள் விழா செய்தார். அதற்குப் பின்னால் அதற்கு நிதியும் ஒதுக்கப்படவில்லை, புதிய பேருந்து நிலையம் அமைக்கின்ற காரியமும் நடைபெறவில்லை. பிறகு 1989-ல் 3-ஆவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக அண்ணன் கலைஞர் அவர்கள் வந்த பிறகு, அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, புதிய பேருந்து நிலையம் 5 ஏக்கர் பகுதியிலே அமைக்கப்பட்டு, இப்போது புறநகர் பேருந்துகள் எல்லாம் அங்கு நிற்கின்றன. மீதமுள்ள 4 ஏக்கர் 91 சென்ட் நிலம் நகரப் பேருந்து நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பச்சையப்பன் என்பவர் 1984-லிருந்து அந்த நிலம் தனக்குச் சொந்தம் என்று அவர் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டு, அவர் அப்போதிருந்த அ.தி.மு.க. வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், இவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களிடத்திலே விண்ணப்பம் கொடுத்து, அதிலே 1984-லே அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும், அப்போதைய அ.தி.மு.க. வருவாய்த் துறை அமைச்சரும், அப்போதைய கூட்டுறவுத் துறை அமைச்சரும்,

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2000 மே 9

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், புதிய பேருந்து நிலைய நிலத்தை உரிமை கொண்டாடிவரும் திரு. பச்சையப்பன் என்பவருக்கு பேராதரவு தந்து, உறுதுணையாக இருந்து, அந்த நிலத்தை அவருக்கே சொந்தமாக்க முயற்சி நடந்ததையும், திரு. பச்சையப்பன், அ.தி.மு.க.-வைச் சார்ந்தவர் என ஒரு சட்டமன்ற உறுப்பினரே, வருவாய்த் துறை அமைச்சருக்கு பரிந்துரை செய்து சிபாரிசு கடிதம் கொடுத்து அந்தக் கடிதம் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றது. அதன் மீதுதான் நடவடிக்கை எடுககப்பட்டது. பச்சையப்பன் 1984, 1985, 1991, 1992 ஆகிய ஆண்டுகளிலேயே உயர்நீதி மன்றத்திலே ஒரு ரிட் மனுவையும், சேலம் மாவட்ட முனிசிபல் நீதிமன்றத்திலே ஒரு தாவாவையும் தொடர்ந்து இருக்கிறார். இதையும் ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் புரிந்துகொள்ளாமல் இங்கே பேசுவதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

முற்பகல் 11-40

அப்பொழுது, அவர் வழக்கு தொடர்ந்தபொழுது, தலைமைச் செயளாளர், ஹரிபாஸ்கர் இருந்தார். அதைப்போல, அப்பொழுது அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை அலுவலர் எல்லோரையும் அதிலே பார்ட்டியாகப் போட்டு, அவர் வழக்குத் தொடர்ந்தார். அப்பொழுது ஒரு அமைச்சரின் தலையீட்டின்பேரில், 'நீங்கள் ஆஜராக வேண்டாம், நமக்குத்தான் சொந்தம் என்று நீங்கள் affidavit ஒன்றும், தாக்கல் செய்யவேண்டியதில்லை நீதிமன்றத்திலே' என்று oral ஆக சொன்னதை வைத்து, அவர்கள் யாரும் அதிலே affidavit போடவில்லை. அதனாலே அந்த வழக்கு . . . (குறுக்கீடு)

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்த பொதுப் பணித் துறை செயலாளருக்கு oral ஆக, அமைச்சர்......... (குறுக்கீடு) இல்லை, இல்லை, oral ஆக, (குறுக்கீடு) அப்படியென்றால், (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: நீங்கள் இருங்கள், எனக்குத் தெரிந்ததை நான் பதிலாகச் சொல்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: அப்போதைய அமைச்சர் oral ஆக சொன்னார் என்று சொன்னதால் நானும் சொல்கிறேன். (குறுக்கீடு)

2000 மே 9]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *என்ன, என்ன சொல்லப் போகிறீர்கள் நீங்கள்? (குறுக்கீடு) என்ன, என்ன சொல்லப் போகிறீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களும், திரு. சுந்தரமும் இந்த இருக்கையைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) என்னைப் பார்த்து பேசுங்கள். உங்கள் இரண்டு பேருக்குமே சொல்கிறேன், என்னைப் பார்த்து பேசுங்கள் (குறுக்கீடு) நீங்கள் நேருக்கு நேர் பேசக் கூடாது. திரு. சுந்தரம், நீங்கள் சொல்லிவிட்டீர்கள், அதற்கு அமைச்சர் பதில் சொல்லட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லட்டும், நீங்கள் சொல்லிவிட்டால், அவர் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுந்தரம் அவர்கள் சொல்கிறார்கள். 'oral ஆகச் சொன்னார் என்பதற்கு ஆதாரம் இல்லை' என்று சொல்கிறார். அப்படியானால், அந்த ஆட்சியில் தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட செயலாளர்கள், போக்குவரத்துக் கழகத்தினுடைய M.D. அவர்களெல்லாம் ஏன் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: அவர் affidavit போடாத காரணத்தாலேயே, வழக்கு Ex-parte தீர்ப்பாகி விட்டது. அப்பொழுது நாங்கள் எதிர்க்கட்சி. Ex-parte தீர்ப்பு ஆனவுடனேயே, பச்சையப்பன் அந்த இடத்திலே கொட்டகை போட்டார். 20 அடியாட்களை வைத்துக் கொண்டு அங்கு உட்காருகிறார். அப்படி உட்காருகிறபொழுது, எனக்குத் தகவல் தெரிந்து, நான் அந்த இடத்திலே போய் பார்த்துவிட்டு, அப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டேன். அவர் சொல்கிறார், 'இல்லை, கோர்ட்டில் Ex-parte தீர்ப்பாகிவிட்டது, ஆகவே, அவர் கொட்டகை போட்டுவிட்டார்' என்று சொல்கிறார். அப்பொழுது இராமையா என்பவர் கலெக்டர். அப்பொழுது அவரிடம் சொன்னேன், 'நீங்கள் ஆக்கிரமிப்பை எடுக்கிறீர்களா அல்லது பொதுமக்களைத் திரட்டிக் கொண்டு நாங்கள் எடுக்கட்டுமா' என்று கேட்டேன். 'இல்லை, இல்லை, நாங்களே எடுத்துவிடுகிறோம்' அப்படியென்று சொன்னார். 'நீங்கள் அப்பீல் செய்வதற்கு முயற்சி செய்து இருக்கலாம்' என்று சொன்னேன். Ex-parte தீர்ப்பு ஆனாலும் அதை விட்டது தவறு; அரசுக்குச் சொந்தமான இடம்; பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்து, என்று சொன்ன பிறகு, அவர் உடனே காவல் துறைக்குச் சொல்லி அங்கே கொட்டகை போட்டதையெல்லாம் அகற்றி, அதை அரசாங்கத்தினுடைய

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2000 மே 9

நிருவாகத்திற்குக் கீழே அவர் கொண்டு வந்தார். அதற்குப் பின்னாலே 1996-லே மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, அந்த வழக்கில் ex-parte செய்ததை, restore செய்யச் சொல்லி, பெட்டிஷன் போட்டு, அந்த வழக்கை மீண்டும் நாங்கள் நடத்தினோம். நடத்தி எல்லா விசாரணைகளும் முடிந்த பிறகு, எல்லாவிதமான ஆதாரங்களும் அரசு தரப்பிலே தரப்பட்டு வாதாடப்பட்டது. ஆனால் தீர்ப்பு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே, அங்கு சம்பந்தப்பட்டவர், பச்சையப்பன் என்பவர் போய் வேலி போடுகிறார். எந்த அடிப்படையிலே அவருக்கு இதில் நம்பிக்கை வந்தது என்று எனக்குத் தெரியாது. எப்படி நம்பிக்கை வந்தது என்ற விவரத்திற்குள்ளும் நான் போக விரும்பவில்லை. ஆனால் தீர்ப்பு அரசுக்குச் சாதகமாகத்தான் இருக்கும் என்ற நிலையில் நீதிமன்றத்தில் எடுத்து வைத்த வாதம், அரசாங்க தஸ்தாவேஜுக்கள், எல்லாம் சாதகமாக இருந்தும், தீர்ப்பை அவருக்குச் சாதகமாக வழங்கிவிட்டார்கள். 27-4-2000 அன்று, தீர்ப்பு இப்படி கொடுக்கப்பட்ட உடனே, மாவட்ட முன்சிப் கோர்ட்டில் அரசு வழக்கறிஞர் உடனே அப்பீல் செய்து, அந்தத் தீர்ப்பின் மேல் stay order வாங்கி, உடனே போலீசுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் தகவல் சொல்லி, அவர் வேலி போட்டதை, பச்சையப்பன் வேலி போட்டதை அகற்றி எடுத்து விட்டு இன்றைக்கு அரசாங்கத்திடம் அந்த நிலம் இருக்கிறது. இதுதான் இப்பொழுது நடந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், 1985 ஆம் ஆண்டு ex-parte தீர்ப்பு எல்லாம் ஆனவுடன், அவர் கொட்டகை போட்டபோது, நான், பொதுவுடைமைக் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய மாவட்டச் செயலாளராக இருந்த தர்மலிங்கம், இரண்டு பேர்களும் சேர்ந்து கூட்டாக அரசாங்கத்திற்குச் சொந்தமான இப்படி பல கோடி ரூபாய் சொத்துக்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருக்காக அப்போது இருந்த அமைச்சரே கையொப்பம் போட்டிருக்கிறார், ஆதாரம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக் கடிதம் இருக்கிறது. அவரும், நான் அ.தி.மு.க. காரன், எனக்கு உதவி செய்யக்கூடாதா என்று அப்போது இருந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறார். ஆகவே அ.தி.மு.க. ஆதரவோடு அந்த பச்சையப்பன் பல கோடி ரூபாய் சொத்துக்களை அன்றைக்கும் கொள்ளையடிக்க முயற்சி செய்தார். அதைத் தடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைக்கும் தடுத்துக் கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்குத் துணையாக இருப்பது அ.தி.மு.க. தானே தவிர தி.மு.க. அல்ல என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2000 மே 9]

முற்பகல் 11-45

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வீராவேசமாகப் பேசிவிட்டால், செய்த தவறை மூடி மறைக்க முடியாது. (குறுக்கீடு) நான் பேசுகிறேன். எனக்குப் பேச உரிமை இருக்கிறது. நான் பேசுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் பேசுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். என்னைப் பார்த்துப் பேசினால் பிரச்சினையில்லை. அமைச்சர் அவர்கள் அமைதியாக அமர வேண்டும். உறுப்பினர் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி மீது சுமத்தினார். அவர் இந்த விவகாரத்திலே என்னென்ன நடைபெற்றது என்பதை, கடந்த கால வரலாற்றை, சுட்டிக்காட்டி இருக்கிறார். அதற்கான ஆதாரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். இன்னமும் கையில் ஆதாரம் இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இவ்வளவு சொன்னதற்குப் பிறகும், இப்படி ஆவேசமாகப் பேசிவிட்டால் அது உண்மையாகிவிடாது என்று அவர் சொல்வது, அவர்கள் செய்த அந்தக் குற்றங்களை மூடிமறைப்பதாக இருக்கிறது. எனவே, ஒன்று, அ.தி.மு.க. காரர்கள் அப்படிப்பட்ட விவகாரத்தில் ஈடுபடவில்லை என்பதற்கான ஆதாரம் ஏதாவது இருந்தால் சுந்தரம் காண்பிக்க வேண்டும். அ.தி.மு.க. காரர்கள்தான் செய்தார்கள் என்பதற்கான ஆதாரம் அமைச்சரிடத்திலே இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சினையில் சுந்தரம் என்ன சொல்ல விரும்புகிறார்?

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே சரியாக வாதாடப்படவில்லை என்று கூறியிருக்கிறார். நான் கூறுகின்றேன். (குறுக்கீடு) பச்சையப்பன் சொல்லியிருக்கிறார். அதேபோன்று சொல்லியிருப்பதாகச் சொல்கிறார். இப்போது நான்காண்டு காலமாக நீங்கள் இருக்கிறீர்கள். இந்தக் கேசில் ஆஜரான வக்கீல் 1996 ஆம் ஆண்டு உங்களால் நியமிக்கப்பட்டவர், தி.மு.கவினுடைய இளைஞர் அணியைச்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 மே 9

சேர்ந்த ராஜேந்திரன் என்பவர். அவர் இன்று அமைச்சருக்கு வேண்டப்பட்டவர் என்று சொல்லப்படுகிறது. இந்த ராஜேந்திரனை நீங்கள் உங்கள் கட்சியின் சார்பாக நியமித்திருக்கிறீர்கள். அவருக்கு உள்ளபடியே அக்கறை இருந்திருந்தால், அந்த நிலத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று அக்கறை இருந்திருந்தால், அவர் ஏன் சரியாக வாதாடவில்லை? (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். ஏற்கெனவே அந்த நிலம் ஏரிப் புறம்போக்கு நிலம் என்று இருக்கிறது. அதற்குப் பட்டா கொடுத்தது, அது முன்பு இருந்தவர்களாக இருந்தாலும் சரி, இப்போது இருக்கிறவர்களாக இருந்தாலும் சரி, அதையெல்லாம் அவர்கள் கவனமாக watch செய்திருக்க வேண்டும். அது ஏரிப் புறம்போக்கு நிலம். ஏரிப் புறம்போக்கு நிலத்திற்கு எப்படி பட்டா கொடுக்கப்பட்டது? அது முந்தைய ஆட்சியாக இருந்தாலும் சரி, தற்போது இருக்கிற ஆட்சியாக இருந்தாலும் சரி, அதை நீங்கள் ஏன் அங்கே எடுத்து வைக்கவில்லை? நீங்கள் அங்கே எடுத்து வைத்திருந்தால், அதற்கு உடந்தையாக இருக்க முடியாது. அதைத்தான் நான் கூறுகிறேன். மாவட்ட வருவாய் அதிகாரியை நீங்கள் இதற்காகத்தான் இடம் மாற்றம் செய்திருக்கிறீர்கள் நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்துதான் இதைச் செய்திருக்கிறீர்கள் என்றுதான் நான் இதில் குற்றம் சாட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாகச் சொன்னார்கள். அரசாங்கத்திடம் இருக்கக்கூடிய ஆதாரங்கள் அத்தனையையும் நீதிமன்றத்திலே எடுத்து வைத்தும்கூட தீர்ப்பு அவருக்குச் சாதகமாக வந்துவிட்டது என்று சொல்லிவிட்டு, உண்மையிலேயே ஆளுங்கட்சியோ, அமைச்சரோ அந்த நிலத்தை அபகரிக்க வேண்டுமென்று சொன்னால் அதோடு சும்மா இருந்திருப்பார்கள். உடனடியாக 24 மணி நேரத்தில் அப்பீல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் அரசாங்கத்தினுடைய நாணயத்தையும் அமைச்சருடைய நாணயத்தையும் பாராட்ட வேண்டுமே தவிர, மேலும் குற்றச்சாட்டு சொல்வது வேண்டுமென்றே திட்டமிட்டுச் சொல்வதாகும்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுந்தரம், ஏற்கெனவே அந்த பச்சையப்பன் என்பவருக்கு உங்கள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், உங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்,

2000 மே 9] [பேரவைத் துணைத் தலைவர்]

அன்றைக்கு அமைச்சராக இருந்தவர்கள் எல்லாம் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று அமைச்சர் சொல்லிவிட்டார். அதையெல்லாம் மறுப்பது என்றால் மறுத்து, அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வதாக இருந்தால் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள். இல்லையென்றால், அடுத்தப் பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொல்கிறேன். பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவது என்று இதற்குத்தான் பெயர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதாவது அமைச்சர் தெளிவாகச் சொன்னார். நீங்கள் எடுத்து வைத்த குற்றச்சாட்டுக்கு போதிய விளக்கத்தைக் கொடுத்து, எல்லா ஆதாரமும் என்னிடம் இருக்கிறது, அதை நிரூபிக்க நான் தயார், அதுபோல, நீங்கள் நிரூபிக்கத் தயாரா, அதற்கு நான் சம்மதிக்கிறேன் என்று சொல்லிவிட்டார். ஆகையினால் . . .

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே ஒரு ஏட்டில் வந்த செய்தியை மறுத்தும், ஒரு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அதிமுக.வைச் சேர்ந்தவர் (குறுக்கீடு) தமிழ் மாநில காங்கிரசை சேர்ந்தவர் விடுத்த அறிக்கையினை மறுத்தும் நேற்றையதினம் தினமணி பத்திரிகையில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் விளக்கமாக ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையைப் படித்தாலே அந்த இடம் அரசாங்கத்திற்குச் சொந்தமாக வேண்டும், அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்ற அந்த உரிமையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்கிற தன்மையையும்தான் அந்த அறிக்கைக் காட்டுகிறது. இத்தனைக்கும் பிறகு ஏதோ பச்சையப்பன் என்பவருக்குத் தந்துவிட வேண்டுமென்ற எண்ணத்திலே வேஷம் போட்டதாகப் பேசுவது முறையல்ல. அப்படித் தந்துவிட வேண்டுமென்று எண்ணியவர்கள் யார் என்பது தெரியும். நானும் இந்தப் பிரச்சினையை 1989ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து கவனித்துக் கொண்டிருப்பவன். 1989ஆம் ஆண்டு நான் ஆட்சி பொறுப்பில் இருந்தபோதும் இந்தப் பிரச்சினை வந்தது. அதுமுதல் நீதிமன்றத்திலே அதற்காக வாதாடிக் கொண்டிருக்கிறோம். நீதிமன்றத்திலே தீர்ப்பு நமக்குச் சாதகமாக இருக்கவில்லையென்றால், வேண்டுமென்றே வக்கீலை வைத்து அப்படி வாதாடினார்கள் என்று சொல்வது முறையற்றது. இவை எல்லாம் அங்கே நடைபெறுகின்ற காரியங்கள். வக்கீல் சரியில்லையென்று சொல்லி நீதிமன்றத்தை கோபித்துக்கொள்வது, நீதிமன்றம் சரியில்லையா, வக்கீல்

சரியில்லையா என்பது வேறு விஷயம். நீதிமன்றம் அரசாங்கத்திற்கு எதிரான ஒரு தீர்ப்பை அளித்ததும், சும்மா இருந்துவிடவில்லை. ஒரு உதாரணம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.கழக ஆட்சியில் இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜை அரசுடைமையாக்கினோம். இராமச்சந்திராவினுடைய கமிட்டி உறுப்பினர்கள் அத்தனைபேரும் சம்மதித்து கையெழுத்து போட்டுக் கொடுத்து அதை அரசுடைமையாக்கினோம். அவர்கள் அரசுடைமையாக்கிய விழாவிற்குக்கூட வந்திருந்தார்கள். 1991ஆம் ஆண்டு ஆட்சி மாறியது. ஆட்சி மாறியவுடன் அவர்கள் ஒரு வழக்கு போட்டார்கள். அரசுடைமையாக்கியது செல்லாது என்று ஒரு வழக்கு போட்டார்கள். வழக்கு போட்டு உயர் நீதிமன்றத்திலே அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அரசு எடுத்தது சரியல்ல என்று. நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். தீர்ப்பு அளிக்கப்பட்ட அடுத்த ஒரு மணி நேரத்திலே கேபினெட் கூடியது. அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கே திரும்ப ஒப்படைத்துவிடுவது என்பதற்கு கேபினெட் கூடியது. இப்படி நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்க்கக்கூட எண்ணம் இல்லாமல், உடனடியாக ஒரு மணி நேரத்திலே கேபினெட் கூடி அவர்களிடத்திலே வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு ஒப்படைத்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் நாடகம் ஆடிய ஆட்சி எந்த ஆட்சி என்று எனக்கு நன்றாகத் தெரியும். இப்போது அடுத்த நிமிடமே அப்பீல் செய்து வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சியையும் பாருங்கள், இந்த ஆட்சியையும் பாருங்கள். ஒரு பழமொழி உண்டு. அந்தப் படத்தையும் பார், இந்தப் படத்தையும் பார் என்று. எந்தப் படம் சரியான படம் என்று உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரம், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள், நேரம் ஆகிறது.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் நான்கு வட்ட அலுவலகங்கள் இருக்கின்றன. நாமக்கலில் ஒரு கோட்ட அலுவலகம் உள்ளது. இராசிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்ட அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சேலம் மாவட்டத்தை நாமக்கல் மாவட்டமாக பிரித்ததற்குப் பிறகு அங்கே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை இன்னும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவிலே அதைக் கட்டி முடிக்க

வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முன்பு கூறியபடி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய மரியாதை கிடைக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, தற்போது மாவட்டத்திலே இயங்குகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்களாக இயங்கவில்லை. தி.மு.க.வினுடைய மாவட்டச் செயலாளர்களாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். படித்த அதிகாரிகளுடைய வேலை, காய்கறிகள், வெண்டைக்காய், கத்திரிக்காய், கொத்தவரங்காய் உழவர் சந்தையிலே தினமும் எவ்வளவு அங்கே விற்பனை செய்கிறார்கள் என்று காலையிலே தினமும் கணக்குக் கொண்டு செல்கின்ற வேலையைத்தான் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் கலெக்டராக இருக்கிறார். அவருக்கு நண்பர் சுந்தரம் தருகின்ற சர்ட்டிபிகேட் இது.

முற்பகல் 11-55

திரு. பி.ஆர். சுந்தரம்: நான் பேசியது-

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: சிறுபான்மை இனத்தவரை நான் என்னவோ கேவலமாகப் பேசுவதாக நீங்கள் விளக்கம் சொல்லக் கூடாது. சேலத்தில் மட்டுமல்ல, நாமக்கல்லில் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடைய வேலை, தினமும் காலையில் எழுந்தவுடன் இந்த வேலையைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த காரணத்தினால்தான் (குறுக்கீடு) அங்கே மாவட்ட நிர்வாகம் ஒழுங்காக செயல்படவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மனு நீதித் திட்டத்தையும் அவர்கள் சரியாக...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. அன்பரசன்.

***திரு. சி. அன்பரசன்:** மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகத் துறையைப் பற்றிச் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

[திரு. சி. அன்பரசன்] [2000 மே 9

மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும், வட்டாட்சித் தலைவராக இருந்தாலும், கோட்டாட்சித் தலைவராக இருந்தாலும், ஜனநாயக நாட்டிலே மக்கள் கோரிக்கைகளை தருகின்றார்களே தவிர, அவர்களிடம் கேள்வி கேட்பது இல்லை. ஆனால், ஒரு சட்டமன்ற உறுப்பினரை, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை ஏன் அமைச்சரைக்கூட, வாக்காளப் பெருமக்கள், பொதுமக்கள் கேள்வி கேட்கின்றார்கள். அப்படி பதில் சொல்லவேண்டிய இடத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதைக் கவனத்திலே வைத்துக்கொண்டு, மீண்டும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கூட்டத்திலேதான் மாவட்டத்திலே உள்ள அனைத்து அதிகாரிகளும் ஒரே நேரத்தில் வருகிறார்கள். அப்போதுதான் சட்டமன்ற உறுப்பினரோ நாடாளுமன்ற உறுப்பினரோ தங்களுடைய கோரிக்கைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும். சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர்களை பார்த்து மனு கொடுப்பதும், அமைச்சர்கள் நல்ல அமைச்சர்கள்-கருணையோடு செய்து கொடுப்பதையும் இன்றைக்குப் பார்க்கின்றோம். ஆனால் அது நாட்டு மக்களுக்குத் தெரிவதில்லை. நாட்டு மக்களுக்கு சட்டமன்றத்திலே பேசுகின்றபோது தெரிகின்றது. இதுபோன்று மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலே பேசுகின்றபோது, அது விளம்பரம் ஆவதற்கு வழிவகுக்கின்றது என்பதைக் கூறி, சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள் தருகின்ற பதிலை வாரத்திற்கு ஒருமுறை என்றோ அல்லது குறிப்பிட்ட காலக்கெடுவை வைத்தோ, அந்தப் பதிலைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ம்ாவட்ட ஆட்சித் தலைவருக்கு நகராட்சி, ஒன்றியங்கள் போன்றவற்றிலிருந்து மக்களிடமிருந்து வருகின்ற குறைபாடுகளையும் மனுக்களையும் ஏற்று, பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கவோ, அரசுக்குப் பரிந்துரை செய்யவோ அனுமதி வழங்கவேண்டும். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு நகராட்சியிலே நடைபெறுகின்ற பிரச்சினைகளைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அதை மாற்றவேண்டும். சுருக்கமாக, சிகப்பு நாடா முறையை ஒழிக்க வேண்டும். நிர்வாகத்திலே இருக்கின்ற கருப்பு ஆடுகளை விரட்டவேண்டுமென்ற உணர்வோடு இந்த அரசு நல்ல நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

2000 மே 9] [திரு. சி. அன்பரசன்]

வருமான வரியைப் பொறுத்தவரையில், அரசு 70 விழுக்காடு வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக தமிழக அரசு—டாக்டர் கலைஞர் அவர்கள், வணிகர்களை அழைத்துப் பேசி, பேரம் பேசாமல், பேதம் பார்க்காமல், எல்லோருக்கும் நல்லதைச் செய்யவேண்டுமென்று, திறந்த மனதோடு வரிகளைக் குறைத்திருக் கின்றார்கள். சில வரிகளைச் சீர் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், நம்முடைய அரசாங்கத்தின் இந்தப் புதிய வரி விதிப்புக் கொள்கையைப் பாராட்டுகின்றேன்.

அதேநேரத்தில், மாநில நிதி அமைச்சர்கள் டெல்லியிலே கூடிப் பேசுகின்ற நேரத்தில் இந்த சமச்சீர் வரிவிதிப்பை ஆராய்ந்து, நமது அரசாங்கம் தெரிவித்த கருத்துகளை நிலையாணைக் குழுவும், மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு பாராட்டியிருக்கின்றன. அப்படி பாராட்டுதற்குரிய பணிகளை ஆற்றி வருகின்ற நம்முடைய தமிழக அரசு, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளைச் சொல்லி இருக்கின்றார்கள், அவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும்.

நண்பகல் 12-00

அதைப்போல சலவை சோப்பு. இந்த சோப்பைத் தயாரிப்பதிலே நம்முடைய வணிகர்கள், நம்முடைய தொழில் அதிபர்கள், மகாராஷ்டிரா மாநிலத்திலே உள்ள மிகப் பெரிய வணிக கம்பெனிகளோடு போட்டியிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு மூலப்பொருள் குறைந்த கட்டணத்திலே, குறைந்த செலவிலேயே கிடைத்து விடுகிறது. அப்படிப்பட்ட வணிகப் போட்டியில் நாம் பங்கேற்பதற்கு—கேரளாவிலே 8 சதவீதம் என்று வரி விதிக்கப்படுகிறது, பாண்டிச்சேரியிலே வரியே இல்லை; இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த எல்லைப்புறத்திலே உள்ள சோப்பு தயாரிக்கிற தொழிலாளர்கள் மிகப் பெரிய போட்டிகளைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றார்கள். அப்படிப் பணியாற்றக்கூடிய, அந்தத் தொழிற்சாலைகளை நடத்துகின்ற முதலாளிகளுக்கும், சிறு வணிகர்களுக்கும் எஸ்எஸ்ஐ. திட்டத்திலே அந்தத் தொழிற்சாலையை நடத்துகின்றவர்களுக்கு முதலீட்டு அளவை 3 கோடியாகக் கருதி அவர்களுக்கு இப்போது விதிக்கப்படுகிற 16 சதவீத வரியிலேயிருந்து 8 சதவீதமாக குறைத்து, கேரள வணிகர்களோடு இவர்களும் போட்டியிடுகின்ற வாய்ப்பை உருவாக்கி, சமச்சீர் முறையை ஏற்படுத்தவேண்டும். அதைப்போல ஓமியோபதி மருந்துகளுக்கும்,

[திரு. சி. அன்பரசன்] [2000 மே 9

ஆயுர்வேத மருந்துகளுக்கும் வரிக் குறைப்பு செய்யவேண்டும். இந்த அரசு வணிகர்களோடு பேசி எப்படி திறந்த மனதோடு திறந்த புத்தகத்தைப் போல பணியாற்றி வருகின்றார்களோ, அதைப்போல தொடர்ந்து பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. இராமச்சந்திரன்.

திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் குறித்த இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாவட்ட நிர்வாகம் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோரும் உணர்ந்த ஒன்றாக இருக்கிறது. நிர்வாகத்திலுடைய எந்தச் சீரமைப்புகளாக இருந்தாலும், அது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்துகின்ற அமைப்புதான் இன்றைக்கும் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1969-லே மனு நீதித் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே அதே மனு நீதித் திட்டத்திலே மாறுதல் செய்கின்ற வகையிலே 1997 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக வந்த பின்னால், அதிலே ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து மாதம் ஒரு முறை, புதன்கிழமை, ஏதாவது ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவரோ மற்ற அலுவலர்களோ அந்தக் கிராமத்திற்குச் சென்று, சுற்றியுள்ள கிராமங்களின் தேவைகளையெல்லாம் அறிந்து சரி செய்து, அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி, நடைமுறைப் படுத்திய அரசுதான் இந்த அரசு.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம், இன்றைக்கு முதல்வர் 12 மணி அளவிலே எங்களிடம் பேசுகின்றார், ஒரு மணிக்கு தொடர்பு கொண்டு எங்களிடம் பேசுகிறார் என்கிற அளவுக்கு நடைமுறையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்—சொல்கிறபோது—சட்டமன்ற உறுப்பினர்களிடம் எங்களிடம் பேசுவார். அப்போது அவரிடம் நாங்கள் கேட்பது, ஒரு மணிக்குக்கூட ஒரு மணிக்கு எல்லாம் எங்களைத் தொடர்பு கொள்கிறீர்களே உங்களுக்குச் சிரமமாக இல்லையா என்று கேட்போம். அப்போது அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்வார். எங்களிடம் முதலமைச்சரே ஒரு மணிக்குப் பேசுகிறார். அவர் தூங்காமல் இந்த நாட்டுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அதே சமயத்திலே உங்களுடைய உள்ளாட்சித் துறை

2000 மே 9] [திரு. மா. இராமச்சந்திரன்]

அமைச்சர் அவர்கள் எங்களிடம் 12 மணி அளவில் பேசுகிறார். அவரும் தூங்காமல் பணியாற்றுகிறார். இரவெல்லாம் தூங்காமல் பணியாற்றுகிற அவர்களைப் பார்க்கிறபோது நாங்களும் தூங்காமல் பணியாற்ற வேண்டும். நாங்களும் இரவு முழுவதும் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம், இப்படிப்பட்ட முதலமைச்சர், அமைச்சர்களைப் பெற்றிருக்கிற நாடு என்று சொல்லி நாங்களும் பணியாற்றுகிறோம் என்ற அந்த நடைமுறையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களை இந்த மாநிலம் பெற்றிருக்கிறது. அது மாவட்ட ஆட்சித் தலைவர்களை குறைவாக மதிப்பிடுவது அல்ல. விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த உழவர் சந்தைக்கு கொண்டுவருகிற பொருட்களை—காலையிலே 6 மணிக்கு அந்தச் சந்தை தொடங்க வேண்டும்—மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தச் சந்தைக்கு என்ன பொருட்கள் வருகின்றன, எவ்வளவு வருகின்றன என்பதைக் கணக்கிடுகிற முறை இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை சரியாக செயல்படுத்துகிறார்களா என்று பார்க்கிற நிகழ்ச்சியைத்தான், ஆய்வு செய்கிற நிகழ்ச்சியைத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்து கொண்டு இருக்கிறார். அது கேவலாமானது அல்ல. அதைக் குறை சொல்வது உழவர்களைக் கேவலப்படுத்துவது ஆகும். ஆகவேதான், மாவட்ட ஆட்சித் தலைவர் செய்கிற காரியம், உழவர்களுக்கு செய்கிற காரியம்; இந்த முதலமைச்சருக்கு செய்கிற காரியம்; இந்த நாட்டுக்கு செய்கிற காரியம் என்பதை நாம் மரியாதையோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-05

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பல்வேறு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் மாவட்டத்தைப் பிரித்தார்கள்; ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அமர்வதற்கு ஒரு இடத்தைத் தந்தார்களா, கட்டட வசதிகளைத் தந்தார்களா, என்றால் இல்லை. இன்றைக்கு 11 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அலுவலகக் கட்டடங்கள் கட்டி, திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றன. புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டமும், ஒவ்வொரு வட்டமும் கணினிமயமாக்கப்பட வேண்டுமென்று சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவிலும், திருவாரூர் ஜில்லாவிலும் கணினிமயமாக்கப்படுவதை முன்னிட்டு, தஞ்சையிலே கணினிமயமாக்கப்படுகிற நிகழ்ச்சியையும், திருவாரூரிலே

கணினிமயமாக்கப்படுகிற நிகழ்ச்சியையும் நம்முடைய முதலமைச்சரே நேரடியாக வந்து அவற்றைத் தொடங்கி வைக்கிறார். கணினியை அவரே இயக்குகிறார்; கணினியையும் கற்றுக்கொண்டு இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் என்பதை நாமெல்லாம் நினைக்கிறபொழுது நம்முடைய உள்ளமெல்லாம் பூரித்துப் போகிறது. இன்றைக்கு கணினிமயமாக்கப்படுகிற திட்டப்படி, ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகமும் கணினிமயமாக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, வட்டாட்சியர் அலுவலகத்திலே சான்றிதழ்கள் பெறுவதிலே சிரமம் இருக்கிறது; கிராம நிர்வாக அலுவலர், வருவாய் அலுவலர், வட்டாட்சியர் என்கிற தொடர்பு வருகிறபோது, சாதிச் சான்றிதழோ, வருமானச் சான்றிதழோ பெறுவதற்கு சிரமம் இருப்பதை அறிந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு சாதிச் சான்றிதழ்களை, வருமானச் சான்றிதழ்களை தலைமை ஆசிரியரே, மாணவர்கள் பயிலுகிற பள்ளியிலே தரவேண்டுமென்கிற ஒரு நல்ல முறையை ஏற்படுத்தித் தந்து, ஒரு முறையான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்; அப்படி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேசமயத்தில், கணினியிலே ஒன்று செய்யலாம். என்னவென்று சொன்னால், மனு கொடுக்கிறபோது, கணினியிலே அந்த மனுவை ஏற்றுகிற தேதியையும், இத்தனை நாட்களில் நீங்கள் வர வேண்டும்; இந்தத் தேதியில் உங்களுக்குச் சான்றிதழ் அளிக்கப்படும் என்கிற நடைமுறையையும் அதிலே பின்பற்றினால், அந்த வட்டாட்சியர் அலுவகத்திலே அதை நடைமுறைப்படுத்துவதிலே சிரமம் இருக்காமல், காலதாமதம் ஆவதைத் தவிர்க்க முடியும். ஆக, கணினியிலே அதையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் நன்றாக இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

அதுமட்டுமல்ல, நிலத்தை வகைப்படுத்த வேண்டுமென்று ஒன்று இருக்கிறது. ஏனென்று சொன்னால், ஆங்கிலேயர் காலத்திலே நிலத்தை வகைப்படுத்தினார்கள். இது ஏரிப் புறம்போக்கு, இது மேய்ச்சல் புறம்போக்கு, இது சாதாரண புறம்போக்கு என்று வகைப்படுத்திய ஒன்று, நீண்ட காலத்திற்குப் பின்னால் அவை எல்லாம் மாறிவிட்டன. இன்றைக்கு ஏரிப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, மற்ற நிலங்கள் எல்லாம் வெவ்வேறு மாதிரியான சூழ்நிலையிலே மாறி இருக்கின்றன. அவற்றை வகைப்படுத்துகிற வகையில், மாற்றுகிற ஒரு நிலைமையை உருவாக்குகிற தன்மையை நம்முடைய அரசு ஏற்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, அதைக்கூட எளிதாக்குகிற முறையிலே நம்முடைய முதல்வர் அவர்கள், 10 ஆண்டுகள் குடியிருக்கிறவர்களுக்குப் பட்டாக்கள் வழங்க

வேண்டுமென்றும், அது ஆணையர் அலுவலகம் மூலம் நில மாற்றத்திற்கு வரவேண்டியது இல்லை; அந்த நில மாற்றத்தை மாவட்ட ஆட்சித் தலைவரே ஏற்படுத்திக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறார். 10 ஆண்டுகள் என்பது மட்டுமல்ல, 2 ஆண்டு காலம் அங்கே குடியிருப்பவர்கள்கூட பட்டாக்கள் பெறலாம்; அதை மாவட்ட ஆட்சித் தலைவரே செய்து கொடுக்கலாம் என்ற ஆணையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசு இந்த அரசுதான். மக்களுக்குப் பட்டாக்கள், குடியிருப்பவர்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு எளிமையாக்குகிற முறையை, நடைமுறையைத் தந்துகொண்டிருக்கிறார்கள். ஆக, இப்படியெல்லாம் சிறந்த ஆட்சி நடத்துகிற இந்த ஆட்சியைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் சொல்கிறபோது குறை கூறினார்கள். ஒரு நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று சொன்னால், அதில் வழக்காடுகிற வழக்கறிஞர் முறையாகச் சொல்கிறாரோ, இல்லையோ, ஆனால் நீதிபதி அவர்கள் தன்னுடைய mind-ஐ apply செய்து,— தன்னுடைய அறிவைச் செலுத்தி—சரியான ஆவணங்கள் இருக்கின்றனவா என்பதை முறைப்படுத்தி, அறிந்து, முறையாகத் தீர்ப்பு எழுத வேண்டியது நீதிபதியினுடைய கடமை.

பிற்பகல் 12-10

அங்கே வழக்கறிஞர் சொல்லுகிறாரா, சொல்லவில்லையா என்பது வேறு விஷயம். ஆனால் அது முறையாக இருக்கிறதா, ஆவணங்கள் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்து, தீர்ப்பு அளிக்க வேண்டியது நீதிபதியின் நடைமுறையாக இருக்க வேண்டும். இதில் வழக்கறிஞர்களை குற்றஞ்சாட்டுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. புரியாதவர்கள்தான் அப்படிச் சொல்வது வழக்கம். ஆகையால் ஒரு நீதிபதி தீர்ப்பு அளிக்கிறபோது அந்த ஆவணங்கள் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்து தீர்ப்பு அளிக்க வேண்டும். ஆகவே, வழக்கறிஞர்களைக் குற்றஞ்சாட்டுவது முறையல்ல. அரசு மேல் முறையீடு செய்து, மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற நேரத்தில், அதைக் குறித்து விவகாரங்களை வெளியிலே பேசுவது முறையல்ல. அந்த நடைமுறையை சட்டமன்றத்திலும் பின்பற்ற வேண்டும் என்கிற நிலையில் நாடறிந்த விஷயத்தை நாமும் நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறோம். நீதி மன்றத்திலே இருக்கிற ஒரு விஷயத்தை, பத்திரிகையிலே வர வேண்டுமென்பதற்காக இங்கே பேசுவது முறையாக இருக்காது. இந்த நடைமுறையை எல்லா வகையிலும் இந்தச் சட்டமன்றத்தில் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

இன்றைக்குப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். இதை

[திரு. மா. இராமச்சந்திரன்] [2000 மே 9

நாமெல்லாம் புரிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக, என்னுடைய தொகுதியிலே நேற்றைய இரவிலே இடி விழுந்து ஏழை குடும்பத்தைச் சேர்ந்த குமாரசாமி என்ற 24 வயது இளைஞர் இறந்துவிட்டதாக எனக்குத் தகவல் வந்தது. அந்தத் தகவல் வந்தவுடன் நான் தாலுகா அலுவலகத்தையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர்கள் அதுகுறித்து நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். 'நாங்கள் அதுகுறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம், எல்லா நடவடிக்கைகளையும், ஏற்பாடுகளையும் செய்கிறோம்' என்று அவர்கள் சொன்னதைக் கேட்டபோது, அங்கே அலுவலர்கள் எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறார்கள் என்பது புரிந்தது. அதற்குக் காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிக வேகமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் வேகமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறபோது, நாமும் செயலாற்ற வேண்டுமென்று எண்ணுகிறார்கள். பந்தயக் குதிரை போல முதல்வர் அவர்கள் நடைபோடுகிறபோது, ஓடுகிறபோது முதல்வருக்குப் பின்னாலே ஓடுகிற ஒருவராக நாங்களெல்லாம் இருக்க வேண்டுமென்றுதான் அவர்கள் எண்ணுகிறார்கள். மர்வட்ட ஆட்சித் தலைவர்கள் இப்படி எண்ணுகிறார்கள். சனி, ஞாயிறு என்றுகூட பார்ப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட பணியாற்றுகிற மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பார்க்கிறோம். நாங்கள் நிகழ்ச்சிகளை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில்தான் நடத்துகிறோம். அவர்கள் அதற்கு ஒத்துழைக்கிறார்கள் என்பதை அனைவரும் மனதிலே கொள்ள வேண்டும். அவர்களை மனதாரப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப்படி ஒவ்வொன்றாகப் பார்க்கிறபோது கிராம நிருவாக அலுவலர்கள் சில சிரமங்களைத் தருகிறார்கள் என்கிற வகையிலே அவர்களெல்லாம் அவர்களுடைய ஊரிலேயே, எந்தெந்த ஊர்களைச் சேர்ந்தவர்களோ, அந்தந்த ஊரிலேயே அவர்கள் பணியாற்றுவதற்கு ஏதுவாக ஏற்பாடு செய்தால் அவர்கள் தவறு செய்வதற்கு வாய்ப்பிருக்காது. அவர்கள் தவறு செய்தால் அவர்கள் உறவினர்களோ, அந்த ஊர்க்காரர்களோ அவர்களைக் கண்டித்துக் கேட்கமுடியும். (மணியடிக்கப்பெற்றது) ஆகவேதான் கிராம நிருவாக அலுவலர்கள் அவர்களது சொந்த ஊரிலேயே பணியாற்ற வேண்டுமென்று எண்ணுகிறோம்.

மாவட்ட நிருவாகத்திலே வருவாய் ஆய்வாளர்களாகப் பணியாற்றுபவர்கள் வாகன வசதியில்லாமல் இருப்பதை உணர்ந்து, அவர்களுக்கு அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கான

2000 மே 9] [திரு. மா. இராமச்சந்திரன்]

ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைச் செய்துகொடுத்தால் வருவாய் அலுவலர்கள் சரியாகச் செயலாற்றுவதற்கு வாய்ப்பான ஒரு சூழ்நிலை ஏற்படும். 4,5 கிராமங்களை அவர்களுடைய ஆளுகைக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். பல்வேறு காரியங்களைச் செய்வதற்கு இந்த வாகன வசதி ஏதுவாக இருக்கும்.

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிராம நிருவாக அலுவலர்கள் அந்த ஊரிலே 10-00 மணியிலிருந்து பணியாற்ற வேண்டுமென்கிற சூழ்நிலை இருக்கிறது. காரணம், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே போகிறபோது அவர்கள் இல்லையென்றால் (மணியடிக்கப்பெற்றது)—ஒரு நிமிடம் பேச அனுமதி கொடுங்கள்— அவர்களை வேலையிலிருந்து suspend செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. இதுபோல ஒவ்வொரு கிராம நிருவாக அலுவலரும் ஒவ்வொரு கிராமத்திலும் காலை 10-00 மணியிலிருந்து பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் உருவாக்கிக்கொள்ள வேண்டும். நான்கூட ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டேன். கிராம நிருவாக அலுவலர்கள் அந்தந்த கிராமங்களிலே இருப்பதில்லை, அவர்கள் சரியாகச் செயல்படுகிறார்களா என்று கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். கிராம நிருவாக அலுவலர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது சிரமமாக இருக்கிறது என்றும், அதே சமயத்தில் ஏதாவது ஒரு நிகழ்ச்சி குறித்து கிராம நிருவாக அலுவலரிடத்திலிருந்து தகவல் வரவில்லை என்று சொன்னால், அதுகுறித்து காவல் துறையிலிருந்து தகவல் வருகிறது என்று சொன்னால், அந்தக் கிராம நிருவாக அலுவலர் சரியாகச் செயல்படவில்லை என்று சொல்லி, அவர் மீது நடவடிக்கை எடுக்கிற சூழ்நிலையை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்தமாதிரி சூழ்நிலையை எல்லா இடங்களிலும் உண்டாக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) அப்போதுதான் அவர்கள் ஏழையெளிய மக்களுக்குச் சிறப்பாகப் பணியாற்ற முடியும். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு விஷயம். நம்முடைய மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் சொல்லச் சொல்லியிருக்கின்றார். அது வணிக வரித் துறை குறித்தது. கேரளாவைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியில் இருக்கிற உரங்களை லாரிகளில் ஏற்றிக் கொண்டு போய்விடுகிறார்கள். இங்கிருக்கின்ற மக்களுக்கு, விவசாயிகளுக்கு அந்த உரங்கள் கிடைப்பதில்லை. இவர்கள் பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லாமல் அவ்வளவு உரமும் கேரளாவிற்குப் போய்விடுகின்றது. அப்படிக் கொண்டுசெல்வதற்கு எந்தவிதமான நடைமுறையோ அல்லது

கொண்டு செல்லும் உரத்திற்கு வரியோ இல்லை. ஆகவே, அப்படிக் கொண்டு செல்கிற உரத்திற்கு ஒரு நடைமுறையை பின்பற்றுகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதனால் தமிழகத்திற்குப் பயன் கிடைக்கும் என்று அவர் சொல்கிறார். ஆகவே, ஒரு நடைமுறையை உருவாக்க அரசு ஆராய வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன்

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, எனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சீயக்காய் பொடிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. அப்படி வரிவிலக்கு அளிக்கப்பட்ட பிறகு தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அந்த வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் தங்களது Return Statement-ஐ submit செய்யும்போதுகூட அந்த அதிகாரிகள் வரி கேட்கவில்லை. ஆனால் 21 மாதங்கள் கழித்து, சுத்தமான சீயக்காய் தூளுக்குத்தான் வரி விலக்கு அளித்திருக்கிறோம். இது சுத்தமான சீயக்காய் தூள் அல்ல. ஆகவே நீங்கள் வரி கட்ட வேண்டுமென்று வரிச் சுமையை அவர்கள் மீது சுமத்திவிட்டார்கள். சீயக்காய் தூள் சுத்தமாகப் பயன்படுத்த முடியாது. கண்கள் எல்லாம் எரியும். அதை ஏழைகள் 25 பைசா, 50 பைசா என்ற பொட்டலங்களாக வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். அதன்பிறகு 1999-2000ஆம் ஆண்டில் பட்ஜெட்டில் அதற்கு 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. அதுபற்றிப் பிரச்சினை இல்லை. ஆனால், வரிவிலக்கு அளிக்கப்பட்ட காலத்திற்கு, அவர்கள் மக்களிடமிருந்து வரி வசூல் பண்ணாத நிலையிலே, அதை மொத்தமாகக் கேட்பது என்ன நியாயம் என்பதை நான் கடந்த வருஷம் இந்த அவையிலே தெரிவித்தேன். அதனால் அந்த உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிப்படைந்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 15 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய் என்று வரி கேட்பு ஆணையை அனுப்பி, ஜப்தி நடவடிக்கை எடுப்போம் என்று கூறி, நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனென்று சொன்னால் இது பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஒன்று. ஆகவே, உடனடியாக அந்தக் குறிப்பிட்ட இரண்டாண்டு காலத்திற்கு—வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்த

அந்த இரண்டு ஆண்டுகாலத்திற்கு—வரி கேட்பதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த அவையில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல சமச்சீர் வரி முறையிலே பெயிண்டுகளுக்கு எல்லாம் 12 சதவீதம் வரிதான் மத்திய அரசு விதித்திருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் 16 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இதனால் நம்முடைய மாநிலத்தில் இருக்க வேண்டிய வியாபாரம் வெளி மாநிலங்களுக்குச் சென்றுகொண்டிருக்கிறது. வரியிலே பல்வேறு மாற்றங்களைச் செய்து சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக இதை உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஏனென்று சொன்னால், அவர் காலத்தில்தான் ஒருமுனை வரியெல்லாம் விதிக்கப்பட்டு, வியாபாரிகள் நல்ல நிலையிலே இன்று வரி செலுத்தி, நேர்மையாக நடந்துகொள்ளக்கூடிய வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆகவே, இதைக் கவனத்தில்கொண்டு அந்தப் பெயிண்டுகளுக்கான வரியை 16 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கைப் பம்பு, நிலத்தடி நீரை எடுக்கப் பயன்படுத்தக்கூடிய மோட்டார்களுக்குரிய செக்-வால்வுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய தோலினால் தயாரிக்கப்பட்ட வாஷர். அதை குடிசைத் தொழில் மாதிரி கைகளினால் தோலினை வைத்துக்கொண்டு செய்கிறார்கள். இதற்கு 12 சதவீத வரி இருக்கிறது. முடிந்தால் அதற்கு வரி விலக்கு கொடுக்கலாம் அல்லது குறைத்தாவது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வாலாஜா மற்றும் வாணியம்பாடி போன்ற பகுதிகளில் கையினால் செய்யப்படும் நிலக் கம்பளம், தரைக் கம்பளம் என்று சொல்வார்கள். அது முழுக்க, முழுக்க ரொம்பக் குறைந்த விலையிலே கைத்தறிப் பொருள்களுக்கு உரிய பட்டியலில் வருகிறது. அதற்கு வரி போட்டால் மற்ற மாநிலங்களுக்குச் சென்று விற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எங்கே குளிர் அதிகமாக இருக்கிறதோ, அங்கே சென்றுதான் விற்கமுடியும். அது குடிசைத் தொழில் மாதிரி நடக்கிறது, அதற்குள்ள வரியை ஏற்கெனவே வரி வாங்காமல் இருந்தார்கள். கடந்த காலமாகத்தான் வரி வசூலிக்க ஆரம்பித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, கடந்த 5 ஆண்டுகளுக்கு மறு ஆய்வு செய்து, அதற்கும் வரிவிதிக்க வேண்டுமென்று அதிகாரிகள் முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முறை தவறானது. ஆகவே, அந்தப் பொருளை வரி விலக்கு உள்ள பொருளாக அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், கடந்த 5 ஆண்டுகளுக்கு உள்ள ஆய்வைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 மே 9

அதுபோல கழிவுப் பஞ்சுக்கு வரி 8 சதவீதமாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டும். ஏனென்றால் பஞ்சுக்கு 2 சதவீதம் வரி, நூலுக்கு 2 சதவீதம் வரி, 4 சதவீதம் வரி என இரண்டு மாதிரியாக வரி போடுகிறார்கள். ஆனால் அதிலிருந்து வருகிற கழிவுப் பஞ்சுக்கு மாத்திரம் 8 சதவீதம் என்கிறபோது, இங்கேயிருந்து அஸ்ஸாம், குஜராத் போன்ற மாநிலங்களுக்குச் சென்று விற்க வேண்டியிருக்கிறது. அதனாலே குஜராத் போன்ற மாநிலங்களில், வெளிமாநிலங்களில் செல்லும்போது இதற்கு 4 சதவீதம் உள்ளூர் வரியைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். ஆகையினால் அந்தமாதிரி நாம் தூரமாகச் செல்லும்போது டிரான்ஸ்போர்ட் செலவு வேறு அதிகமாகிறது. அதனால் அந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல மொச்சை, காணம், அவரை, பீன்ஸ், பட்டாணி, காராமணி போன்ற பொருள்களைக் குறைந்த அளவுதான் மக்கள் consume செய்கிறார்கள். குறைந்த அளவுதான் பொருள்கள் தேவைப்படுகின்றன, விற்பனையாகின்றன. ஏற்கெனவே பலவிதமான உணவுப் பொருள்களுக்கு, பட்டாணி பருப்பு, கொண்டைக் கடலை போன்ற பொருள்களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம். ஆனால் இது சின்ன பொருள், கொஞ்சமாக consume செய்யப்படும் பொருள். இதனால் அதிகாரிகளின் வேலைப் பளு அதிகரிக்கும். இதிலே கணக்கு காட்டுவதில் சிரமப்படுகிறார்கள். பெரிய வருவாய் ஈட்டக்கூடிய பொருள் அல்ல. ஆகவே, இவற்றையும் வரி விலக்குப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, எண்ணெய்க்கு வரி இல்லை, கடலைக்கு வரி இல்லை. ஆனால் பருப்புக்கு மட்டும் வரி விதிக்கப்படுகிறது. நம்முடைய உறுப்பினர் திண்டுக்கல் மணிமாறன் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். நிலக்கடலைக்கு வரி விதிக்கப்படுவதில்லை. ஆனால் அதிலிருந்து வரக்கூடிய பருப்புக்கு வரி விதிப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதையும் எடுத்துவிடலாம் என்ற ஆலோசனையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைக்கிறேன்.

அதுபோல பிண்ணாக்குக்கு உள்ள வரியை எடுக்க வேண்டும். எண்ணெய்க்கு வரியில்லை என்றபோது பிண்ணாக்குக்கு மட்டும் எதற்கு வரி? அது மாட்டுத் தீவனம். பல மாநிலங்களில் மாடுகள் எல்லாம் செத்துக்கொண்டிருக்கின்றன. நமது மாநிலத்தில் அந்தமாதிரி நிலைமை வராமல் இருப்பதற்கு சந்தோஷமாக இருக்கிறோம். ஆகவே, முன்கூட்டியே அந்தமாதிரி வரிகளையெல்லாம் எடுத்துவிடலாம். வயலுக்கு இயற்கை உரமாகவும் அந்தப் பிண்ணாக்கு இருக்கின்றது.

2000 மே 9]

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. நிஜாமுதீனுடைய பேச்சைப் பார்த்தால் இனிமேல் அரசாங்கத்தில் வரி என்கின்ற வார்த்தையையே எடுத்துவிடலாம்.

பிற்பகல் 12-20

திரு. ஜி. நிஜாமுதீன்: இப்போது Income tax, Sales tax என இரண்டு வரிகள் இருக்கின்றன. Direct tax அல்லது indirect tax-ல் ஏதாவது ஒன்றைப் பின்பற்றினால் வரி ஏய்ப்பு என்றே இல்லாமல், நம் மாநிலத்திற்கு அதிகமான வருவாய் வரக்கூடியதாக இருக்கும். இரண்டு நிலைகளில் வரி விதிப்பது தவறுதானே? அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வார் என்று நம்புகின்றேன்.

அதுபோல வறுகடலைக்கு வரி இருக்கிறது. கொண்டைக் கடலையை வறுத்து எடுக்கப்படுகிற பொருள்தான் வறுகடலை. கொண்டைக் கடலைக்கு வரி இல்லை. கொண்டைக் கடலை நம் மாநிலத்தில் உற்பத்தியும் இல்லை. அதற்கு வரிவிலக்கும் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதில் எந்தப் பொருளும் சேர்க்காமல் வெறும் வறுத்து எடுக்கக்கூடிய வறுகடலைக்கு மாத்திரம் வரி இருப்பது நியாயமாக இல்லை. ஆகவே, அதற்கும் வரிவிலக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல எண்ணெய் வகைகள் 100 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையானால் வரி போடுகிறார்கள். 4 சதவீதம் விற்பனை வரி, 2½ சதவீதம் கூடுதல் வரி என்று சொல்லி மொத்தம் 6½ சதவீதம் கட்டுகிறார்கள். ஆனால அதற்குப் போட்டி இருப்பதாலும், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி ஆவதாலும், 1 சதவீதம் ஆதாயத்தில் விற்கும்போது,—100 கோடி ரூபாய் என்று வரும்போது 6½ சதவீதம் வரியைக் கட்டமுடியாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே அந்த 100 கோடி ரூபாய் என்பதை உயர்த்தி 200 கோடி ரூபாயாக வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல Paint Brush தயாரிப்பு. தமிழ்நாட்டில் அந்தத் தொழிலே இல்லாமல் போயிற்று. அதற்கு இருக்கின்ற கூடுதல் வரிதான் காரணம். மற்ற மாநிலங்களில் இருக்கும் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதை கைத்தொழில் மூலமாகவும் செய்யலாம். ஆகவே, அது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கையினால்

தயாரிக்கப்படும் சோப்புக்கு 4 சதவீதம் வரி. ஆனால் டிட்டர்ஜெண்ட் சோப்பிற்கு 16 சதவீதம். இதில் ரொம்ப variation இருக்கிறது. நிறைய difference இருக்கிறது. இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மற்ற மாநிலங்களில் பார்க்கும்போது ரொம்பக் குறைவாக உள்ளது. ஆகவே, கையினால் தயாரிக்கும் சோப்பிற்கு 4 சதவீதம் என்று இருக்கும்போது, டிட்டர்ஜெண்ட் சோப்பிற்கு 8 சதவீதம் என்றாவது குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடகு வைப்பவர்கள் வயிற்றெரிச்சலில்தான் அடகு வைக்கிறார்கள். அந்தப் பொருள்களைத் திருப்பி எடுக்க முடியவில்லை என்று சொன்னால், இன்னும் கொடுமையான வறுமை நிலைமைக்கு ஆட்படுகிறார்கள் என்று பொருள். அப்படி பொருளை அடகு வைக்கும்போது அந்தப் பொருளுக்கும் tax போட்டு அதனைக் கழிக்கிறார்கள். அந்த பாதிப்பு, அடகு வைத்த அந்த மனிதனைத்தான் சாரும். ஆகவே பாதிக்கப்பட்ட, நலிவடைந்த மக்களைக் கருத்திற் கொண்டு, ஏலத்தில் விடப்படக்கூடிய அந்தப் பொருளுக்கு வசூலிக்கப்படும் 12 சதவீதம் வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். ஏனென்றால் நன்றாக இருப்பவர்கள் யாரும் அடகு வைக்கப்போவதில்லை. ரொம்ப கஷ்ட நிலையில் இருக்கின்றவர்கள் தான் அடகுக்குச் செல்கின்றார்கள். அவர்களின் வயிற்றெரிச்சலைக் களையும் பொருட்டு அந்த வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மேல்முறையீடு, சாதாரண தனி நபர், அதிகாரி Tax statement சரியில்லை, இதற்கு மேல் 10 இலட்சம் ரூபாய் விதிக்கிறேன் என்று சொன்னால், அதற்கு அப்பீல் செய்வதற்கு 25 சதவீதம், அதாவது 2.50 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். தனி நபர் உத்தரவின் மேல் அப்படி வைக்கக் கூடாது. குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் - 6 மாத காலத்திற்குள்-நீங்கள் இதற்குரிய டாக்குமெண்டுகளை produce பண்ணுங்கள், அதற்கு மேல் நாங்கள் முடிவு சொல்கிறோம் என்று கூறி அதற்கு மேல் அந்தப் பணத்தை கட்ட வேண்டுமென்று சொன்னால் நியாயமானது. விருப்பு, வெறுப்பின் அடிப்படையிலோ அல்லது நாங்கள் ரிடையர்டு ஆகப் போகிறோம், ஆகையால் நாங்கள் கரெக்ட் ஆகத்தான் நடப்போம் என்று சொல்லி வேண்டுமென்றே வருகிறவர்களிடம் எல்லாம் 10 இலட்சம், 10 இலட்சம் என்று சொல்லி எழுதிவிட்டுச் சென்று விடுகிறார்கள். எனவே, இப்படி தனி நபர் 25 சதவீதம் டெபாசிட் கட்டித்தான் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்ற முறை சரியல்ல. இது தனிநபர் உரிமையைப் பாதிக்கக்கூடிய சம்பவமாக

223320

இருந்துகொண்டிருக்கிறது. எனவே, கால அவகாசம் 6 மாதங்கள் கொடுங்கள். அந்த 6 மாதங்களுக்குள் சரியாக டாக்குமெண்டாக நிரூபிக்கப்படவில்லை என்றால் 25 சதவீதம் கட்டிவிட்டு மேல் முறையீடு செய்யலாம் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால் இந்த நாட்டிற்கு முறையான, முழுமையான வரி கட்டுபவர்கள்தான் வணிகர்கள். அவர்கள் இல்லையென்று சொன்னால் இந்த நாடே ஸ்தம்பித்து விடும். நாம் சாதாரணமாக அரசியல் போராட்டம் என்று எந்தப் போராட்டம் நடத்தினாலும் வணிகர்களைத்தான் அடிக்கிறோம். கடையை உடைக்க வேண்டும் என்கிறோம். பந்த் பண்ண வேண்டும் என்கிறோம். ஆகவே அவர்கள்தான், நிறைய வருவாயைக் கொடுக்கக் கூடியவர்கள்தான், பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு நாட்டிலே பாதுகாப்பே இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்களுக்குப் போதிய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பூமியில் வெட்டி எடுக்கக்கூடிய கனிமப் பொருள்களுக்கு Royalty வசூலிக்கிறார்கள். Royalty என்பது எந்த அளவிற்குப் பொருள் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு வசூலிக்கிறோம். அது தவறே கிடையாது. ஆனால் அதற்கு மறுபடியும் விற்பனை வரி என்று வசூலிக்கப்படுகின்றது. அதை முறைப்படுத்த வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், TNGST பதிவு செய்யும்போது 2 partnership நிறுவனங்களில் ஒரே பார்ட்னர் இருந்தால் தனியாகப் பதிவு தரமாட்டேன் என்கிறார்கள். கேட்டால் ஒரு partnership-க்கு ஒரு நம்பர்தான் தரமுடியும் என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள். தனித்தனியாக தொழில் முனைவர்களை ஊக்குவிப்பதற்கு இது தடையாக இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே எந்தெந்த நிறுவனங்கள் பதிவு செய்திருக்கிறார்களோ, அவர்கள் தனியாகப் பதிவு செய்ய நம்பர் கேட்கும்போது கொடுப்பதிலே என்ன தவறு? ஒரே மாதிரி business ஆக இருந்தால், ஒரு நம்பர்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லலாம். ஆனால் ஒரு பதிவு ஒரு business-க்கு, இன்னொரு பதிவு இன்னொரு business-க்கு என்று இருப்பதால் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதுபோல மாவட்ட நிர்வாகத்திலே, நாகை மாவட்டம் பிரிக்கப்படும்போது கீழையூர் ஒன்றிய கடலோரப் பகுதிகளை நாகை தாலுகாவில் சேர்க்காமல், அதை கீவளூரில் சேர்த்து விட்டார்கள்.

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 மே 9

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அந்த ஏரியாவைப் பற்றி. 2 பஸ்கள் மாறிச் செல்ல வேண்டியுள்ளது. வேட்டைக்காரன்இருப்பிலிருந்து வேதாரண்யம் வரை உள்ள மக்கள் நாகப்பட்டினம் வந்து, மறு பஸ் பிடித்து திரும்ப கீவளூர் போக வேண்டியிருக்கிறது. ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். நான் அந்த அதிகாரிகளைக் கேட்கிறபோது தேர்தல் இருக்கின்றது. அதனால் இந்த நேரத்திலே செய்ய முடியாது என்று சொல்லி 3 ஆம் மாதத்திற்கு முன்னால் அனுப்பினார்கள். இப்போது தேர்தல் கட்டுப்பாடு எல்லாம் இல்லை. உடனடியாகச் செய்யலாம். போனதடவையே அந்த மக்கள் தாங்கள் தேர்தலில் ஓட்டுபோட மாட்டோம். இதைச் செய்து கொடுத்தால்தான் நிச்சயமாகச் செய்வோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வேட்டைக்காரன்இருப்பிலுள்ள மக்கள் எப்படி கீவளூர் செல்ல முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக உணர்வார்கள். அதை உடனடியாகச் செய்ய வேண்டும். இந்தத் தேர்தலிலே மறுபடியும் நாங்கள் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று கூட அறிவித்திருக்கிறார்கள்.

இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதுபோல, கிராம உதவியாளர்கள்குறித்து சில சர்ச்சைகள் எழுந்தன. (மணியடிக்கப்பெற்றது) அவர்கள் அந்த ஊர்க்காரர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற ஒரு நிலையைக்கூட குறிப்பிட்டார்கள். அந்த ஊர்க்காரர்களை நியமித்தால் அவர்கள் பாரபட்சமாக நடக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, அவ்வூர்க்காரர்களையே கிராம உதவியாளர்களாக நியமிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, V.A.O.-க்கள், அதிக காலமாக ஒரே ஊரில் குட்டி ராஜாக்கள் மாதிரி இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு promotion கொடுத்து, transfer கொடுத்து மாற்ற வேண்டும். இல்லையென்று சொன்னால், அவர்களுக்கு எல்லா ingenuities-ம் தெரியும், பலர் சட்ட விரோதமான காரியங்களுக்குத் துணை புரியக்கூடும். எல்லோரும் அல்ல, சிலர் துணை புரியக்கூடும். அதனால், அவர்களுக்குள்ள அனுபவத்திற்குத் தக்கவாறு promotion கொடுத்து மாற்று ஊருக்கு அனுப்பி, புதியவர்களை T.N.P.S.C.

2000 மே 9] [திரு. ஜி. நிஜாமுதீன்]

மூலமாகத் தேர்வு செய்து நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இறுதியாக திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு)

***திரு. இரா. மணிமாறன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் பேசுகின்றபோது பருப்புக்கு வரி உண்டு, கடலைக்கு வரியில்லை என்று சொன்னார்கள். அப்படியல்ல, பருப்புக்கு வரியில்லை. கடலைக்கு உண்டு. கடலைக்கு 4 சதவீதம் வரி இருக்கின்ற காரணத்தால் விவசாயிகளும், வியாபாரிகளும் அதைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி.

***திரு. பா. வேல்துரை**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள்-நிருவாகம், மாவட்ட நிருவாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் எல்லோரும் சொல்லிய கருத்துகளாக இருந்தாலும், நானும் அந்தக் கருத்துகள் மீது என் கருத்துகளைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பயறு வகைகளுக்கு ஏற்கெனவே வரி இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பயறு வகைகளிலே மொச்சை, காணம், அவரை, பீன்ஸ், பட்டாணி, காராமணி, தட்டை போன்ற பயறு வகைகளுக்கு வரிகள் இருப்பதை முழுமையாக நீக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, சிறு தொழிலாக, அரைவை ஆலைகளிலே அரைக்கப்படுகின்ற கடலை மாவு, பட்டாணி மாவு ஆகியவற்றுக்கு இரண்டு சதவீதம் வரி இருப்பதை நீக்கி, முழுமையாக வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொண்டைக் கடலைக்கு தமிழ்நாட்டிலே வரி கிடையாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலேயிருந்து தயாரிக்கப்படுகின்ற

பொரிகடலைக்கு வரி இருக்கிறது. அந்தப் பொரிகடலைக்கான வரியையும் நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டிலே தயார் செய்யப்படுகின்ற குளிர் பானங்களுக்கு, 5 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்பவர்களுக்கு வரி என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்குக் குறைவாக குளிர்பானம் விற்பனை செய்பவர்களுக்கு வரியை நீக்கினால், உள்நாட்டில் குளிர்பானத் தொழில் சிறப்பான முறையிலே நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, இந்த முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, 1-4-2000 முதல் பதப்படுத்தப்பட்ட பாலுக்கு வரி கிடையாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலேதான் வியாபாரிகள் மிகுந்த கஷ்டத்தைச் சொன்னார்கள். பதப்படுத்தப்பட்ட பாலுக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்து இந்த வரி நீக்கத்தை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். அது நியாயமானது. இப்போது வரியில்லை, முன்பு வரி என்று சொல்வது நியாயமாக இருக்காது. அது பால் உற்பத்தியையும் வெகுவாகப் பாதிக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோன்று, பால்கோவா தயாரிப்பதற்கு 16 சதவீத வரி இருக்கிறது. இந்த 16 சதவீத வரியை 4 சதவீத வரியாகக் குறைத்தால், உபரியாக உள்ள பாலை வைத்து, எல்லோரும் பால்கோவா தயாரிப்பார்கள். அப்படி பால்கோவா தயாரிப்பதால் அரசுக்கும் வருமானம் கூடும். பால் உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, உணவு எண்ணெய் வகைகளுக்கு 100 கோடி ரூபாய் வரை விற்பனை செய்பவர்களுக்கு வரி இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே 300 கோடி ரூபாய் வரை வரி இல்லாமல் தளர்த்த வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் நீங்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கழிவுப் பஞ்சுக்கு 8 சதவீத வரி இருக்கிறது. மற்ற மாநிலங்களில் இதைவிட வரி குறைவாக இருக்கின்ற காரணத்தால், 4 சதவீதமாக மற்ற மாநிலங்களில் இருப்பதால், நம்முடைய கழிவுப் பஞ்சை விற்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, இதிலும் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு 4 சதவீதமாகக் குறைத்து, அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, நமது மாநிலத்தில் தயாரிக்கப்படுகின்ற Paint Brush போன்றவைகளுக்கு எல்லாம் 16 சதவீதம் வரியை வைத்திருக்கிறார்கள். அதை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும். இதை மிகவும் முக்கியமாக அவர்கள் சொல்லுகிறார்கள். இதனால் Paint உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இதனை நீங்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Detergent Soap. கையினால் தயாரிப்பதற்கு 4 சதவீதம் என்று வரி இருக்கிறது. கையினால் Detergent Soap தயாரிக்க முடியாது. Machinery மூலமாகத் தயாரிப்பதற்கு 16 சதவீத வரி என்று சொல்லியிருக்கிறார்கள். Detergent Soap என்பது சாதாரணமாக கிராமங்களில் எல்லா மக்களும், ஏழை, எளிய மக்களும்தான் பயன்படுத்துகிறார்கள். வசதியுள்ளவர்கள் Surf போன்ற உயர்ந்த ரக பவுடர்களைப் பயன்படுத்தி, Washing machine-ல் போட்டுவிடுகிறார்கள். எனவே, ஏழைகள் பயன்படுத்துகின்ற Detergent Soap-க்கு 4 சதவீதமாக வரியைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த வரியையெல்லாம் அப்படிக் குறைத்தால்—குறைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். எத்தனையோ ஆயிரம் கோடி ரூபாய்க்கு இந்த நான்கு ஆண்டு காலத்திலே வரியைக் குறைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரும், மற்ற உறுப்பினர்களும் இங்கே சொன்னதுபோல, இந்த வரியையெல்லாம் குறைத்தால்—அந்த சரக்குகளினுடைய விலையைக் குறைத்து வியாபாரிகள் விற்பனை செய்வார்களா? அதற்கு எனக்கு உத்தரவாதம் வேண்டும்.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, விலையைக் குறைப்பதற்கு முன்வருவார்களா என்பதற்கு நாம் உத்தரவாதம் சொல்ல முடியாது. ஆனால், தொழில் கூடுதலாக அபிவிருத்தியாகி, அரசுக்குக் கூடுதலாக வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையைக் குறைக்கச் சொல்வது, நாம் கேட்டால்

செய்யமாட்டார்கள். நம்முடைய அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், டெபுடி கலெக்டர் போன்றவர்களெல்லாம் அங்கே சொல்லி, விலைப்பட்டியலை ஒவ்வொரு இடங்களிலும் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவருடைய யோசனை நல்ல யோசனை. அதை நடைமுறைப்படுத்தினால், அடுத்த சட்டமன்றக் கூட்டத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளால் வியாபாரிகளுக்கு அதிக தொல்லை ஏற்படுகிறது; அதை விலக்கிக்கொள்ளுங்கள் என்று பேசுவார்கள்.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டு நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துகின்ற பைப்பிற்கு 4 சதவிகிதம் வரி என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், சொட்டு நீர்பாசனத்திற்குப் பயன்படுத்துகின்ற பி.வி.சி. பைப், லேட்டரல் பைப், டிரிப்பர் போன்ற உதிரிபாகங்களுக்கு 12 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதேமாதிரி, பி.வி.சி. பைப்டிற்கு பாண்டிச்சேரியில் 3 சதவீதம், கர்நாடகத்திலே 4 சதவீதம், மகாராஷ்டிரத்திலே 8 சதவீதம், மேற்கு வங்கத்திலே 4 சதவீதம் என்று வரி குறைவாக மற்ற மாநிலங்களில் இருப்பதால், நமது மாநிலத்திலே இருப்பவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று, பி.வி.சி. பைப் போன்ற பொருட்களை வாங்குகின்ற ஒரு நிலை இருக்கிறது. நமது மாநிலத்திலே உற்பத்தியாகின்ற பி.வி.சி. பைப்பினுடைய வியாபாரம் குறைவதன் காரணமாக அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே, அந்த வரியை மற்ற மாநிலங்களைப் போன்று சமமாக விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விற்பனை வரியிலே, பல நேரங்களிலே அதிகாரிகளுடைய தவறினாலேயோ அல்லது கவனக் குறைவினாலேயோ வரிகள் அதிகமாக விதிக்கப்பட்டுவிடுகின்றன. அந்த நேரத்திலே அவர்கள் மேல்முறையீட்டிற்குப் போகவேண்டும் என்று சொன்னால், 25 சதவீதம் முன்பணத்தைக் கட்டிவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று சொல்வது நியாயமாக இருகக முடியாது. ஏனென்றால், 10 இலட்சம் ரூபாய் வரி என்று சொன்னால், 2½ இலட்சம் ரூபாயை முன்கூட்டியே கட்ட வேண்டுமென்று சொன்னால், அவர்களால் அது முடியாது; தொழிலுக்கு பாதிப்பு வரும். அதனால், அவர்களுக்கு மூன்று மாதங்களோ அல்லது நான்கு மாதங்களோ, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே அந்த மேல்முறையீட்டை முடித்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு ஆணையைப்

பிறப்பித்தால், அந்த வியாபாரிகளுக்குச் சௌகரியமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று சாதாரண ஏழை மக்கள் பயன்படுத்துகின்ற செங்கல். சாதாரண ஏழையெளிய மக்கள் கூலித் தொழிலாளியாக உழைத்து, செங்கல்லை உற்பத்தி செய்கின்றார்கள். அந்த செங்கல்லுக்கு மண் எடுக்கின்றபோதே, அரசுக்கு மண்ணிற்குரிய கூலியைச் செலுத்திவிட்டுத்தான் மண்ணை எடுக்கிறார்கள். அதற்குப் பிறகு, அதற்கு விற்பனை வரி போடப்படுகிறது. ஆக, இரண்டு வரி ஆகிவிடுகிறது. நீங்கள் மண்ணிற்கே வரி 35 ரூபாய் ஒரு லோடுக்குப் போட்டால், கூடுதலாக ஐந்து ரூபாயோ, பத்து ரூபாயோ போட்டால்கூட, கண்டிப்பாக மண் எடுக்காமல் அந்த வேலையைச் செய்ய முடியாது. மண் எடுக்கின்றபோது, அதற்கு அரசுக்கு வருமானம் சரியாகச் செலுத்தக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, செங்கல்லுக்கான வரியை முழுமையாக எடுக்கவேண்டும். மேலும் செங்கல்லுக்கு மண் எடுப்பதிலே இருக்கிற பல நடைமுறைச் சிக்கல்களையும் எளிமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கல்குவாரி. கல்குவாரியை ஏலம் விட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி ஒப்பந்தக்காரர்களெல்லாம் என்னிடத்திலே சொன்னார்கள், மாவட்டத்திலே இன்றைக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் வரி தாறுமாறாக, மூன்று வருடங்கள் கழித்து,—உடனடியாக அந்தந்த ஆண்டுகளில் போட்டிருந்தால்கூட தெரியாது, மூன்று ஆண்டுகள் கழித்து—உங்களுக்கு இவ்வளவு வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி, பல மடங்கு வரி போடப்பட்டு, இன்றைக்கு அனைவரும் மேல்முறையீட்டிற்குச் செல்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எப்படி என்று சொன்னால், கல் வாங்குகிற இடத்திலே குவாரிக்குப் பாஸ் என்று சொல்லி பணம் வாங்குகிறார்கள். பிறகு கல்லுக்கு ரேட் கொடுத்துதான் வாங்குகிறார்கள். ஆக மூன்று முறை வரி ஆகிறது. Single point tax தான் நம்முடைய தமிழ்நாட்டிலே நடைமுறையில் இருக்கிறது. ஆனால், அதேசமயத்திலே கல் குவாரிக்காரர்கள், ஒப்பந்தக்காரர்களெல்லாம் பலமுனை வரித் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே, அதை ஒழுங்குபடுத்த வேண்டும். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்களெல்லாம் மிகுந்த வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி சில கருத்துகளைச் சொல்கின்றேன். முதல்வரிடத்திலே நாங்கள் பல மனுக்களைக்

கொடுத்திருக்கின்றோம். முதல்வர் அவர்கள் அலுவலகத்திலே நாங்கள் கொடுக்கின்ற மனுக்களுக்கு, உடனடியாகச் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு கடிதம் வருகிறது. எங்களுக்கும் ஒரு கடிதம் வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் ஒரு கடிதம் போகிறது. 15 தினங்களுக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து, எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று சொல்லி, விவரமாக, நம்முடைய முதலமைச்சர் அலுவலகத்திலே இருந்து கரெக்டாகச் செய்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே இருந்து இதுவரைக்கும் 4 ஆண்டுகளிலே எந்தப் பதிலும் எங்களுக்கு வந்ததே கிடையாது. அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, என்ன செய்யப்பட்டிருக்கிறது என்ற முடிவை எங்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை. அதை உடனடியாக நீங்கள் கவனிக்க வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால்தான், எங்களுக்கு நிர்வாகத்தின்மீது முழு நம்பிக்கை ஏற்படும்; மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேமாதிரி, முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதி வழங்கப்படுகிறபோது, கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், காலதாமதப்படுத்த வேண்டுமென்று அவர்கள் நினைக்கமாட்டார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ காலதாமதம் ஆகிறது. ஏன் காலதாமதம் ஆகிறது என்பதை அறிந்து, இத்தனை நாளைக்குள் ஒருவன் இருதய ஆபரேஷன் செய்ய வேண்டும் அல்லது Kidney operation செய்ய வேண்டுமென்று சொன்னால்—கரெக்டாக இந்தத் தேதியில் அந்த ஆபரேஷன் என்ற ஒரு கடிதத்தையும் கொடுக்கிறார்கள்—அதற்கு முன்பாக, கண்டிப்பாக நிவாரண உதவி வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், குடும்பத் தலைவர் இறந்தால், இறப்பு நிதி, இழப்பு நிதி, இவையெல்லாம் உடனடியாகக் கிடைப்பதில்லை. ஒரு வருடம், இரண்டு வருடங்கள் ஆகியும் வழங்கப்படுவதில்லை. என்னுடைய தொகுதியிலே பல முறை நாங்கள் எல்லாம் கடிதம் கொடுத்துப் பார்த்துவிட்டோம். தாலுகா ஆபீஸிலே கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம். இழப்பீட்டு நிதிகள் உடனடியாக வழங்கப்படுவதே இல்லை. இதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. இதற்கு கண்டிப்பாக ஒரு முறை வகுத்து, இழப்பீட்டுத் தொகை வழங்குகிறபோது, அதை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நாங்கள், எம்.எல்.ஏ.-க்கள் பரிந்துரை செய்கிறோம்—இப்போது, நீங்கள் அந்த தொகுதி வளர்ச்சி நிதியைத் தரவில்லை என்று சொன்னால், எம்.எல்.ஏ.-க்கள் ஒரு பணிக்கும் ஆகாதவர்கள் என்ற நிலையிலேதான் நாங்கள் எல்லாம் கேட்பாரற்ற நிலையிலே இருக்கக்கூடிய நிலை இருக்கும்—அங்கே மாவட்டப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சி மன்றங்களில் எல்லாம், நாங்கள் சொல்லி, எதுவுமே செய்வது கிடையாது. இந்த 50 இலட்சம் ரூபாய் கொடுப்பதை வைத்துதான் இந்த எம்.எல்.ஏ.-க்களினுடைய- - (குறுக்கீடு) ஆம்; இப்போதெல்லாம் 60 இலட்சம் ரூபாய். முன்பெல்லாம் 50 இலட்சம் ரூபாய்; அந்த 50 இலட்சம் ரூபாயை வைத்துதான், ஏதோ கொஞ்சம் மரியாதை தொகுதியிலே இருக்கிறது. நீங்கள் முடிந்தால், அந்தத் தொகையை ஒரு கோடி ரூபாயாக மாற்றியமைத்துத் தந்தீர்கள் என்று சொன்னால் சிறப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது நாங்கள் எல்லாம் உள்ளாட்சித் துறை மூலமாக நடக்காத குடிநீர்த் தொட்டி, பைப்லைன் போன்ற இந்தமாதிரி வேலைகளுக்கு நிறைய பணம் கொடுக்கிறோம். நீங்கள் ஒரு கோடி ரூபாயைத் தந்து, இன்னின்ன வேலைகளுக்கு இவ்வளவு, இவ்வளவு பணம் கொடுங்கள் என்று ஒரு ஆணையைப் பிறப்பித்துவிடுங்கள்; அதன்படி நாங்கள் கரெக்டாகச் செய்கிறோம். ஆகவே ஒரு கோடி ரூபாயை வழங்கினீர்கள் என்று சொன்னால், மிகுந்த உதவியாக இருக்கும்; எங்களுக்கு மரியாதையும் இருக்கும். அதை நீங்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று; மாவட்டத் தலைமையிலே இருந்து ஒரு முடிவெடுத்து அங்கேயிருந்து ஒரு தபால் வருகிறதென்றால் துறைத் தலைமை நேரடியாக அதுகுறித்து ஒரு முடிவெடுக்க வேண்டும். அங்கே இருந்து—கிளார்க் எழுதி, மேல் கிளார்க் எழுதி, சூப்பரிண்டெண்டண்ட் எழுதி, எல்லாம் வந்த பிறகு, இங்கே வந்து திரும்பவும் கிளார்க் எழுதி, சூப்பரிண்டெண்டண்ட் எழுதி, இது வெள்ளைக்காரன் காலத்தில் நம்மை எல்லாம் நம்பாமல் செய்த ஒரு முறை; இப்போது இன்றும் நாம் அந்த முறையைச் செய்துகொண்டிருக்கிறோம். அங்கே இருந்து — மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தால், நேரடியாக இங்கே துறைத் தலைவர்கள், செயலாளர்கள் அதற்கு முடிவெடுக்க வேண்டும். அந்த மாதிரி நிலை இருந்தால், அந்த பைல்கள் எல்லாம் தேக்கம் ஆகாது. சீக்கிரமாக முடிவுகள் எடுக்கப்படும்.

அதேமாதிரி, துறைத் தலைவர்கள் என்று போடுகிறீர்கள். Highways, P.W.D. என்று துறைகளுக்குத் தலைவர்கள், பொறியாளர்களைப் போட்டிருக்கிறீர்கள். தலைமைப் பொறியாளர்களை வைத்திருக்கிறீர்கள்.

மற்ற துறைகளிலே சம்பந்தம் இல்லாத அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள். அது எப்படி? சம்பந்தம் இல்லாத அதிகாரிகள் பணியாற்றினால், அவர்கள் அதைப்போய் study செய்வதற்கே 6 மாதங்கள் ஆகும். அதற்குள் நிர்வாகம் பல வகைகளிலே suffer ஆகும், மிகவும் பாதிக்கப்படும் என்பதை நான் அரசுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

அடுத்து பட்டா வழங்குவது; பட்டா வழங்குவதிலே, அதை வழங்குகிற முறை எளிமைப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால், அவ்வாறு எளிமைப்படுத்துவதால், பல தவறுகள் நடக்குமோ என்று நாங்கள் நினைக்கிறோம்.- (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்கிறேன். பட்டா இப்போது யார் வழங்குகிறார்கள் என்று சொன்னால், தலையாரியும், V.A.O.-வும்தான் வழங்குகிறார்கள். அவர்கள் யாருக்குப் பரிந்துரை செய்கிறார்களோ அவர்களுக்குத்தான். எம்.எல்.ஏ.-க்கள் பரிந்துரையெல்லாம் அங்கே கிடையாது. ஆகையினால், தலையாரி, V.A.O. யார், யாருக்குப் பரிந்துரை செய்கிறார்களோ அந்த வேலைகள்தான் நடக்கின்றன. அந்த முறையை மாற்றி, open-ஆக இருக்க வேண்டும். பட்டா வழங்குவது என்பது, சட்டமன்ற உறுப்பினர், பஞ்சாயத்து தலைவர், Chairman எல்லோரையும் வைத்து பட்டா வழங்க வேண்டும். அந்த ஊரிலே பட்டா கொடுக்கிற நபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, எங்களுக்கெல்லாம் தெரிந்து, தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் யார், உண்மையாக ஏழை, அவர்கள் பட்டா வாங்குகிறார்களா, இல்லை இருக்கிறவர்கள் வாங்குகிறார்களா என்கிற நிலை தெரியும். அதைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கார்டுகளை இன்னும் இரண்டு மாதங்களிலாவது முழுமையாகக் கொடுத்துவிடுங்கள். ரேஷன் கார்டு பிரச்சினைகளால், மக்களிடம்போய் தலைகாட்ட முடியவில்லை. இந்த ரேஷன் கார்டுகளைக் கொடுப்பதைப் பார்த்தால், இரண்டு எஜமானர்களுக்கு ஒரு ஊழியக்காரன் பணியாற்ற முடியாது என்று பைபிளில் ஒரு வாசகம் இருக்கிறது. வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, பொது விநியோகத் துறை எல்லாம் சேர்ந்து இந்த ரேஷன் கடையை நடத்தினால், எப்படி இந்த உணவுப்பொருள் வழங்குதலைச் சரியாகச் செய்ய முடியும்? இதையெல்லாம் சீரமைப்பு செய்வதற்கு ஒரே துறை அதை நிர்வகிக்க வேண்டும். ஒரே துறை, அந்த ரேஷன் வழங்குவதை நிர்வாகம் செய்தால், கண்டிக்கலாம்; கேட்கலாம்; அந்தத் துறையைச் சீரான முறையிலே இயங்க வைக்கமுடியும். இதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, எங்கள் மாவட்டத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவரை யாரும் எளிதிலே அணுக முடியாது. அவர் பின்னாலே 2 கார்களிலே escort police செல்கிறது; சாதாரண ஏழை மக்கள் எல்லாம் மனுவே கொடுக்க முடியாது. அந்த அளவுக்கு அவர், 5 கார்கள், 10 கார்களோடுதான் வந்து கொண்டிருக்கிறார். பொதுமக்கள் எல்லாம் சாதாரணமாக பார்க்க முடியாது. எம்.எல்.ஏ.-க்களாகிய நாங்களே Monday Petition கொடுக்கும் நாள் அன்றைக்குத்தான் அவரைப் போய் பார்க்க முடியும். மற்ற நாட்களிலே, தொலைபேசியிலே கூப்பிட்டால்கூட, அவர் வரமாட்டார். அந்த அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களை நீங்கள் முழுவதுமாக நம்புகிறீர்கள். ஆனால் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழுமையாக, உங்களது நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-40

அதுபோல, எங்களது மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றிக் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக்கூட கொண்டு சென்றேன். நீங்கள்கூட அது தப்பு என்று சொல்லி மிகவும் வருத்தப் பட்டீர்கள். பேரவைத் தலைவர் அவர்களும் அதைச் சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்கள், அந்த ரெக்கார்டை உங்களிடம் காண்பித்தார்கள். என்னுடைய பெயர்—ஒரு புத்தக வெளியீட்டில்கூட அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் போடப்படவே இல்லை. நீங்கள் எல்லாம்—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்துரை, கொஞ்சம் உட்காருங்கள். நீங்கள் சொன்ன குறையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் காண்பித்தேன். உங்கள் முன்னாலேயே காண்பித்தேன். இப்போது உங்கள் தகவலுக்காகச் சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் உங்களுக்கே ஒரு கடிதம் எழுதி, வருத்தத்தைத் தெரிவித்து இருக்கிறார். அந்த நகல் என்னிடம் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எப்படி செயல்பட்டார்கள் என்பதில், எனக்கு நேரடியாக அனுபவம் கிடையாது. ஆனால், இப்போது நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் நல்ல முறையில் செயல்படுகிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களே, பல கூட்டங்களில் பேசி, பத்திரிகைகளிலே வெளியாகி இருக்கிறது.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், நீங்கள்தான் பதில் சொல்லப் போகிறீர்கள். அப்போது சொல்லிக் கொள்ளுங்கள். இப்போது ஏன் இடையிலே இதை வேறு சொல்லி, அப்பாவுக்கு வேறு வாய்ப்பு கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்? *(சிரிப்பு)*

திரு. பா. வேல்துரை: இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வது அவர்களுக்குச் சரியாக இருக்கலாம். அவர்கள் அமைச்சராக இருக்கிற காரணத்தினால், அவர்கள் சொல்வதையெல்லாம் அந்த கலெக்டர் கேட்கலாம். ஆனால், நாங்கள் சொல்வதை அவர் கேட்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் அடுத்த பாயிண்ட்டுக்கு போங்கள். நான்தான் சொல்லிவிட்டேன், உங்கள் குற்றச்சாட்டுக்கு நடவடிக்கை எடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அந்த நகலை அனுப்பி இருக்கிறார். எனக்கும் நகலை அனுப்பியிருக்கிறார் உங்களுக்கு நேரடியாக கடிதம் எழுதி வருத்தம் தெரிவித்து இருக்கிறார்.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எடுத்த நடவடிக்கைக்கு நான் என்னுடைய நன்றியை, உங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று தாலுகா அலுவலகங்களிலே சொத்து மதிப்பு சான்றிதழ் வாங்க வேண்டுமென்றால் 10 சதவீதம். நீங்கள் உருப்படியாக ஏதாவது கான்டிராக்ட் எடுக்கப் போகிறீர்களா, அதற்கு வாங்கப் போகிறீர்களா என்று கேட்டு, சரியாக 10 சதவீதம் வாங்கிக் கொண்டுதான் Solvency கொடுக்கிறார்கள். இந்த நடைமுறையை மாற்ற வேண்டும். மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் உள்ள இடைவெளி குறைய வேண்டுமென்று சொன்னால், நிருவாகம் வேகமாகச் செயல்பட வேண்டும், சீக்கிரமாகச் செயல்பட வேண்டும். நிருவாகம் காலதாமதமாகச் செயல்பட்டால் பெரிய தவறுகள் நடப்பதற்குண்டான சூழ்நிலைகள் இருக்கின்றன.

அதேபோல, தொகுதியிலே வேலைகள் நடக்கவில்லை என்று நாங்கள் கேட்பதற்கு, வளர்ச்சி மன்றக் கூட்டம் என்று ஒன்று இருந்தது. அதை நீங்கள் எடுத்துவிட்டீர்கள். ஆனால், உண்மையிலேயே அது இருந்தது என்று சொன்னால், அந்த அதிகாரிகளை எல்லாம், இந்த வேலைகளைச் செய்யுங்கள், போங்கள் என்று அவ்வப்போது சொல்லி நாங்கள் அவர்களை கொஞ்சம் முடுக்கிவிடுவதற்கு வசதியாக இருக்கும். அந்த வளர்ச்சி மன்றக்

கூட்டம் கண்டிப்பாகத் தேவை. அது 4 ஆண்டுகளாக எடுக்கப்பட்டு இருக்கிறது. மாவட்ட பஞ்சாயத்து இருக்கிறது, அதன் மூலமாகச் செய்யலாம் என்று நீங்கள் ஒரு முடிவு எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், அதை வைத்து செய்ய முடியாது. மக்கள் பிரதிநிதிகள் நாங்கள் போய் பேசினால்தான் அது சரியாக வரும். அதனால் வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நீங்கள் மீண்டும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று கடந்த காலத்திலே டி.வி. வாங்கினார்கள், எல்லா ஊர்களுக்கும் டி.வி. வழங்கியிருக்கிறார்கள். அந்த வழங்கப்பட்ட டி.வி.-க்களில் இப்போது பல ஊர்களிலே டி.வி. ஓடவில்லை; ஓடாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதுபோல பக்கத்து கிராமங்களுக்கு டி.வி. வழங்கப்படாமல் இருக்கிறது. எங்கள் நிதியிலே 25 டி.விக்களையாவது வாங்குவதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டும். அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும், அரசாங்கத்திலே ஆர்டர் போட்டு வாங்கிக்கொள்ளுங்கள். நாங்கள் சொல்லுகின்ற ஊர்களுக்கு கொடுக்கச் சொல்லி நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, டி.வி. எப்படி வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். ஏ! அப்பா, வேண்டாம், அது ஆபத்து. *(பலத்த சிரிப்பு)*

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி வேண்டுமானாலும் என்று சொன்னது, நாங்கள் அதிலே தலையிடவில்லை. இதிலே அரசாங்கம் ஒரு முடிவு எடுத்து, நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்ற அர்த்தத்தில் நான் சொன்னேன். தவறான அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. கிராமங்களில் டி.வி. இல்லாத கிராமங்களுக்கு - ஏதோ பழைய காலத்தில் தவறு நடந்தது என்பதற்காக இப்போது புதியதாக டி.வி. கொடுக்கக்கூடாது என்று சொல்வது சரியாக இல்லை. எங்கள் நிதியிலே 25 டி.விக்களை வருடத்திற்கு வாங்குவதற்கு நீங்கள் ஓர் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஒரேயொரு குறை. இந்த அரசு மீது ஒரு சின்ன களங்கம் இருக்கிறது. ரேஷன் அரிசி கடத்தியது போன்ற விஷயங்களில் எல்லாம், open-ஆக ஒரு ஸ்டேட்மெண்டை நமது அரசாங்கம் கொடுத்துவிட வேண்டும். அதாவது, தென் மாவட்டத்திலே உள்ள எந்தெந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயே 5 வருடம்,

10 வருடம் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை கிராமத்திலே, பழம் பெருச்சாளிகள் என்று சொல்வார்கள். அவர்கள் அங்கேயே இருந்துகொண்டு தவறுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களை தண்ணீரில்லா காட்டுக்கு மாற்ற வேண்டும் என்று கிராமப்புறங்களிலே சொல்வது மாதிரி, அந்த அரிசி கடத்தும் அதிகாரிகளை நீங்கள் மாற்ற வேண்டும்.

அதேபோன்று, இதிலே பெரும் புள்ளிகள் எல்லாம் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். சாதாரண மக்களை கிராமப்புறத்திலே போய்க் கேட்டால், இன்னார்தான் அரிசி கடத்தினார் என்று சொல்வார்கள். இந்த அதிகாரிதான் பண்ணுகிறார் என்று சொல்வார்கள். ஆனால், நமது அரசுக்கு எப்படி தெரியாமல் இருக்கிறது என்று தெரியவில்லை. அந்த முக்கிய புள்ளிகள்மீது நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று இந்த அதிகாரிகளை நீங்கள் உடனடியாக shift பண்ண வேண்டும். அப்படி செய்தால்தான் மீண்டும் தவறு நடக்காமல் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதுபோன்று எம்எல்ஏக்கள் பரிந்துரை செய்கின்ற பணிகள், மாவட்ட நிருவாகமாக இருந்தாலும் சரி, அல்லது உள்ளாட்சி நிருவாகமாக இருந்தாலும் சரி, எம்எல்ஏக்கள் வந்து, அந்த உள்ளாட்சி நிருவாகத்திலே கண்ட்ரோல் பண்ணுவதற்கு வாய்ப்பே இல்லை. பஞ்சாயத்துத் தலைவரை மேலே இருக்கின்ற யூனியன் சேர்மென் கேட்க முடியாது. யூனியன் சேர்மெனை மாவட்ட பஞ்சாயத்து கேட்க முடியாது. இந்த நிலையை மாற்றி, அது பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே, எப்படி இருந்தாலும்சரி, நிருவாகத்திலே நாம் நான்கு வருடம் பார்க்கிற தவறுகளை அடிப்படையாக வைத்து ஒருத்தரை ஒருத்தர் கண்டிக்கின்ற, அதை மேற்பார்வையிடுகிற பொறுப்புகள் இருந்தால் மட்டும்தான், சீராக, நேர்மையாக நிருவாகம் நடக்கும். அதற்கான சட்டத் திருத்தத்தை, நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை, மாவட்ட நிருவாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகியவற்றின் மீதான மானியக் கோரிக்கைகளை, இந்த மாமன்றத்திலே அறிமுகம் செய்து, அவற்றின்மீது நடைபெற்ற விவாதத்தில் பதில் அளிக்கக்கூடிய இந்த அரிய வாய்ப்பை எனக்குத் தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு துறையிலே இருக்கின்ற அமைச்சர்களும், பல்வேறு சாதனைப் பட்டியல்களை, இந்த மாமன்றத்திற்குத் தருகிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சராக இருந்தால், 5,000 கோடி ரூபாயைக் கல்விக்காக செலவு செய்கிறோம். கல்வித் துறையிலே இவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. இவ்வளவு வாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. அக்ரகாரத்திலே மட்டும் இருந்த சரஸ்வதியை, கொஞ்சம் எடுத்து வந்து, ஹரிஜனப் பகுதிக்கும் கொண்டுவர வைத்து, ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், இவர்களிடத்திலும் குடியிருக்க வைத்து, எல்லோருக்கும் கல்வி அளித்துவிட்டோம் என்ற பெருமையை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இந்த மாமன்றத்திற்குச் சொல்கிறார்கள்.

அதேபோன்று, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், பல்வேறு திட்டங்களை மருத்துவத் துறையில் உண்டாக்கி, எவ்வளவு மாற்றத்தை, எவ்வளவு ஏற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம், இந்தக் கோடைக்காலத்தில்கூட, மின்வெட்டே இல்லாமல் சாதிக்கிறேனே பார்த்தீர்களா என்று, அவர் பெருமையோடு சொல்லிக்கொண்டு இருக்கிறார். எல்லா அமைச்சர்களுமே, அவர்களுடைய துறையிலே இருக்கின்ற, ஆக்கப் பணிகளை, அரும் பணிகளை, அடுக்கடுக்காகப் பட்டியல்போட்டு, கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படியானால், இந்த வணிக வரித் துறைக்கு என்று என்ன சாதனை இருக்கிறது, என்ன சரித்திரம் இருக்கிறது, என்ன பின்னணி இருக்கிறது என்ற கேள்வி தானாக வருகிறது. இத்தனை மாண்புமிகு அமைச்சர்களும், பல அரிய பணிகளை, ஆக்கப் பணிகளை, இங்கே பட்டியல் போட்டு காட்டுகிறார்கள் என்றால், இவர்களுக்கெல்லாம், பணம் கொடுப்பது, இந்த வணிக வரித் துறைதான் என்பதை முதலிலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த வருமானத்தை வைத்துதான், அவர்கள் பல திட்டங்களை அறிவிக்கிறார்கள். பல சாதனைகளைப்

புரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இன்றையதினம் வருவாய்க் கணக்கில் 70 சதவீதம் இந்த விற்பனை வரித் துறையிலேயிருந்துதான் வருகிறது என்பதை பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அளவிற்கு வருவாயைப் பெருக்கி, நம்முடைய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக, ஆதாரமாக விளங்குகின்ற வணிக வரித் துறை அதிகாரிகளுக்கும், வரியைச் செலுத்துகின்ற வணிகப் பெருங்குடி மக்களுக்கும், வரியை கொடுக்கின்ற பொதுமக்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக பட்ஜெட் என்று சொன்னாலே, வரி வர போகின்றது என்று பொருள். உடனே வாணிகத்திலே ஈடுபட்டிருப்போர்கள், தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள், எந்தப் பொருளுக்கு வரி விதிப்பார்கள் என்பதை கணக்குப் பார்த்து, ஓர் அனுமானம் செய்து, அந்தப் பொருளை அதிகமாக இருப்புச் செய்வதும், அதிலே ஓர் இலாபத்தை பெறுவதும், முயற்சி செய்வதும் இயற்கையாகும். அது மாநில அரசு பட்ஜெட்டாக இருந்தாலும் சரி அல்லது மத்திய அரசின் பட்ஜெட்டாக இருந்தாலும் சரி. இந்த வரி வருகிறது என்ற அடிப்படையில், இந்த இருப்புகளை ஏற்றுவது என்பது இயற்கை, தவிர்க்க முடியாதது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த நான்கு ஆண்டுகளில், சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், அவர் வரி விதிப்புக் கொள்கையைக் கொண்டார் இல்லை. வரிக் குறைப்பு, கொள்கையைக் கொண்டு வந்திருக்கிறார். எனவே, வரி விதிப்பு பட்ஜெட் என்பதை மாற்றி வரிக்குறைப்பு பட்ஜெட் என்ற நிலையை உண்டாக்கிய முதலமைச்சர், இந்திய துணைக் கண்டத்திலே டாக்டர் கலைஞர்தான் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதேநேரத்தில், வரி இல்லாமல், எந்த அரசாங்கமும் செயல்படாது. **"Taxes are sinews of the States"** என்று சொன்னான் கிரேக்க நாட்டு அறிஞன் **Cicero-Taxes** என்பது ஓர் அரசாங்கத்திற்கு அல்ல, நாட்டிற்கேகூட அதுதான் தசையாக இருக்கிறது. அது இல்லாமல் செயல்பட முடியாது என்று சொன்னான். அதேநேரத்தில், அந்த வரியை எப்படி விதிப்பது என்பதற்கு பேரறிஞர் அண்ணா ஓர் அற்புதமான இலக்கணத்தைச் சொன்னார்கள். **"Tap the rich; Feed the poor"** என்று சொன்னார். வசதி படைத்தவர்களுக்கு நீங்கள் வரியைப் போடுங்கள். வறியவர்களுக்கு வாழ்வு அளியுங்கள் என்ற அர்த்தத்தில் பேரறிஞர் அண்ணா கருத்தைச் சொன்னார். இந்தக் கருத்தை மையமாகக் கொண்டுதான் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையின்போது, நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை என்ற ஒன்றை வெளியிட்டார்கள். அந்தக் கொள்கையில் 4 அம்சத்தை அவர்கள் விளக்கியிருந்தார்கள். இந்த விவாதத்திலே கலந்துகொண்ட நண்பர்கள் எல்லாம், இந்த அம்சம் என்னவாகி விட்டது, இதிலே என்ன குறையிருக்கிறது என்று எடுத்துச் சொல்வார்கள், இடித்துச் சொல்வார்கள், ஒருவேளை நான் பதில் சொல்ல முடியாமல் திண்டாடி விடுவேனோ என்றுகூட எதிர் பார்த்திருந்தேன். நல்லவேளை யாரும் அதை நினைவுபடுத்தவில்லை. எனவே, நானே உங்களுக்கு அதை நினைவுபடுத்துவது சாலப் பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-50

அந்தக் கொள்கையிலே 4 அம்சத்தைச் சொன்னார்கள். வரி விதிப்புக் கொள்கை நியாயமானதாகவும், சமமானதாகவும் இருக்க வேண்டும். பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும். வரி விதிப்பு நடைமுறை அரசுக்கும், வரி செலுத்தும் வணிகர்களுக்கும் எளியதாக அமைய வேண்டும். பொருளாதார வளர்ச்சி ஏற்படுமானால் வருவாயும் தானாக உயரும் என்ற 4 அம்சத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்திலே Longterm Taxation Policy என்பதிலே குறிப்பிட்டிருந்தார்கள். இந்த ஒவ்வொரு கொள்கையும், ஒவ்வொரு அம்சமும் எப்படி அமல்படுத்தப்படுகிறது? உங்கள் எல்லோரையும் நாங்கள் நிறைவுபடுத்த முடியாமல் போய் இருக்கலாம். ஆனால், சரியான திசையை நோக்கிச் செல்கிறோம். கண்ணீரைத் துடைக்கிற திசையை நோக்கிச் செல்கிறோம். பளுவைக் குறைக்கிற திசையை நோக்கிச் செல்கிறோம் என்ற உண்மையை மட்டும் இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். வரிவிதிப்புக்கொள்கை நியாயமானதாக, நடுநிலையானதாக இருக்க வேண்டும் என்பதற்காக எப்படியெல்லாம் வரி குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட உதாரணத்திற்குச் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்த் தட்டச்சுப் பொறிகளுக்கு 20 சதவீதமாக இருந்த வரி 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மூக்குக் கண்ணாடி லென்ஸ் மீதான 20 சதவீத வரி 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மொசைக் கற்கள், செராமிக் இது போன்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி 20 சதவீதத்திலிருந்து

[திரு. ஆலடி அருணா] [2000 மே 9

12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. வணிகச் சின்னம் உள்ள மசாலா பொடிகள், ரஸ்க் மீதான வரி 16 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பேரொளி விளக்குகள் மீதான வரி 16 சதவீதத் திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வணிகச் சின்னம் உள்ள ஐஸ்கிரீம் மீதான வரி 16 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மின் சாதனங்கள், மின் சக்தி கருவிகள், கண்ணாடி கலங்கள், செராமிக் துப்புரவு கலங்கள் மீதான வரி 16 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மின் பொருள்களுக்கான வரி 16 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. உடனடி சாம்பிராணி வில்லைகள் மீதான வரி 11 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. செல்லுலார் போஃன் மீதான வரி 11 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

உழவுகளுக்குப் பயன்படுத்துகிற power tiller மீதான வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சர்பத், ஊதுபத்தி மீதான வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. யூரியா, பருத்தி ஆகியவற்றிற்கான வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. கொப்பரைத் தேங்காய்க்கு எல்லோரும் வரியை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். 4 சதவீதமாக இருந்ததை கலைஞர் 1 சதவீதமாகக் குறைத்திருக்கிறார். இந்த அளவிற்கு கடந்த 4 ஆணடுகாலத்தில் இப்படியெல்லாம் வரிக் குறைத்ததன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல சுமார் 678 கோடி ரூபாய்க்கு சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒவ்வோர் ஆண்டும், இந்தச் சலுகை எப்படி வருகின்றது என்று கணக்குப் பார்த்தால், இந்த 4 ஆண்டுகளுக்குள் ஏறத்தாழ 2,700 கோடி ரூபாய்க்கு அரசாங்கம் வரிச் சலுகை செய்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த எந்தக் காலக்கட்டத்திலாவது 4 ஆண்டுகளுக்குள் இவ்வளவு வரிச் சலுகை செய்தார்கள் என்ற சரித்திரத்தை யாராவது ஆதாரபூர்வமாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே சொல்ல முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்த அளவிற்கு சலுகைச் சரித்திரத்தை வரியின் மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் டாக்டர் கலைஞர் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதுவரை உங்களுக்கு குறைத்ததைத்தான் சொன்னேன். அறவே நீக்கியதைச் சொல்லவில்லை.

2000 மே 9] [திரு. ஆலடி அருணா]

சமையல் எண்ணெய்—எந்த சமையல் எண்ணெயாக இருந்தாலும் சரி, அது நல்லெண்ணெயாக இருந்தாலும் சரி, தேங்காய் எண்ணெயாக இருந்தாலும் சரி அல்லது பருத்திக்கொட்டை எண்ணெயாக இருந்தாலும் சரி, எந்த சமையல் எண்ணெயாக இருந்தாலும் சரி, அதற்கு அறவே வரி நீக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கிராமங்களுக்குச் சென்று பாருங்கள், ரைஸ் மில் இருக்கும். அடுத்தபடியாக, எந்த மில் இருக்கும் என்றால் ஆயில் மில்தான் இருக்கும். அந்த மில்கள் எல்லாம் இன்றைக்கு விடுபட்டிருக்கின்றன. அண்ணல் காந்தியார் உப்பிற்கு வரி போடக்கூடாது என்றார். 1930-ல், சத்தியாக்கிரகப் போரை ஆரம்பித்தார். சபர்மதி ஆஸ்ரமத்திலிருந்து குஜராத்தில் இருக்கின்ற தண்டிக்குச் சென்று ஒரு பிடி உப்பை எடுத்து, இது இயற்கையாக விளைகிற உப்பு, இதற்கு என்ன நீங்கள் வரி போடுவது என்று ஆங்கில ஏகாதிபத்தியத்தைக் கேட்டார். அதற்குப் பிறகு உப்பிற்கு வரி போடுவது நிறுத்தப்பட்டது. ஏனென்றால் நாம் சாப்பிடுகின்ற பொருள்கள் எதுவானாலும் பெரும்பாலும் அது உப்பு கலந்தது. உப்பில்லாத ப்ண்டத்தைக் குப்பையில் போடு என்பது பழமொழி. உப்பு எல்லா வகையிலும் முக்கிய இடத்தை வகிக்கிறது.

பிற்பகல் 12-55

உப்பிற்கு அடுத்தபடியாக நாம் உண்கின்ற உணவானாலும் சரி, அருந்துகின்ற எந்தப் பொருளாக இருந்தாலும் சரி, உப்பிற்கு அடுத்தபடியாகப் பயன்படுத்துவது எண்ணெய்தான். அந்த எண்ணெய்க்கு எந்தப் போராட்டமும் இல்லாமல், எந்தக் கோரிக்கையும் இல்லாமல், எந்த முறையீடும் செய்யாமல், டாக்டர் கலைஞர் அந்த வரியை இரத்து செய்தார் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணல் காந்தியார் 20 ஆம் நூற்றாண்டினுடைய மகாத்மா என்றால், டாக்டர் கலைஞரை நான் 21 ஆம் நூற்றாண்டின் மகாத்மா என்று சொல்கிறேன். இது முடிந்த பிறகு உங்களுக்குச் சாதாரணமாக இருக்கலாம். கொஞ்சம் தண்டி யாத்திரையை ஒப்பிட்டுப் பாருங்கள். வேதாரண்யத்தில் மூதறிஞர் இராஜாஜி நடத்தியதை ஒப்பிட்டுப் பாருங்கள். அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான், இந்த வரலாற்றிற்கு இருக்கின்ற பெருமை, வரி நீக்கத்திற்கு இருக்கின்ற பெருமையை உங்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

எண்ணெய்க்கு மட்டுமல்ல, பருப்புகளுக்கு வரி போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதிலே குறுக்கீடுகூட வந்தது. நான் குறுக்கிட நினைத்தேன். அதிலேகூட திருத்தம். எல்லா பருப்புகளுக்கும் நாங்கள் வரி போடவில்லை. சில பருப்புகளுக்கு வரியை அறவே நீக்கிவிட்டோம். பருப்பு வகைகள், மஞ்சள், மிளகாய், வெல்லம், சீரகம், மிளகு, புளி,

மல்லி, சீயக்காய், பெருங்காயம், கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள், அலுமினியப் பாத்திரங்கள், பருத்தியினாலான பின்னலாடைகள், சித்த மருந்துகள், யுனானி மருந்துகள், பதப்படுத்தப் பட்ட பால், தினசரி நாள் காலண்டர், கற்கண்டு, மாட்டுத் தீவனம் முதலிய பொருள்களுக்கு வரி அறவே எடுக்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களே, விற்பனை வரி என்பது 1939-ல் முதன்முதலாக அமலுக்கு வந்தது. 1939-லேயிருந்து அமலுக்கு வந்த இந்த வரியில் இதுவரைக்கும் 1996 வரை எத்தனை பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது என்றால் - 1939-லேயிருந்து நான் சொல்கிறேன், 75 பொருள்களுக்குத்தான் வரிவிலக்கு அளிக்கப்பட்டது; வெறும் 75 பொருள்களுக்குத்தான். ஆனால் இந்த நான்கு ஆண்டுகளிலே மட்டும் டாக்டர் கலைஞர் 38 பொருள்களுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார். எவ்வளவு பெரிய சரித்திரத்தை இப்போது இந்த அரசாங்கம் படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதனால்தான் 'பைபிளிலே'கூட ஒரு வாக்கியம் - அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரியை ஒழுங்காகக் கொடுத்துவிடுங்கள் என்று மேத்யூஸ் சொல்லியிருக்கிறார். எனவே, வரியைச் செலுத்த ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். நான் முதல் அம்சத்தை இதுவரைக்கும் விளக்கினேன்.

இப்போது இரண்டாவது அம்சம். அரசின் வரிவிதிப்புக் கொள்கை பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடாது. தொழில் முன்னேற்றத்திற்கு துணையாக இருக்க வேண்டுமென்பது இரண்டாவது குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளை கலைஞருடைய அரசு எந்த அளவிற்கு வேகமாக முனைப்போடு செயல்படுத்துகிறது என்பதை இந்த மாமன்றம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது.

தகவல் தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மென்பொருள் 'Software'-க்கு வரி விதிப்பிலேயிருந்து முழு சலுகை அளிக்கப் பட்டுவிட்டது. கணினிக்கு கூடுதல் வரி - Additional Sales Tax - அதுவும் அறவே நீக்கப்பட்டுவிட்டது. இப்போது தொலைக்காட்சியினுடைய அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக சினிமா தொழில் தள்ளாடி, திண்டாடிக்கொண்டிருக்கிறது, திணறிக்கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். எனவே, அவர்களுடைய கோரிக்கையை மனதிலேகொண்டு, புதிய திரைப்படங்களுக்கு 40 சதவீதத்திலேயிருந்த வரி 25 சதவீதமாகவும், பழைய திரைப்படங்களுக்கு 20 சதவீதமாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. திரைப்பட உரிமையாளர்கள் தங்களுடைய

உரிமைகளை மாற்றும்பொழுது இருந்த வரி 4 சதவீதமாக இருந்தது, அறவே நீக்கப்பட்டுவிட்டது.

அதேபோன்றுதான் பெரிய தொழிற்சாலை வேண்டும், சென்னை மாநகரத்தை Detroit-ஆக மாற்ற வேண்டுமென்று சொன்னால், சில வரிச் சலுகைகளை அளித்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலை வந்தபொழுது, இந்தப் பெரிய மோட்டார் கம்பெனிகளுக்கு 14 ஆண்டுகளுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, 100 சதவீதம் ஏற்றுமதி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு - ஒரு தொழில் நிறுவனம் தான் செய்கின்ற எல்லா உற்பத்திப் பொருள்களையும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யுமேயானால், அதற்கு விற்பனை வரியே கிடையாது.

அதுமட்டுமல்ல, சென்னையில் ஏற்றுமதி உற்பத்தி மண்டலத்தில் இருக்கின்ற தொழிற்கூடமாக இருந்தாலும், அதற்கும் கொள்முதல் வரி கிடையாது. எனவே, தொழிலை ஊக்குவிப்பதற்காக வரிச் சலுகை எப்படி அளித்திருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க, கவனிக்க இந்த மாமன்றம் கடமைப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-00

ஒரு விவரத்தைச் சொல்கிறேன். கடந்த ஆட்சியில், செல்வி ஜெயலலிதா ஆட்சியில் இதுபோன்று கொடுக்கப்பட்ட சலுகைகளின் மொத்த மதிப்பு 1,141 கோடியே 20 இலட்சம் ரூபாய். 1,141 கோடி ரூபாய்க்கு செல்வி ஜெயலலிதா ஆட்சியில் இதுபோன்று தொழில்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால், கலைஞருடைய ஆட்சியில் இந்த 4 ஆண்டுகளில் - இன்னும் ஓர் ஆண்டு இருக்கிறது. இந்த 4 ஆண்டுகளில் மட்டும் - 3,929 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 4,000 கோடி ரூபாய்க்கு தொழில்களுக்காக வரிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், எங்கள் இலட்சியத்தை நோக்கி எவ்வளவு வேகமாக நடைபோடுகிறோம் என்பதை எல்லோரும் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதேபோன்றுதான் மூன்றாவது அம்சமாக வரிக் கொள்கையில் நடைமுறையை எளிமைப்படுத்த வேண்டும். அரசாங்கமாக இருந்தாலும் சரி, வரி செலுத்துபவர்களாக இருந்தாலும் சரி, இதை எளிமைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையை மையமாக வைத்து 3ஆவது அம்சம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் 3 இலட்சம் வரை

மொத்த விற்பனை உள்ளவர்கள் வரி கொடுக்க வேண்டாம் என்ற ஒரு நிலை இருந்தது. இந்த 3 இலட்சம் வரை வரி கொடுக்க வேண்டாம் என்பது மட்டுமல்ல, அடுத்து ஒரு படி சென்று கலைஞர் சொல்லியிருக்கிறார். அந்த வியாபாரிகள் பதிவே செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். என்றாலும், இப்போது கேட்கிறார்கள். மூன்றை ஐந்தாக்கக் கூடாதா? ஐந்தை பத்தாக்கக் கூடாதா? பத்தை இருபத்தைந்தாக்கக் கூடாதா என்று சொன்னார்கள். இவர்கள் எல்லாம் சொல்லும்போது அண்ணல் காந்தியார் சொன்ன ஓர் உவமைதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. 'மனம் என்பது ஓர் அமைதி பெறாத பறவை. அது எவ்வளவு பறக்கிறதோ அதற்கு மேலே பறக்க ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கும்' என்று சொன்னார். அதே கதைதான் இதுவும். 3 இலட்சத்திற்கு வரி விலக்கு கொடுத்த பிறகும் போதாது அதை ஐந்தாக்கு, பத்தாக்கு என்று சொல்கிறார்கள் என்றால் அவர்கள் எல்லாம் கொஞ்சம் மனசாட்சியோடு பேச வேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்றுதான சுயநிர்ணய வரி - Self assessment - 10 இலட்சமாக இருந்தது. ஆருண் அவர்களுக்குத் தெரியும். பிறகு 20 ஆகியது. பிறகு 30 ஆக்க வேண்டும், 40 ஆக்க வேண்டும். என்றுதான் கேட்டார்கள். கலைஞர் என்ன செய்தார் தெரியுமா? 1 கோடி ரூபாய் வரைக்கும் Self assessment அனுமதிக்க வேண்டும் என்று எந்த வணிகச் சங்கமும் கேட்கவில்லை. இந்தச் சலுகையை உண்மையிலேயே நம்முடைய சொக்கர் இப்பொழுது இங்கே இருந்திருந்தால் எழுந்து கலைஞருக்கு நன்றி சொல்லியிருப்பார். என்ன செய்வது? இப்போது இருப்பவர்கள் ** கேட்டுத்தான் நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது. அதனாலே யாரும் நன்றி சொல்ல முன்வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வணிகர்களே கேட்கவில்லை - வணிகர்களே கேட்கவில்லை. அந்த அளவிற்கு Self assessment-ஐ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: நாங்கள் கூட்டணி வைத்திருக்கிறோம் என்கிற காரணத்தாலே, எல்லாம் ** கேட்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது ஏற்புடையதல்ல. பாராட்ட வேண்டியதை நாங்கள் பாராட்ட ஒரு காலத்திலும் தவறியதில்லை. எனவே, நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள், எங்களை பொறுத்தவரைக்கும் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இங்கே பேசுகிறபோது எதிர் வரிசையிலே எங்களைப் பார்த்து இப்படி இவர்கள் நன்றி சொல்ல வேண்டும் என்று சொன்னாலே ** கேட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இது மிக கேவலமான ஒரு சொல் என்பது எங்களுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுடைய உணர்வுகளை நான் மதிக்கிறேன். ஆகவே, அவர் வேண்டியவாறு அந்தச் சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீக்கப்படுகின்றது.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வியாபாரிகளுக்குத் தொல்லைகள் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். சோதனைச் சாவடிகள் என்பது தவிர்க்க முடியாதது. எல்லா வியாபாரிகளுமே நாணயமாக நடக்கிறார்கள், ஒழுங்காக கணக்கு வைத்திருக்கிறார்கள் என்பது பொருள் அல்ல. அவர்களிலே சிலர்கூட தவறு செய்வது என்பது இயற்கை, தவிர்க்க முடியாதது. எனவே, சோதனைச் சாவடி இல்லாமல் இருக்கவே முடியாது. ஆனால் அந்தச் சோதனைச் சாவடிகள் எண்ணிக்கையே கூட 61 சோதனைச் சாவடிகளில் இன்றைக்கு 15 சோதனைச் சாவடிகளை அரசு எடுத்துவிட்டது. இன்னும் உற்பத்தியாளர்கள் தாங்கள் செலுத்துகிற அந்த Form-17 என்பதை மாதம் ஒரு முறை கொடுக்க வேண்டும் என்று இருந்தது. அது வேண்டாம் என்று எளிமைப்படுத்த வேண்டும் என்பதற்காக ஆண்டுக்கு ஒருமுறை கொடுத்தால் போதும் என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, Sur-charge, Additional Sur-charge அதாவது மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவை அறவே ஒழிக்கப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்ல, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்கூட சொன்னார். எண்ணெய், பருப்பு வகைகளுக்கு 100 கோடி ரூபாய் வரை விற்பனை இருந்தால் இப்போது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வரி கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அதற்குமேல் இருந்தால் கட்ட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதனுடைய வரம்பை உயர்த்த வேண்டும். 200 கோடியாகவோ, 300 கோடியாகவோ உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். நான் அந்த உறுப்பினருக்கும் சரி, மற்ற கோரிக்கைகளை வைத்த உறுப்பினர்களுக்கும் சரி, தெரிவித்துக்கொள்ள விரும்புவது, உங்கள் கோரிக்கைகள் எதையும் நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை. எங்கேயும் தூரத்தில் போட்டுவிடவில்லை. அவற்றையெல்லாம் Appropriation Bill வரும்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலித்து உங்களுக்கு நியாயம் வழங்க இருக்கிறார்கள். உங்களுடைய கோரிக்கைகளுக்கு நல்லமுறையிலே பதில் அளிக்க இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேமாதிரி எளிமைப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் சமாதான் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னால் எந்தக் காலகட்டத்திலேயும் விற்பனை வரித் துறையிலே சமாதான் திட்டம் கொண்டு வரப்பட்டதேயில்லை. அதுவும் இந்த ஆட்சியிலேதான் முதன்முறையாகக் கொண்டுவரப்பட்டது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

4 ஆவது அம்சம், நம்முடைய கொள்கையின் 4 ஆவது அம்சம், தொழில் வளர்ச்சி ஏற்படுமானால் இயல்பாகவே அரசின் வருமானம் அதிகரிக்கும் என்பதாகும். அந்த அடிப்படையில்தான் இப்போது நாம் ஒவ்வொரு சலுகையையும் அளித்து அதன் மூலமாக இப்போது அரசினுடைய விற்பனை நல்லமுறையிலே அதிகரித்திருக்கிறது; பாராட்டத்தக்க முறையிலே அதிகரித்திருக்கிறது. 7,000 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. நீங்கள் இன்னொரு உண்மையைப் பார்த்தால்கூடத் தெரியும். இப்போது, இந்தியாவிலேயே நாம் நல்லமுறையிலே வரி செலுத்துவதில் 5 ஆவது இடத்திலே இருக்கிறோம். டில்லியைப் பொறுத்த அளவில் தனி நபர் 2,067 ரூபாய் கொடுக்கிறார். கோவாவினுடைய Per capita taxation 1,885 ரூபாய்; பஞ்சாப் 1,879 ரூபாய்; கேரளா 1,064 ரூபாய்; தமிழ்நாடு 1,028 ரூபாய். இந்த அளவிற்கு நாம், நம்முடைய வரி கொடுக்கின்ற திறமையை வளர்த்திருக்கிறோம். இதனாலேயே எல்லோரும் வரி கொடுக்கிறார்கள்; எல்லோரிடத்திலேயும் வரி வசூலிக்கிறார்கள்; ஒவ்வொருவரும் 1,028 ரூபாய் ஆண்டொன்றுக்கு கொடுக்கிறார்கள் என்று யாரும் கணக்குப்

போடக்கூடாது. இந்த வரிகளில் பெரும் பகுதி எட்டே எட்டு பொருள்களிலிருந்துதான் வருகின்றது. இந்தியாவில் தயாராகும் மதுபானம், டீசல், பெட்ரோல், சிமெண்ட், மோட்டார் வாகனங்கள், பருத்தி நூல், இரும்பு, வணிகச் சின்னமுடைய உணவுப் பொருள்கள் இவற்றிலேயிருந்துதான் அவையெல்லாம் வருகின்றன. எனவே, இந்த வரி விகிதம், தனி நபர் வரி விகிதம், இந்த அளவிற்கு இருப்பதனாலேயே எல்லா ஏழை எளியவர்களும் அப்படிக் கொடுக்கிறார்கள் என்ற ஒரு தவறான முடிவிற்கு வரக்கூடாது என்பதற்காக இந்தத் தகவலை உங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இப்போது, தொழில் முதலாளிகள், யார் எங்களுக்கு அதிகச் சலுகை தருகிறீர்களோ, யார் எங்களுக்கு வரி விகிதத்தைக் குறைத்துத் தருகிறீர்களோ, யார் இலவசமாக இடங்களைத் தருகிறீர்களோ அங்கேதான் தொழிலைத் தொடங்குவோம் என்று ஒவ்வொரு மாநில அரசிடத்திலேயும் பேரம் பேசுகிறார்கள். ஒவ்வொரு மாநில அரசும் அதனுடைய நெருக்கடிக்கும், நிர்ப்பந்தத்திற்கும் ஏற்ப—அவர்களுடைய நிர்ப்பந்தங்களுக்குப் பணியக்கூடிய கட்டாயமும் சில நேரங்களில் இருக்கிறது. இதனாலே நிலைமை என்ன ஆகிறதென்றால், மாநில அரசுக்கு வணிகவரித் துறையின் மூலமாக வரவேண்டிய வருமானம் வராமல் தடைபட்டுவிடுகிறது. இதற்காகத்தான் சமச்சீர் வரி முறையை நாம் ஏற்படுத்தினோம். மத்திய அரசு கொண்டு வந்தது. அது ஒரு சட்டபூர்வமானது என்று அர்த்தமல்ல. நாமே பேசி முடிவு செய்ததாகும். ஏனென்றால் நாளையதினம் நம்முடைய விற்பனை வரி உரிமையையே பறிக்கக்கூடிய அளவிற்கு அது போய்விடும் என்று யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நாம் அந்தச் சமச்சீர் வரி முறையை ஒத்துக்கொண்டால்கூட, நாம் எந்தப் பொருள்களுக்கெல்லாம் சலுகை அளித்திருக்கிறோமோ, விதிவிலக்கு அளித்திருக்கிறோமோ அவற்றிலிருந்து நாம் பின்வாங்கவே இல்லை. ஆனால், அதேநேரத்தில் மற்ற மாநிலத்தின் உணர்வுகளை மதிக்கின்ற வகையில், ஏற்கின்ற வகையில் சில பொருள்களுக்கு வரியை உயர்த்த நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மறைக்கவும் விரும்பவில்லை.

தங்கம், வெள்ளி இவற்றிற்கு 1/2 சதவீதம் கொடுத்தோம்; அதை ஒரு சதவீதமாக உயர்த்துகிறோம். எலக்ட்ரானிக் பொருள்களுக்கு 4 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயர்த்துகிறோம். தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்துகிறோம். திரைப்படக் கருவிகளுக்கு 11 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக

உயர்த்துகிறோம். இந்த அளவுக்கு இவற்றில் எல்லாம் சிறு கட்டண உயர்வுகள் இருக்கின்றன. ஏனென்றால், இவற்றை எல்லாம் செய்தால்தான், ஓர் உடன்பாட்டை உருவாக்க முடியும். இல்லாவிட்டால் உடன்பாடே இல்லாமல் போய்விடும். எனவே, இந்த வரிச் சலுகைகள், இந்தக் கொள்கைகளை, கலைஞர் அவர்கள் சொன்ன அந்த 4 அம்சக் கொள்கைகள் ஒவ்வொன்றையும் எந்த அளவிற்கு இந்த அரசு முனைப்போடு செயல்படுத்துகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 1-10

இங்கே பல நண்பர்கள் பிற மாநிலங்களில் எல்லாம் இப்படி இருக்கிறது, பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களிலே இப்படி இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொள்கிறேன். பக்கத்திலே இருக்கின்ற கேரளாவிலே 33 பொருட்களுக்கு நம்மைவிட அவர்கள் அதிகமாக வரியை வசூலிக்கிறார்கள். அதை இந்த மாமன்றத்திற்கு அதிகமாக நான் சொல்லவில்லை. ஏனென்றால் நேரம் பிடிக்கும். என்றாலும் ஓர் உதாரணத்திற்காக நான் சொல்ல விரும்புகிறேன். செயற்கை இழை நூலக்கு நாம் இரண்டே சதவீதம் விதிக்கிறோம். ஆனால் கேரளாவில் 8 சதவீதம். Readymade ஆடைகள் நாம் 4 சதவீதம் விதிக்கிறோம். கேரளாவிலே 8 சதவீதம். வணிகச் சின்னமில்லாத பேக்கரி பொருட்கள் நாம் 4 சதவீதம், அவர்கள் 8 சதவீதம். அரிசி அவல் நமக்கு வரியே கிடையாது. அங்கு 1 சதவீதம். சைக்கிள் மற்றும் பாகங்களுக்கு நாம் 4 சதவீதம், அவர்கள் 8 சதவீதம். இப்படி ஏறத்தாழ 33 பொருட்களுக்கு நம்மைவிட அவர்கள் ஒரு மடங்கு, இரண்டு மடங்கு வரி விதித்திருக்கிறார்கள். அதேபோன்றுதான் கர்நாடகா மாநிலத்தைப் பொறுத்த அளவிலே எடுத்தால்கூட, 26 பொருட்களுக்கு தமிழகத்தைவிட அவர்கள் அதிகமான அளவிற்கு வரியை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அலுமினிய உலோகங்கள் நாம் 8 சதவீதம், அவர்கள் 10 சதவீதம். மாட்டுத் தீவனங்கள், இவற்றிற்கு இங்கே வரி விலக்கு. ஆனால் அங்கே 2 சதவீதம், உருளைகள் - Bearings - அதற்கு 8 சதவீதம். அங்கே 10 சதவீதம். இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் அவர்கள் ஏறத்தாழ 26 பொருட்களுக்கு நம்மைவிட அதிகமாக வரியை விதித்திருக்கின்றார்கள்.

இன்னொன்றை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். யாரும் நினைவுபடுத்தவில்லை. நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை. நுழைவு வரியைப் பற்றி. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் ஒரே ஒரு பொருளுக்குத்தான்

மோட்டார் வாகனங்களுக்கு மட்டும்தான் நுழைவு வரியையே நாம் வசூலிக்கிறோம், இங்கே இருக்கின்ற விற்பனை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக. ஆனால், கேரளாவைப் பொறுத்த அளவில் 24 இனங்களுக்கு நுழைவு வரி வசூலிக்கப்படுகிறது. கேரளாவிற்குள் லாரியே நுழைய முடியாது. 24 பொருட்களுக்கு நுழைவு வரி வசூலிக்கப்படுகிறது. கர்நாடகாவைப் பொறுத்த அளவில் 100 பொருட்களுக்கு நுழைவு வரி வசூலிக்கப்படுகிறது. வரிச் சலுகை கேட்டவர்கள், வரியைக் குறைக்க வேண்டும் என்று சொன்னவர்கள், வரி வேண்டாமென்று சொன்னவர்கள், இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்து இந்த அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் வேண்டிக்கொள்கிறேன்.

மாவட்ட நிருவாகம் பற்றி சில மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளை இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், மாவட்ட நிருவாகம் ஒழுங்காக இருந்தால்தான், சீராக இருந்தால்தான், முனைப்போடு இருந்தால்தான் அரசின் திட்டங்களெல்லாம் ஒழுங்காகச் செயல்படும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கின்றவர் நம்முடைய முதல்வர் ஆகும். அதனாலேதான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டை அடிக்கடி கூட்டுகிறார். மாவட்டக் காவல் துறை மற்றும் உயர் அதிகாரிகள் மாநாட்டையும் கூட்டியிருக்கிறார். இந்த ஆட்சியில் மட்டும் இந்த 4 ஆண்டு காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு 7 முறை கூட்டப்பட்டிருக்கிறது. அதில் 3 முறை காவல் துறை அதிகாரிகளோடு கூட்டப்பட்டிருக்கிறது. இப்போது வருகிற 27ஆம் தேதியும், 28ஆம் தேதியும் மீண்டும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு கூட்டப்படவிருக்கிறது. நான்கு ஆண்டுகளில் 8 முறை கூட்டுகிறோம். * முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் 5 ஆண்டில் மூன்றே முறைதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டைக் கூட்டினார். மறந்துவிடக்கூடாது. ஏனென்றால் நம்முடைய சுந்தரம் மாவட்ட நிருவாகத்தைப் பற்றியெல்லாம் சொன்னார். இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த அரசு எப்படி தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்துகிறது என்பதை எல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த மாவட்டங்களில் எல்லாம் நிருவாகம் வேகமாகச் செயல்பட வேண்டும், அதிகாரிகள் முனைப்போடு செயல்பட வேண்டும் என்பதற்காகக் கணினி—

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * முன்னாள் முதலமைச்சர் என்று சொல்லி நம்முடைய மாண்புமிகு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தவிதத்தில் அவர்கள், அவர்களுக்கு * முன்னாள் முதலமைச்சர் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: ஒரு மரியாதைக்காகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம். முன்னாள் முதலமைச்சர் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: அவரே மரியாதை கொடுக்கக் கூடாது என்றால் அதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதில் சர்ச்சை எல்லாம் வேண்டாம், முன்னாள் முதலமைச்சர் என்று சொல்லுங்கள். தொடர்ந்து நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, அதிகாரிகள் எல்லாம் தீவிரமாக செயல்பட வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு இந்த ஆட்சியில் மட்டும் வாகன வசதிகள் அதாவது ஜீப், கார் இவை 254 கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் வெறும் 164 வாகனங்கள் தான் கொடுக்கப்பட்டிருந்தன என்பதையும் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் எல்லாம் இப்போது நினைக்கிறோம். Global Village என்று சொல்லுகிறோம். தொடர்புச் சாதனங்கள், தகவல் சாதனங்கள் அதிவேகமாக முன்னேறியிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறோம்.

பிற்பகல் 1-15

ஆனால், யார் ஆச்சரியப்படுகிறோம் என்றால், அறிவுள்ள நாம் ஆச்சரியப்படுகிறோம். ஆனால், இன்னும் கிராமத்து மக்கள், கைக்குள்ளேயிருந்து யாராவது விபூதியை எடுத்தால், அதைப் பார்த்துத்தான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு தகவல் சாதனங்கள் இப்படி வந்திருக்கிறதே என்ற ஆச்சரியம் அவர்களுக்கு இல்லை. இவ்வளவு முன்னேற்றத்தின் காரணமாக Global Village—உலகமே கிராமமாகிவிட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையிலேயே உலகம் கிராமமா என்றால் இல்லை. இந்தக் கிராமத்தில் ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு நாடாக இருக்கிறது. எனது நாடு, எனது உள்ளம், எனது மொழி, எனது கலாச்சாரம், நான், எனது உரிமை என்ற

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மனப்பான்மையின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனுமே சுதந்திர மனிதனாக இருந்து அந்த Global Village-ல் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு நாடாகிவிட்டது. எனவே, விஞ்ஞானம் எவ்வளவுதான் நம்மை நெருக்கினாலும், நம்முடைய எண்ணங்கள் இன்னும் பழையபடி பல நாடுகளாகத்தான் இருக்கின்றன; இருந்துகொண்டிருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவேதான், அந்த அடிப்படையில் இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்த பிறகும்கூட, புதிய மாவட்டங்களை உண்டாக்குகிறோம்; புதிய கோட்டங்களை உண்டாக்குகிறோம்; புதிய வட்டங்களை உண்டாக்குகிறோம். அதன் அடிப்படையில் மானியங்களையெல்லாம் இப்போது கொடுத்துக்கொண்டு நிருவாகத்தை மேலும் வேகமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் எல்லாம் சொன்னார்கள். இந்த துயர் துடைக்கின்ற பணிகளுக்கான நிதிகள் எல்லாம் குறித்த காலத்திற்குள் வரவில்லையே என்று சொன்னார்கள். சில நேரத்திலே வராமல்கூட இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், ஒன்றை மறந்துவிடக்கூடாது. அரசைப பொறுத்த அளவிலே ஒவ்வொன்றுக்கும் ஒரு காலக்கெடு நிர்ணயித்து, 30 நாட்கள், 60 நாட்கள், 100 நாட்கள், அதற்குள்ளே நீங்கள் முடிவு எடுத்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். அதை யாராவது அமல் நடத்தாமல் இருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்; நிச்சயமாக இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை உங்களுக்கு நான் நினைவுப்படுத்த ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக இப்போது கருவுற்ற தாய்மார்களுக்கு ஏழாவது மாதம் முதல் 500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் பயன் பெறுகின்ற தாய்மார்கள் ஏறத்தாழ 2 இலட்சம் பேர். இது 500 ரூபாய்தானே என்று சிலர் அலட்சியமாகக்கூட கருதலாம். உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஓர் ஆங்கில புத்தகத்தின் ஆசிரியர் சொன்னார். அவர் வெள்ளைக்காரர் காலத்திலும் இங்கே வந்தவர். நாம் சுதந்திரம் பெற்ற பிறகும் இந்தியாவிற்கு வந்தவர். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை சுற்றுப் பிரயாணம் செய்தவர். இங்கே, மக்கள் சுதந்திரமாக எப்படி வாழ்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்தார். பார்த்துவிட்டு, ஏழைத் தாய்மார்கள், கருவுற்ற தாய்மார்கள் தெருவீதிகளிலும், மரத்தடிகளிலும், சாவடிகளிலும் கேட்பாரற்று, அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஆட்களற்று அனாதைகள் போல் இருப்பதையும் பார்த்தார். அதேநேரத்திலே சில கிராமங்களைப் போய் பார்த்தார். பசுமாடு சினையானால் அதற்குக்

குளிப்பாட்டி பூச்சூடி, குங்குமம் சூடி அதை அழகுபடுத்துவதையும் அவர் பார்த்தார். பார்த்துவிட்டு, அந்த எழுத்தாளர் சொன்னார். "In India, the pregnant cows are more respected than pregnant ladies" என்று. கர்ப்பமுற்ற தாய்மார்களைவிட கர்ப்பமுற்ற பசுக்களுக்குத்தான் இந்தியாவில் மரியாதை என்று சொன்னார். இந்த அழுக்கை துடைத்த முதல் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் முதலிலே 200 ரூபாய் என்றார். பிறகு 500 ரூபாய் என்றார். இந்த 500 ரூபாய்க்கு இப்போது மத்திய அரசும் உதவி செய்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலதான் முதியோர்களுடைய உதவித் தொகை 150 ரூபாயிலேயிருந்து 200 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இவற்றுக்கெல்லாம் 60 நாட்களுக்குள் அந்த விண்ணப்பத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எந்த விண்ணப்பமாக இருந்தாலும் சரி, 100 நாட்களுக்குள் அதற்குப் பதில் வராவிட்டால் அது சம்பந்தமான முறையீடுகளையெல்லாம் நேரில் தெரிவிக்க வேண்டும் என்று திட்டவட்டமாக அரசு சொல்லியிருக்கிறது. எனவே, இந்த அரசு மாவட்ட நிருவாகத்தைப் பொறுத்தளவிலே எவ்வாறு செயல்படுகிறது என்பதை எண்ணிப்பாருங்கள். மனுநீதி நாளாக இருந்தாலும் சரி, மக்கள் துயர் துடைக்கின்ற அந்த நாளாக, வாரத்திற்கு ஒரு முறை வருகிற நல நாளாக இருந்தாலும் சரி, இவற்றின் மூலம் 5 இலட்சத்து 56 ஆயிரத்து 866 விண்ணப்பங்களைப் பெற்றிருக்கிறோம். விண்ணப்பங்களைப் பெற்றோம் என்பது பெரிது அல்ல; அவற்றில் 5 இலட்சத்து 5 ஆயிரத்து 502 விண்ணப்பங்களுக்குத் தீர்வு சொல்லியிருக்கிறோம். திரு. பா. வேல்துரை சொன்னார்; செயல்படவில்லை என்று சொன்னார். எந்த அடிப்படையிலே செயல்படவில்லை? எனக்குத் தெரியாது. ஒரு சில மனுக்கள் இருக்கலாம். நான் மறுக்கவில்லை. தேங்கிக் கிடக்கலாம். இல்லை விவரங்கள் வராமல் இருக்கலாம். நான் மறுக்கவில்லை இருக்க இடமுண்டு. 5 இலட்சம் மனுக்கள் வாங்கியதிலே தேக்கத்திலே ஒருசில மனுக்கள் இருக்கும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், இவ்வளவு மனுக்களையும் வாங்கி அவர்கள் உண்மையிலே பரிசீலித்து தீர்வு காண்கிறார்கள் என்றால் இந்த நிருவாகத்திற்கு நீங்கள் எல்லாம் எந்த அளவிற்கு ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதற்காகத்தான் இந்த விவரங்களையெல்லாம் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோன்றுதான் அமைச்சர்கள். இன்று நல்ல முறையில் சுற்றுப்பயணம் செய்கிறார்கள்; மக்களைச் சந்திக்கிறார்கள். குறைகளைக் கேட்கிறார்கள். அதேநேரத்தில் சிக்கனமாகவும் செயல்படுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. நான் இங்கே இந்த மன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு மட்டும் ஆன பயணச் செலவு 3 கோடியே 8 இலட்சத்து 94 ஆயிரத்து 666 ரூபாய். ஐந்து வருடத்தில் 3 கோடி ரூபாய். ஆனால், நம்முடைய கலைஞர் அவர்களுக்கு இதுவரை 15 இலட்சத்து 69 ஆயிரத்து 106 ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதிலிருந்து இந்த அரசு எவ்வளவு சிக்கனமாகச் செயல்படுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எவ்வளவு நேர்மையாக, மக்கள் கொடுக்கிற வரிப் பணத்தை வைத்துக்கொண்டு, பொறுப்போடு செயல்படுகிற அரசு என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதிலும் சொல்லப்போனால், மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று ** பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார் என்றாலும்கூட இப்படித்தான் நடக்கிறது. அந்தக் காலத்தில் ஆடம்பரங்கள்; அந்த ஆடம்பரங்கள் எல்லாம் அடியோடு ஒழிக்கப்பட்டு இப்போது சிக்கனம், எளிமை, நேர்மை, தூய்மை (மணியடிக்கப்பெற்றது) என்ற அடிப்படையில் இந்த ஆட்சி நடக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். உறுப்பினர்கள் எல்லாம் தரக்குறைவாகப் பேசக்கூடாது.

திரு. பி.ஆர். சுந்தரம்: ** என்று சொல்கிறார். அது தவறு. அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பல மாவட்டங்களுக்கும் பயணம் செய்தார்கள். மக்களைச் சந்தித்தார்கள். பிரச்சினைகளைத் தீர்த்தார்கள். ** என்ற வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: அவர்கள் வேறு எந்த இடத்திலாவது நின்று கொண்டிருந்தால் அந்த இடத்தைச் சொல்லட்டும். அதை நான் திருத்திக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லையில்லை. நீங்கள் உங்கள் பிரச்சினையைப் பேசி முடியுங்கள். விவகாரத்தை வளர்க்காதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கிற கடமையைச் செய்யுங்கள் ** என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் அப்படியே அந்த வார்த்தையை நான் விட்டுவிடுகிறேன். யாரையாவது குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், அவைக்குறிப்பில் இருந்து எடுத்துவிடுவேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: தனிப்பட்ட முறையில் யார் மீதும் நான் சொல்லவில்லை. அது வேறு விவகாரம். யாராவது அப்படி ** அதற்கு நான் பொறுப்பு இல்லை. அதற்காகத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பரிதி இளம் வழுதி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் துணைத் தலைவர். உங்களுக்கு என்ன பிரச்சினை?

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கட்சிக்குப் புதிதாக அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் ** என்பதைக் குறிப்பிட்டார் என்பதை இப்போது நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் எழுந்து நின்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 3 பேர் எழுந்து நின்றால் நான் யாரை அழைப்பது? கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களை உட்காருங்கள் என்று சொன்னால் நீங்கள் உட்கார வேண்டும். வேறு ஒரு உறுப்பினர் இதைச் சொல்லியிருந்தால்கூடப் பரவாயில்லை என்று விட்டிருப்பேன். துணை சபாநாயகர் சொன்னதனால் அதை அவைக்குறிப்பில் இருந்து எடுத்துவிடுகிறேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னதற்குத் தெளிவாகச் சொல்லிவிட்டார், யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அரசை வைத்துக்கொண்டு இந்த மாநிலத்திற்கு நன்மை செய்வது மட்டுமல்ல, இந்த மாநில அரசை நம்பியிருக்கிற மக்களுக்கு நன்மை செய்வது மட்டுமல்ல, தேசிய மட்டத்திலும் இந்த அமைச்சரவையை வைத்துக்கொண்டு ஒரு சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருப்பவர் நம்முடைய முதல்வர் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சீன ஆக்கிரமிப்பின்போது அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. சீன ஆக்கிரமிப்புதானே, நமக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று அலட்சியப்படுத்தி விடவில்லை. அந்தக் காலகட்டத்திலும், அதாவது 1962-லும் மாநாடு நடத்தி வசூல் செய்து, அப்போது முதல்வராக இருந்த பெரியவர், பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் நிதி உதவி அளித்தது. அதற்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காலத்தில், பாகிஸ்தான்-பங்களாதேஷ் போர் வந்தது. அந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 கோடி ரூபாயை வசூலித்து தேசியப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்தார்கள். வேறு எந்த முதலமைச்சரும் அப்போது கொடுக்கவில்லை. கலைஞர் அவர்கள்தான் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு, இப்போது கார்கில் போரில், 58,44,28,067 ரூபாயை வசூல் செய்து, அதில் 50 கோடி ரூபாயை கார்கில் நிதிக்கு, நாட்டின் பாதுகாப்பு நிதியாகக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், இந்த சரித்திரத்தைப் படைத்த முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே டாக்டர் கலைஞர்தான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு தேசிய கண்ணோட்டம் எவ்வளவு பரந்தது, எவ்வளவு விரிந்தது, எவ்வளவு ஆழமானது என்பதற்கு இவையெல்லாம் ஆதாரமாக விளங்குகின்றன. ஏனென்றால் சில நேரங்களிலே எங்களை குறுகிய கண்ணோட்டத்தோடு பார்க்கிறீர்கள். தவறான நோக்கத்தோடு எங்கள் கொள்கைகளுக்கு நீங்கள் காரணங்களைக் கற்பிக்கிறீர்கள். எங்கே உறவுக்குக் கை கொடுக்க வேண்டும்; எங்கே உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று கலைஞர் அவர்களுக்குத் தெரியும். எனவே, உறவுக்குக் கரம் கொடுக்கின்ற இடத்தில் மற்றவர்களை மிஞ்சுகின்ற அளவில் அந்தக் கரத்தை கொடுக்கின்றவர்தான் நம்முடைய கலைஞர் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆலடி அருணா] [2000 மே 9

பிற்பகல் 1-25

அவர் வழக்கமாகச் சொல்வார், என் பெயரில் கருணை அதிகமாக இருக்கிறது. இது 3 எழுத்து, நிதி 2 எழுத்து; அதனாலே எனக்குக் கருணை அதிகம், கருணை இருக்கிற அளவுக்கு நிதி கிடையாது. கொஞ்சம் நிதி குறைவாகத்தான் கொடுப்பேன் என்று நகைச்சுவையாகச் சொல்வார். ஆனால் உண்மை என்னவென்றால், அப்படி அல்ல, அவர் நிதி கொடுப்பதே கருணை உள்ளத்தோடு வாரி, வாரி கொடுக்கிற காரணத்தால்தான் அவருக்கு அந்தப் பெயர் வந்தது. அப்படி அவர் வாரி, வாரி மக்களுக்காகவும், தேசியப் பாதுகாப்புக்காகவும் கொடுக்கின்ற மாண்புமிகு முதலமைச்சருடைய மானியக் கோரிக்கை இங்கே வந்திருக்கிறது. நீங்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்த மாட்டீர்கள் என்று கருதுகின்றேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தவர்கள் எல்லாம் திரும்பப் பெறவேண்டும். வரிச் சலுகைகளைப் பற்றியும் பலபேர் சொன்னார்கள். அந்த வரிச் சலுகைகள், குறிப்பாக புஞ்சை தானியங்களுக்கு வரி எடுக்க வேண்டும். மண் பாண்டங்களுக்கு வரி எடுக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளைச் சொன்னார்கள். இந்தக் கோரிக்கைகள் எல்லாம் தவறானது என்று நான் கருதவில்லை. அதிலே சில நியாயங்கள் இருக்கின்றன என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். இவற்றைப் பற்றியெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Appropriation Bill-லே உங்கள் மனம் மகிழத்தக்க அளவிற்கு விடை தருவார்கள் என்று எடுத்துச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தவர்கள் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 4–பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்–நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

2000 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

திரு. ந. கருப்பண்ண உடையார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.124,74,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 9– மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப்

பணியாளர்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்..

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன். அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

திரு. க. மணிவர்மா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

திரு. ந. கருப்பண்ண உடையார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.178,78,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 11- மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்

திரு. வை. சிவபுண்ணியம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

திரு. க. மணிவர்மா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

திரு. ந. கருப்பண்ண உடையார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.577,55,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (10-5-2000) உள்ளாட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கை. இதில் ஏராளமான உறுப்பினர்கள் பேச விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம் என்ற தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 10-5-2000 (புதன்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2000 மே 9

நாளை (10-5-2000) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-5-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

159. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் சேமியா விற்பனையைப் பொறுத்த வரையில் 4-3-1974 முதல் 30-11-1974 வரையிலான கால அளவிற்கு திருச்சிராப்பள்ளி, உறையூரைச் சேர்ந்த திருவாளர்கள் "பாரமவுண்ட் இண்டஸ்ட்ரீஸ்" நிறுவனத்தால் செலுத்தத்தக்க வேறுபாட்டு வரி மற்றும் மேல்வரிகளை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 13-1-2000 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

204. மானியக் கோரிக்கை எண் 4-தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள்-நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

205. மானியக் கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

206. மானியக் கோரிக்கை எண் 11-ன் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

207. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (1999-2000)

208. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து நான்காவது அறிக்கை. (1999-2000)

2000 மே 9]

209. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (1999-2000)

210. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (1999-2000)

211. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (1999-2000)

212. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை. (1999-2000)

213. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (1999-2000)

214. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (1999-2000)

215. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஐந்தாவது அறிக்கை. (1999-2000)

216. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஆறாவது அறிக்கை. (1999-2000)

இணைப்பு–I

(256 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள்—நிருவாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு 2000–2001

தோற்றுவாய்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

—திருக்குறள்

(பொருளுரை: தகுதி உடையோர் நலனுக்கு
உதவிடும் பொருட்டே ஒருவன் முயன்று திரட்டிய
பொருள் பயன்பட வேண்டும்.)

தமிழ்நாடு அரசு பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் முன்னணியில் திகழ்வதோடு, அத்திட்டங்களுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்க வழிமுறைகளைக் கண்டறியவும் வேண்டியுள்ளது. வணிக வரித் துறையே நிதி ஆதாரங்களைப் திரட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 1939 ஆம் ஆண்டில் தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விற்பனை வரிவிதிப்பு, தற்போது மாநிலத்தின் மொத்த வருவாயில் 70 விழுக்காட்டிற்கும் அதிகமாக வருவாய் ஈட்டித்தரும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் இந்த அரசு ஒரு நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இந்த வரிவிதிப்பு கொள்கையானது, பின்வரும் மென்மையான மற்றும் மேன்மையான வரிவிதிப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு வணிக வரித் துறையால் செயல்படுத்தப் பட்டு வருகின்றது:-

(1) நியாயமான மற்றும் நடுநிலைமையான முறை.

(2) பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்காத வகையில், ஆனால் அதே சமயம் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட முறை.

(3) வரி செலுத்துவோர் மற்றும் நிருவாகத்தினர் ஆகிய இரு தரப்பட்டோரும் கடைபிடிக்கும் வண்ணம் எளிதான நடைமுறை.

(4) பொருளாதார வளர்ச்சியுடன் கூடிய வருவாய்ப் பெருக்கம்.

(அரசு வரிவிகித உயர்வு செய்வதன் மூலமேயல்லாமல் பொருளாதாரம் வளர்ச்சியடையும் பொழுது வருவாய் தன்னிச்சையாகப் பெருக வேண்டுமென்று அடிப்படையில்).

2. வணிக வரித் துறை பின்வரும் சட்டங்களை நிருவகிக்கிறது.—

(1) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959.

(2) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970.

(3) மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956.

(4) தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939.

(5) தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம், 1961.

(6) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம், 1935.

(7) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம், 1981.

(8) தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983.

(9) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990.

3. திரு. சி. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு பெரும்பாலான பரிந்துரைகளின் மீது உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

4. வரிவிதிப்பு நிர்வாகம் தொடர்பான நீண்டகாலக் கொள்கை.

மேற்கண்ட கொள்கைகளைச் செயற்படுத்தும் போது, பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின்மீது விற்பனை வரி விதிக்காவண்ணம் அரசு கவனத்தில் கொண்டு செயல்படுகிறது. அத்தியாவசியப் பண்டங்களின்மீது மிகக் குறைந்த அளவில் 4 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்படுகிறது. ஆடம்பரம் என

கருதப்படும் பொருட்கள் மட்டுமே அதிகபட்ச வரி விகிதத்திற்கு உள்ளாகிறது.

5. 1996-97 ஆம் ஆண்டு முதல் முக்கிய கொள்கையாக நமது வரிவிதிப்பில் பின்பற்றிவரும் அம்சங்களாவன:-

(1) வரி வீதங்களில் அதிக அளவில் வெளிப்படைத் தன்மையையும், வரி விதிப்பு மற்றும் வரிவசூலில் எளிமையையும் அளிக்கும் நோக்குடன் வரி வீதங்கள் மற்றும் வரி படி முறைகளைச் சீரமைத்தல்;

(2) வரி விதிப்பில் நவீன முறைகளையும், நடவடிக்கைகளையும் அதிக அளவில் அறிமுகப்படுத்துதல்;

(3) வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி விதிப்பு போன்ற வரி விதிப்பு நடைமுறைகள் என்ற வகையில், பெரும் எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்; மற்றும்

(4) அன்றாடம் பொதுமக்கள் பயன்படுத்தும் வீட்டு உபயோகப்பொருட்களின் மீதுள்ள வரிச்சுமையினைக் குறைத்தல்.

6. அரசின் நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கையின் அடிப்படையில் நிதிநிலை பற்றாக்குறை இருந்தபோதிலும், பொது மக்கள் நலனையும் தொழில் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, கடந்த 5 ஆண்டுகளாக பல்வேறு பொருட்களுக்கு வரிச் சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. ஆண்டு வாரியாக அளித்த வரிச் சலுகை விவரம் பின்வருமாறு:-

1996-97	ரூ. 353 கோடி
1997-98	ரூ. 143 கோடி
1998-99	ரூ. 81 கோடி
1999-2000	ரூ. 25 கோடி
2000-2001	ரூ. 76 கோடி (சுமார்)
மொத்தம் ..	ரூ. 678 கோடி

முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை, தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையில் கணக்கிட்டால் இந்த ஐந்து ஆண்டுகளில்

ஏறத்தாழ 2,700 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகள்
வழங்கப்பட்டுள்ளன.

7. பொருளியல் வல்லுநர், டாக்டர் இராஜா செல்லையா
அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினால்
தயாரிக்கப்பட்ட அறிக்கை ஆராயப்பட்டு நிதியமைச்சர்கள் கொண்ட
குழுவில் விவாதிக்கப்பட்டது. அவர்கள் ஒருமித்த கருத்தினை
மேற்கொண்டு பின்வரும் பரிந்துரைகளை அளித்தனர்:-

(1)வ ரி கட்டமைப்பை சீர்படுத்துதல் மற்றும் எளிமைப்படுத்துதல்.

(2) மாநிலங்களுக்கிடையேயான வரிவிகிதத்தை சுமுகமாக்குதல்.

(3) மதிப்பு கூட்டுவரியை படிப்படியாக நடைமுறைப்படுத்துதல்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வருவாய் ஈட்டித்
தருவதில் விற்பனை வரியே முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், தத்தம்
மாநிலங்களில் வணிக நடவடிக்கைகளைப் பெருக்குவதற்காக
மாநிலங்கள் நடத்தும் விற்பனைவரி விகிதப் போட்டிகளால், வரி
வருவாயைப் பெருக்குவதில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது.
தொழிலகங்களை ஈர்க்கவும் புதிய தொழிற்சாலைகளைக் கவரவும்
பல்வேறு விதமான விற்பனை வரிச் சலுகைகளை அளித்து அதன்
மூலமாக தங்களுடைய மாநிலமே முதலீட்டார் நட்புடைமைக்கு உகந்த
மாநிலமாகத் திகழ, மாநிலங்களுக்கு இடையே பலத்த போட்டி
நிலவியது. இவ்வாறு மாநிலங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு
மாநிலங்கள் விற்பனை வரி தொடர்பான சலுகையாக, 14 வருடங்கள்
வரை வரித் தள்ளிவைப்பு அல்லது 7 வருடங்கள் வரை வரித் தள்ளுபடி
போன்ற சலுகைகளை அளிக்கத் தொடங்கின. இவ்வகையான
நடவடிக்கைகள், பெரும்பாலான மாநிலங்களுக்கு வரி வருவாய்
பாதிக்கப்பட்டதுடன், வேண்டிய நிதி ஆதாரநிலையில் பெருமளவு
பாதிப்பு ஏற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில், !6-11-1999ஆம் நாளன்று
தேசிய பொதுநிதி மற்றும் கொள்கை நிறுவனத்தால் கூட்டப்பட்ட
கூட்டத்தில் அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும்
நிதியமைச்சர்கள் ஒன்று கூடி, வரிவிகிதம் மற்றும் வரிச் சலுகைப்
போட்டிகளை அகற்றவும், நாடு முழுவதும் சமச்சீர் வரித் தளம்
உருவாக்கி, அதற்கும் கீழான வரி வீதம் இல்லாவண்ணம் செயல்படுத்தி
அனைத்து வரிச் சலுகைகளையும் நீக்கிட ஒருமனதாக முடிவெடுத்தனர்.
இதனை நடைமுறைப் படுத்தும்பொழுது மாநில அரசுகள் நேர்மையான
மற்றும் நடுநிலைமையான செயல்பாடுகள் மூலம் போதுமான
வருவாயைத் திரட்டி பொருளாதாரத்தில் முன்னேற்றமும், அதிக

வாய்ப்பினையும் பெற முடியும் என
அளவில் வேலை வாய்ப்பினையும் பெற முடியும் என
எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டத்தினை முடித்துவைக்கையில், மத்திய
நிதி அமைச்சர் அவர்கள் ஒருமித்த கருத்து அடிப்படையில்
எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவரங்களை
பின்வருமாறு அறிவித்தார்:—

(1). மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் சமச்சீர் தளவரி விதிப்பு
முறையினை செயல்முறைப்படுத்துதல்:— சமச்சீர் தள விற்பனை
வரியினை அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் 1-1-2000 முதல்
செயல்படுத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

(2) வரிச்சலுகைக்குத் தகுதியாகும் "பிற்பட்ட பகுதி"க்கு உள்ள
திருத்திய விதி உட்பட வரி ஊக்குவிப்புத் திட்டங்களை அறவே
நிறுத்துதல்:-அனைத்து மாநிலங்களும் தொழிற்சாலைகளுக்கு விற்பனை
வரிகளின் அடிப்படையில் வரிச்சலுகைகள் வழங்குவது அல்லது
அனுமதியளிப்பது 1-1-2000 முதல் நிறுத்தப்பட வேண்டும்.

(3) மாநில அரசுகளால் மதிப்புக்கூட்டு வரியினை
நடைமுறைப்படுத்துவதற்கான காலவரம்பு மற்றும் வழிமுறைகளை
இறுதியாக்குதல்:-1-4-2001-ஆம் நாள் முதல் மதிப்புக்கூட்டு வரியினை
அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களால்
நடைமுறைப்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. இதற்கு
இடைப்பட்ட காலத்தினை, இதற்கான முன்னேற்பாடுகளை
செய்வதற்காகவும், கணினி மயமாக்குதல் மற்றும் விளம்பரம்
உள்ளடக்கிய பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும். மேற்கூறிய
நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் நிதி மற்றும் தொழில்நுட்ப
உதவிகளை மத்திய அரசு, புதுதில்லியிலுள்ள, தேசிய பொதுநிதி மற்றும்
கொள்கை நிறுவனம் மூலமாக அளிக்கும். மதிப்புக் கூட்டு வரியினை
அறிமுகப்படுத்துவதால், துவக்க காலத்தில் மாநிலங்களுக்கு ஏற்படும்
வரிவருவாய் இழப்பினையும் மத்திய அரசு ஈடுசெய்யும்.

(4) மத்திய விற்பனை வரிகளைச் சீர்ப்படுத்துதல்:-

சேவை வரி, அனுப்பீடு வரி (Consignment Tax) மற்றும்
அறிவிக்கப்பட்ட பொருட்கள் மீதான வரிகள் மாநில அடிப்படையில்
சார்ந்துள்ளதால் மத்திய வரி விதிப்பு திட்டத்தினை மேலும் ஆய்வு
செய்ய வேண்டியுள்ளதால் புதுதில்லியிலுள்ள தேசிய பொது நிதி மற்றும்
கொள்கை நிறுவனம், மேற்கூறிய பொருளை ஆய்வு செய்யுமாறு கேட்டுக்
கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

53-134—11a

(i) சமச்சீர் வரிவிதிப்பு முறை: [2000 மே 9

அனைத்து மாநிலங்களும் சமச்சீர் வரியினை செயல்படுத்தினால், வரி விதிப்புப் போட்டியின்றி தொழில் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், மாநிலத்திற்கான வருவாயை உயர்த்துவதற்கும் ஏதுவாயிருக்கும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையில், நம் மாநிலத்தில் பல்வேறு பொருட்களுக்கான வரி விகிதத்தில் மாற்றங்கள் செய்வது இன்றியமையாததாகிவிட்டது.

23-1-2000 முதல் சமச்சீர் வரி விதிப்பு முறையால் மாற்றம் செய்யப்பட்டவை:-

- தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள், பழுதடைந்த மற்றும் தேய்ந்த நகைகளின் மீதான வரிவிகிதம் 0.5 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மோடம், ஸ்பீக்கர் அதன் துணை பாகங்கள் மற்றும் தடையிலா மின் வழங்கும் அமைவுகள் ஆகியவைகளுக்கு வரிவிகிதம் 2 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சிறிய மின்னியல் மாற்றமைவுகள் மீதான வரி விகிதம் 2 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் இப்பொருட்களுக்கு 3 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக 1-4-2000 முதல் குறைக்கப்பட்டது.
- ரொக்கம் பதிவு செய்யும், அட்டவணைப்படுத்தும், கணக்கிடும் மின்னணு பொறிகள் போன்ற மின்னணு சாதனங்கள், படிபெருக்கி பொறிகள், மின்னணு அமைப்பு பொறிகள், மின்னணு தொலையச்சுப் பொறிகள், மின்னணு தட்டச்சுப் பொறி, கிராம்போன் ஒலித்தட்டை இயக்கச் செய்யும் அனைத்துவகை கருவிகள், ஒளிப்பேழை படம் காட்டும் மற்றும் படம் பதிவு செய்யும் கருவிகள், தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள் மற்றும் படம் காட்டும் கருவிகள், டிரான்ஸிஸ்டர் மற்றும் கையடக்க வானொலிப்பெட்டி- ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

2000 மே 9]

- மின்னணு விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சந்தனமர எண்ணெய் மீதான வரி விகிதம் 4 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகவும், சந்தன கட்டை மீதான வரி விகிதம் 8 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- தொலைக்காட்சிப் பெட்டிகள் மீதான வரி 10 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஒட்டுப் பசைகள், காற்றூட்டப்பட்ட பானங்கள், புட்டிகளில் அடைக்கப்பட்ட மென்மையான பானங்கள், வானூர்திகள் அதன் உதிரி பாகங்கள், திரைப்படக் கருவிகள், கடிகாரங்கள், மாட கடிகாரங்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் வெட்டுக்கரணங்கள், உலர்ந்த பழங்கள், பேரீச்சம் பழங்கள், மத்தாப்பூ மற்றும் பட்டாசு வகைகள், உரோமம் மற்றும் தோலுடன் கூடிய உரோமம், தோல் பொருட்கள் (காலணி தவிர), இலகு மேல் கூரைத் தகடுகள், மோட்டார் வாகனங்கள், பிவிசி குழாய்கள், இரப்பர் பொருட்கள், ஒலி அனுப்புச் சாதனங்கள், மற்றும் கம்பியில்லாச் செய்தி பெறும் மற்றும் அனுப்பும் சாதனங்கள் ஆகியவைகளின் மீதான வரி விகிதம் 11 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

10-1-2000 மற்றும் 16-1-2000 ஆகிய நாட்களில் புதுடெல்லியில் நடைபெற்ற வரிச் சீரமைப்பு தொடர்பான மாநில நிதி அமைச்சர்கள் அடங்கிய கூட்டத்தில் அத்தியாவசியத் தேவைக்கு பயன்படக்கூடிய பொருட்கள் மீதான வரியைக் குறைக்குமாறு அந்த குழுவினை இந்த அரசு வலியுறுத்தியது. இந்த அரசு வலியுறுத்தியதை நிலைக்குழுவும், மத்திய அரசும் ஏற்றுக் கொண்டு பின்வரும் பொருட்களின் வரி விகிதத்தைக் குறைத்துள்ளது:-

அ. பூஜ்யம் விழுக்காட்டிற்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள்:

வரிசை எண்	பொருட்கள்
1	முறையாகப் பதப்படுத்தப்பட்ட பால்
2	வணிகச் சின்னம் உள்ள ரொட்டி
3	பதனம் செய்யப்பட்ட உப்பு

[2000 மே 9

வரிசை எண்	பொருட்கள்
4	அடுப்புக்கரி
5	கோழி மற்றும் கால்நடைத் தீவனம்
6	பூண்டு மற்றும் இஞ்சி
7	சூரிய மின்சார தயாரிப்புச் சாதனங்கள் மற்றும் அதன் உதிரிப் பாகங்கள்
8	கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள்
9	விறகு
10	விவசாயக் கருவிகள்
11	கையினால் நீரேற்றும் குழாய் மற்றும் உதிரிப் பாகங்கள்
12	அலுமினிய பாத்திரங்கள்
13	அகர்பத்தி
14	கல்வி சார்ந்த எழுது கருவிகள்
15	உயிர்காக்கும் மருந்துகள்
16	கச்சாப்பட்டு
17	இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் காலணிகள் மற்றும் ஷூக்கள் உயர்ந்த பட்ச கடைசி விற்பனை விலை ரூ.200-க்கும் அதற்குக் கீழும் இருப்பின்
18	மஞ்சள்
19	புளி
20	மிளகாய்

2000 மே 9]

ஆ. 4 விழுக்காட்டிற்கு கொண்டுவரப்பட்ட பொருட்கள்:

வரிசை எண்	பொருட்கள்
1 (அ)	பின்வரும் தொழிலக இடுபொருட்கள்:- கந்தகம், துத்தநாகம் மற்றும் அலுமினியம் போன்ற இரும்பு அல்லாத உலோகம்
(ஆ)	வார்பட்டை (Belting)
(இ)	உருள் பரல்கள் (Bearing)
(ஈ)	பாரைட்டுகள் ஹைட்ரஜன் பெராக்சைடு, சிலிக்கான் கார்பைடு, சுண்ணாம்பு, காஸ்டிக் சோடா மற்றும் பெரோ சிலிக்கான் போன்ற இரசாயனப் பொருட்கள்
(உ)	சாயங்கள்
(ஊ)	இரும்பு கலப்பு உலோகம் மற்றும் உயர்வகைக் கலப்பு உலோகம்
(எ)	கடும் வெப்பம் தாங்கும் ஊதுலைக் கற்கள் (Refractory Bricks)
(ஏ)	மின்மாற்றிகள் (Transformers)
(ஐ)	பாலிஸ்டைரின்
2	கணினி
3	இயந்திரக் கலப்பை மற்றும் அறுவடை இயந்திரம்
4	வாசனைப் பொருட்கள் (Spices)
5	அனைத்து வகை இழைகள்
6	தையல் நூல்
7	மருந்து வகைகள் (Bulk Drugs)
8	உலர்ந்த பழங்கள்
9	தகவல் தொழில் நுட்பப் பொருட்கள்
10	கப்பல் (கப்பல் கட்டுமானம் உள்ளிட்ட)
11	நீரேற்று இயந்திரங்கள் மற்றும் எண்ணெய் இயந்திரங்கள்
12	ஊதுலைக் கற்கள் உள்ளிட்ட அனைத்து வகைச் செங்கற்கள்
13	நிலக்கீல் (தார்) கூரை வேய்தல்

இ. 8 விழுக்காட்டிற்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள்:

வரிசை எண்	பொருட்கள்
1	பிளாஸ்டிக் பொருட்கள்
2	மின்விசிறி உள்ளிட்ட அனைத்து வகை மின்சார பொருட்கள் மின்மாற்றி நீங்கலாக
3	வகைப்பாடு ஒன்றில் குறிப்பிடப்படாத காலணிகள்
4	அனைத்து வகையான அறை கலன்கள் (Furniture)
5	வகைபாடு ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்படாத மருந்துகள்
6	அனைத்து வகை வடங்கள் (Cables)

II. விற்பனை வரியினை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படும் ஊக்குவிப்பு திட்டங்களை நிறுத்துவது:

மாநில மற்றும் யூனியன் பிரதேச முதலமைச்சர்கள்/நிதியமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்தினை அரசு கவனமாக ஆராய்ந்து விற்பனை வரியை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுவரும் விற்பனை வரி தள்ளுபடி திட்டங்களை பின்வருமாறு அறவே நிறுத்தலாமென முடிவு செய்யப்பட்டது:-

(i) *23-1-2000* முதல் எந்தவொரு தொழிற்சாலைக்கும் புதிய ஊக்குவிப்புச் சலுகை வழங்கக் கூடாது;

(ii) தற்போது அளிக்கப்படும் ஊக்குவிப்புகள் அதன் தகுதி காலம் வரை தொடர்ந்து இருக்கலாம்; மற்றும்

(iii) தற்போது புதியதாக தொடங்கப்பட்டுவரும் தொழிலகங்கள், ஊக்குவிப்புச் சலுகை பெறுவதற்கு பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்:-

(அ) தொழிலகங்கள், மாநில/மத்திய அரசின் தொழில் துறையில் பதிவு செய்திருக்கப்பட வேண்டும்;

(ஆ) தொழிற்சாலைக்கான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது நிலம் வாங்கியிருக்க வேண்டும்;

(இ) தொழிற்சாலை நிதி உதவிக்காக முறையான நிதி நிறுவனத்திடம் விண்ணப்பித்திருக்க வேண்டும்;

(ஈ) *23-1-2000*-த்திலிருந்து உற்பத்தியை இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக தொடங்கிட வேண்டும்.

தற்போது இயங்கிவரும் தொழிற்சாலைகள் விரிவாக்கம் மற்றும் மாற்றியமைப்பு மேற்கொண்டால், *23-1-2000*-க்குள் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை வாங்கியிருக்கவேண்டும். அவை *22-1-2001*-க்குள் வணிக உற்பத்தியைத் துவங்கவேண்டும். இந்நிபந்தனைகளைப் பூர்த்திச் செய்யும் விரிவாக்கம்/மாற்றியமைப்பு தொழிற்சாலைகளே வரி ஊக்குவிப்பு சலுகைகளைப் பெற தகுதி உடையவையாகும்.

(3) மதிப்புக் கூட்டு வரி:

நமது மாநிலத்தில் *1-11-1996* முதல் மதிப்புக்கூட்டு வரிவிதிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, ஒரு வணிகரின் மொத்த விற்பனைத்தொகை ஓர் ஆண்டிற்கு ரூபாய் *75* இலட்சத்திற்கு மிகைப்படின், பொருள்களின் மறு விற்பனைத்தொகையின் மீது, சம்பந்தப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரி செலுத்துதல் வேண்டும். ஆனால், வணிகர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், இவ்வரிவிதிப்பினை நிறுத்தி வைக்க அரசு தீர்மானித்து, *1-11-1996* முதல் *31-3-2000* வரை உள்ள காலத்திற்கு மதிப்பு கூட்டுவரி விலக்கு அளித்தது. தற்போது, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச முதலமைச்சர்கள், நிதியமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்தின் அடிப்படையில் மேற்கொண்ட முடிவின்படி இந்த மதிப்புக் கூட்டுவரி விலக்கை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே *31-3-2001* வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

(4) மத்திய விற்பனை வரி விதிப்பு முறையில் சீர்திருத்தங்கள்:

புதுடெல்லியிலுள்ள தேசிய மற்றும் பொது நிதிக்கொள்கை நிறுவனம் இப்பொருள் மீது மேலும் ஒரு ஆய்வினை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து இதன் மீதான ஒருமித்த கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.

8. 2000-2001-க்கான நிதி ஆண்டில் 1-4-2000 முதல் பின்வரும் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன:—

I. வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள இனங்கள்:

(அ) மக்கள் நலன் தொடர்பானவை:

* நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (Cord), அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச்சின்னமில்லாத காய்கறி வத்தல்கள் மற்றும் உறையவைக்கப்பட்ட விந்து ஸ்டிரா ஆகியவைகள் மீது விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.
* அரசு, பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிந்த அலுவலர்கள் ஓய்வு பெறும்போது பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரும் மோட்டார் வாகனங்களின் மீதான நுழைவு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

(ஆ) தொழிற் துறை தொடர்பானவை:

தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

II. குறைக்கப்பட்ட வரி விகிதங்கள்:

(அ) மக்கள் நலன் தொடர்பானவை:

* அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி கடைசி கொள்முதலின் போது 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* பேஜர்கள், செராமிக் கற்கள் (Ceramic bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (bleached liquid) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

* வறுகடலை மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* ஓமியோபதி மற்றும் ஆயுர்வேத மருந்துகள் மீதான வரி 4-4-2000 முதல் 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(ஆ) தொழில் துறை தொடர்பானவை:

* மொசைக் கற்கள், செராமிக் சுவர் மற்றும் தள ஓடுகள் மற்றும் பளிங்குக் கற்கள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்ட முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 3-ல் உள்ள செராமிக் துப்புரவுக் கலன்கள், வரிசை எண்.5-ல் உள்ள இஸ்திரிப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீடு மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மற்றும் வரிசை எண்.7-ல் உள்ள அனைத்து வகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 6-ல் உள்ள அனைத்து வகை மின்சக்திப் பொருட்கள் மீதான விற்பனைவரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* உருளைகள் (bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.
* மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(மேற்கண்ட பொருட்களின் வரி விகிதங்கள் அண்டை மாநிலங்களை விட அதிகமாக இருப்பதால் வணிகம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு வரி குறைப்பு செய்யப்படுகிறது. அதனால் வரி இழப்பு ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்படும் வருவாய் மாற்றங்கள் ஆறு மாத காலத்திற்குப்பின் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட பொருட்களில் வரி இழப்பு ஏற்படுமாயின், அவற்றில் தக்க மாற்றம் செய்யப்படும்.)

[2000 மே 9

* மின்வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மற்றும் இந்திய மின்சார சட்டம், 1910-ன் கீழ் உரிமம் பெற்ற அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

* திரைப்படங்கள் குத்தகை மீதான விற்பனை வரி 1-4-2000 முதல் அறவே நீக்கப்பட்டது.

III. வணிக சமுதாயம் தொடர்பானவை:

* வணிகர்கள் பதிவுச் சான்று பெற விண்ணப்பித்தால் ஒருவார காலத்திற்குள் சான்று வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

* வணிக உரிமங்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கத் தகுதியுள்ள அனைத்து வணிகர்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

* வணிகர்களுக்குத் தேவையான சில படிவங்களை வணிக வரித் துறை அலுவலகத்தில் பெறுவதில் உள்ள தாமதங்களைத் தவிர்க்க வணிகர்கள் தாங்களே அச்சடித்த படிவங்களை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

* ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேல், ஆனால் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் குறைவாக வியாபாரம் செய்த வணிகர்கள், முதல் மூன்று இலட்சம் வரை உள்ள விற்பனை மீது வரி வசூல் செய்திராவிடில், அத்தொகையின் மீது செலுத்தவேண்டிய விற்பனை வரி ரத்து செய்யப்படுகிறது.

* சுயவரி விதிப்புக்குத் தற்போதுள்ள உச்சவரம்பான ரூபாய் 20 இலட்சம், ரூபாய் 1 கோடியாக அதிகரிக்கப்பட்டு, இத் தொகை வரை மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் அனைவருக்கும் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (Chartered Accountant) தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில் வரிக் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரி விதிப்பு ஆணை பிறப்பிக்கப்படும். இதில் கணிப்பொறி மூலம் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு செய்யப்படும்.

2000 மே 9]

IV. கூடுதல் வருவாய் வரும் இனங்கள்:

* 2000-2001 ஆம் நிதியாண்டில், கூடுதலான வருவாயை பெருக்கும் வகையில் பின்வரும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

* ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை (Maximum Retail Price) ரூ. 29-ம் அதற்கு மேலும் உள்ள மென் பானங்களுக்கான விற்பனை வரி 1-4-2000 முதல் 12 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

V. 2000-2001 ஆம் ஆண்டுக்காக அறிவிக்கப்பட்ட சில முக்கிய மாற்றங்கள்:

* பரிசுச் சீட்டு விற்பனை மீதான இணக்க வரி செலுத்தும் வணிகர்களுக்கு இருந்த விருப்பத் தேர்வு ரத்து செய்யப்பட்டு அனைத்து லாட்டரிச் சீட்டு வணிகர்களும் இணக்க முறையிலேயே வரி செலுத்த வகை செய்யப்படுகிறது. இணக்க வரி வீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்படுகின்றன:—

	தற்போதைய வரி.	மாற்றியமைக்கப் படும் வரி.
வாராந்திர குலுக்கல்	ரூ.10,000	ரூ.20,000
மாதமிருமுறை குலுக்கல்	ரூ.15,000	ரூ.25,000
மாதாந்திர குலுக்கல்	ரூ.25,000	ரூ.40,000
மாதாந்திர சிறப்பு குலுக்கல்	ரூ.40,000	ரூ.60,000
விழாக்கால சிறப்பு குலுக்கல்	ரூ.60,000	ரூ.1,00,000

* அறை வாடகை தினம் ரூ.200-க்கு மேல் உள்ள தங்கும் விடுதிகள் மீதான 20 விழுக்காடு ஆடம்பர வரி 1-4-2000 முதல் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டது:—

(அ) ரூ.200-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ.500-க்கு குறைவாகவும் நாளொன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை இருப்பின் —15 விழுக்காடு

(ஆ) ரூ.500-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ.1000-க்கு குறைவாகவும் நாளொன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை இருப்பின் —20 விழுக்காடு

(இ) ரூ.1000-மும் மற்றும் அதற்கு மேல் நாளொன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை இருப்பின்

—25 விழுக்காடு

* கேபிள் டி.வி. மீது விதிக்கப்பட்ட கேளிக்கை வரி வசூலை அதிகரிக்கவும், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஒன்றை அளிக்கவும், தற்போது கேபிள் டி.வி. நடத்துபவர்கள் மீது தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கேளிக்கை வரி விகிதத்திற்கு மிகாமல் உள்ளாட்சி அமைப்புகள் தாங்களே கேளிக்கை வரி விதித்து வசூல் செய்துகொள்ள அனுமதியளிக்கப்படும்.

* தற்போது கேளிக்கை வரிச் சட்டப் பிரிவு 4-ன் கீழ் வசூலின் அடிப்படையில் வரி செலுத்தும் மாநகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள் விருப்பப்படின் இணக்கவரி செலுத்த வகை செய்யப்படுகிறது. அவர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் (Gross collection capacity) 22 விழுக்காடு 25 காட்சிகளுக்கென கணக்கிட்டு இணக்க வரி வாரந்தோறும் செலுத்தலாம். சிறப்புத் தகுதி நகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் 21 விழுக்காடு 25 காட்சிகளுக்கென கணக்கிட்டு இணக்கவரி வாரந்தோறும் செலுத்தலாம்.

* 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு 4-ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள் புதிய திரைப்படங்களின் மீது செலுத்தும் கேளிக்கை வரி 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்படுகிறது. மேலும் பிரிவு 5-A மற்றும் 5-B-ன் கீழ் உள்ள இணக்கவரியும் இதற்கு இணையாக குறைக்கப்படுகிறது.

VI. சமாதான் திட்டம்:

வணிகவரி தொடர்பான பல மேல்முறையீடுகள், பல்வேறு மேல்முறையீட்டு மன்றங்களில் பல ஆண்டு காலமாக நிலுவையில் உள்ளதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் பெருமளவில் நிலுவையில் இருந்தது. எனவே மேற்படி நிலுவைத் தொகையின் பெரும்பகுதியை

வசூலிக்கும் வகையில் ''சமாதான் திட்டம்'' ஒன்றினை இந்த அரசு அறிமுகப்படுத்தியது. மேற்படி திட்டத்தின் வாயிலாக 1,647 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டதில், ரூபாய் 19.27 கோடி வரி வசூல் செய்யப்பட்டது. இத்திட்டம் 30-9-1999 வரை மட்டுமே செயலாக்கத்தில் இருந்தது.

9. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்:

I. வரிவிதிப்புப் பிரிவு:

இப் பிரிவு இத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்களின் கீழ் வரி விதிப்பதும், வசூலிப்பதுமான பணிகளைச் செய்கிறது. நம் மாநிலத்தில் 10 வணிக வரிக் கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் துணை ஆணையர்களின் தலைமையில் இயங்குகின்றன. இக் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வணிக வரி மாவட்டங்கள் எனவும், சென்னை மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் அப் பிரிவுகள் வணிகவரிச் சரகங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இம் மாநிலத்தில் 6 விரைவு வழி வரி விதிப்பு வட்டங்களை (உதவி ஆணையர்களைத் தலைவராகக் கொண்டு சென்னையில் 4 வட்டங்களும், கோயம்புத்தூரில் 2 வட்டங்களும்) உள்ளடங்கிய 323 வரி விதிப்பு வட்டங்கள் இயங்குகின்றன. 236 வரி விதிப்பு வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும் 81 வரி விதிப்பு வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும் இயங்கி வருகின்றன.

II. தணிக்கைப் பிரிவு:

உட் தணிக்கைப் பிரிவு சம்பந்தப்பட்ட துணை ஆணையர்களின் வழிகாட்டுதலின்படி அனைத்து வரிவிதிப்பு தொடர்பான ஆவணங்களையும் ஆய்வு செய்கிறது. இவ்வாறாக 40 உட்தணிக்கைக் குழுக்கள் இயங்குகின்றன. கணக்காய்வுத் தலைவர் மற்றும் உட்தணிக்கைப் பிரிவு ஆகியவற்றின் ஆய்வறிக்கைகள் மீது இணை ஆணையர் (தணிக்கை) நடவடிக்கை எடுக்கின்றார்.

1999-2000 ஆம் ஆண்டில் இந்த உட்தணிக்கை பிரிவுகள் 49,933 இனங்களில் குறைகளை சுட்டிக்காட்டியுள்ளது. 25,399 இனங்கள் நிவர்த்தி செய்யப்பட்டன. மாநிலக் கணக்காயர் சுட்டிக்காட்டிய தணிக்கைப் பத்திகளில் 12,253 இனங்கள் நிலுவையில் உள்ளன. 2,636 இனங்கள் நிவர்த்தி செய்யப்பட்டன.

III. செயலாக்கப் பிரிவு: [2000 மே 9

மாநிலத்தில் துணை ஆணையர் தலைமையில் 7 செயலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. செயலாக்கப் பிரிவில் 10 உதவி ஆணையர்களும், 15 வணிக வரி அலுவலர்களும் சம்பந்தப்பட்ட துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில் பணியாற்றுகின்றனர். வணிக வரி சோதனைச் சாவடிகள் செயலாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளன. சுற்றும் குழுக்களும் வாகனங்களை சோதனை செய்யும் பணியை மேற்கொள்கின்றன. தற்போது மாநில எல்லையில் உள்ள 31 சோதனை சாவடிகளையும் சேர்த்து மொத்தத்தில் 46 சோதனைச் சாவடிகள் இயங்கிவருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் இப் பிரிவின் செயல்பாடுகள் பின்வருமாறு:—

(அ)	மேற்கொள்ளப்பட்ட கடை தணிக்கைகள்	:	7,200
	உருவாக்கப்பட்ட டி3 கருத்துக்கள்	:	4,239
	இணக்கத் தொகை வசூலிக்கப்பட்டவை	:	ரூ.0.45 கோடி
	முன் வரி வசூலிக்கப்பட்டவை	:	ரூ.10.02 கோடி
(ஆ)	சோதனையிடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை	:	12,60,294
	வசூலிக்கப்பட்ட இணக்க வரி	:	ரூ.8.32 கோடி
	வசூலிக்கப்பட்ட முன் வரி	:	ரூ.9.09 கோடி
(இ)	தணிக்கையிடப்பட்ட திரையரங்க காட்சிகளின் எண்ணிக்கை	:	39,005
	வசூலிக்கப்பட்ட இணக்கத் தொகை	:	ரூ.0.52 கோடி
	வசூலிக்கப்பட்ட முன் வரி	:	ரூ.0.15 கோடி

சோதனைச் சாவடிகள் ஆய்வுக் குழு கொடுத்த அறிக்கையின் பேரில் 31-3-1998 முதல் பின்வரும் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு விட்டன:—

(1) ஆவடி
(2) ஒட்டந்துறை
(3) பல்லடம்
(4) சானாரப்பட்டி
(5) சாத்தூர் சாலை
(6) ஆளியாறு
(7) கிணத்துக்கிடவு
(8) கடம்பர்கோயில்
(9) தவிட்டுப்பாளையம்
(10) ஒட்டன்சத்திரம்
(11) கூட்டப்புளி
(12) பழவூர் விலக்கு
(13) பழவூர் கிராமம்
(14) சங்கனாபுரம்
(15) குமாரபுரம் விலக்கு.

IV. மேல்முறையீட்டுப் பிரிவு:

மேல்முறையீட்டுப் பிரிவு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவரின் கீழ் இயங்கி வருகிறது. இப் பிரிவில் இருபது உதவி ஆணையர்களும், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு துணை ஆணையர் (மேல்முறையீடுகள்) ஆக இரண்டு துணை ஆணையர்களும் பணியாற்றுகின்றனர். நிலுவையிலுள்ள மேல்முறையீடுகளைத் தீர்ப்பதில் விரைவான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 21-9-1999 அன்று வணிகவரித் துறை செயலரின் தலைமையில் மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் ஆகியோரின் பணி குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

1999-2000 ஆம் ஆண்டில் மேல்முறையீட்டுப் பிரிவு 14,900 இனங்களில் தீர்ப்பு வழங்கியுள்ளது. எஞ்சிய நிலுவையில் உள்ள வழக்குகள் 14,780 ஆகும். தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் ரூ.215.67 கோடி வருவாய் உள்ளடக்கியதாகும்.

V. **விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்:**

மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் ஆகியோரின் தீர்ப்புகளின் மீது எழும் மேல்முறையீடுகளை விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் விசாரித்து தீர்ப்பு வழங்குகிறது. நான்கு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் பின்வரும் இடங்களில் செயல் படுகின்றன:-

(1) சென்னை (முதன்மை ஆயம்)

(2) சென்னை (கூடுதல் ஆயம்)

(3) கோயம்புத்தூர் (கூடுதல் ஆயம்)

(4) மதுரை (கூடுதல் ஆயம்).

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் உள்ள நீதிபதி தீர்ப்பாயத் தலைவராக உள்ளார். துறை உறுப்பினராக இணை ஆணையர் தரத்தில் உள்ளார். இரண்டாம் உறுப்பினராக இந்திய தணிக்கை மற்றும் கணக்கியல் துறையைச் சார்ந்த துறையின் துணை ஆணையர் தரத்தில் உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார். ஒவ்வொரு கூடுதல் ஆயத்திலும் துறை உறுப்பினர்களாக துணை ஆணையர்களும் உள்ளனர். 1999-2000 ஆம் ஆண்டில், இத்தீர்ப்பாயம் 3,156 வழக்குகளில் தீர்ப்பு வழங்கியுள்ளது. நிலுவையில் உள்ளவை 5,018 ஆகும். தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் ரூ.194.85 கோடி வருவாய் கொண்டவையாகும்.

VI. **தமிழ்நாடு வரி விதிப்புச் சிறப்புத் தீர்ப்பாயம்:**

தமிழ்நாடு வரிவிதிப்புச் சிறப்புத் தீர்ப்பாயம், தற்போது தலைவர், துணைத்தலைவர், நீதித்துறை உறுப்பினர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஆக நான்கு பேர்களுடன் முழுஅளவில் இயங்கி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயம் வழக்குகளை பின்வருமாறு முடித்துள்ளன:-

	அசல் மனுக்கள்	மாற்றப்பட்ட மனுக்கள்	வரி மறு ஆய்வு வழக்குகள்		வரி மேல் முறையீட்டு வழக்குகள்		மொத்தம்
			தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்டவை	உயர்நீதி மன்றத்திலிருந்து மாற்றப்பட்டவை	தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்டவை	உயர்நீதி மன்றத்திலிருந்து மாற்றப்பட்டவை	
1-4-1999 அன்று துவக்க நிலுவை	1,698	88	493	2,493	153	712	5,637
முடிக்கப்பட்ட இனங்கள்	1,657	28	134	1,205	4	271	3,299
31-3-2000 அன்று நிலுவையில் உள்ளவை	41	60	359	1,288	149	441	2,338

VII. **வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம், சென்னை:** [2000 மே 9

பணியாளர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தும் பொருட்டு சென்னையில் 1982-ல் தொடங்கப்பட்ட வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம், வணிக வரித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இரு உதவி ஆணையர்கள், ஒரு வணிக வரி அலுவலர் ஆகியோரும், துணை ஆணையர் ஒருவரைத் தலைவராகவும் கொண்டு ஆசிரியர் பிரிவு ஒன்று இப்பயிற்சி மையத்தில் இயங்கிவருகின்றது. வணிக வரி அலுவலர்கள், துணை வணிக வரி அலுவலர்கள், உதவி வணிக வரி அலுவலர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சி மையம் நினைவுகூர் பயிற்சி (Refresher courses) அளிக்கிறது. வரி நிருவாகம் தொடர்பான சிறப்புத் தலைப்புகளின் கீழ் பல்வேறு தொடர்புடைய துறைகளில் சிறந்து விளங்கும் அறிஞர்களைக் கொண்டு விரிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உதவி வணிகவரி அலுவலர்களுக்கு 42 வேலை நாட்களும், துணை வணிக வரி அலுவலர்கள் மற்றும் வணிக வரி அலுவலர்களுக்கு 21 வேலை நாட்களும் நினைவுகூர் பயிற்சிக் காலமாகும்.

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு பவானிசாகர் சிவில் சர்வீஸ் பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்படும் குறுகிய கால பயிற்சியைப் போன்ற ஒரு சிறப்புப் பயிற்சி இத்துறை அலுவலர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி முகாம்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இத்துடன் பணியாளர்களுக்கு கணினி பயிற்சியும் அளித்துவருகிறது.

2000 மே 9]

இப்பயிற்சி மையத்தின் செயல்பாடு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:—

பயிற்சி திட்டத்தின் பெயர்	1998-99 முடிய		1999-2000-ல் மட்டும்		1999-2000 முடிய	
	பயிற்சிக்ளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணணிக் ணிக்கை	பயிற்சிகளின் எண் கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை
1. நினைவு கூர் பயிற்சி	238	4526	6	125	244	4651
2. குறுகிய கால பயிற்சி	2	220	4	239	6	459
3. கணினி பயிற்சி	59	912	29	694	88	1606
மொத்தம்	299	5658	39	1058	338	6716

10. வணிக வரித் துறையில் தகவல் தொழில் நுட்பம்:

வணிகவரித் துறையில் அனைத்து நிலைகளிலும் கணிப்பொறி மயமாக்குதல் வேண்டும் என்ற நோக்கத்தோடும், வெளிப்படையான நிருவாகத்தை இத்துறையில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலும், பெருமளவில் ஒருங்கிணைந்த கணிப்பொறி மயமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு அதில் முதற்கட்டமாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் 140 வரி விதிப்பு வட்டங்கள், 18 சரக உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 9 எல்லையோர சோதனைச் சாவடிகள், தலைமைச் செயலகத்திலுள்ள அரசுச் செயலர் அலுவலகம், வணிக வரித் துறை ஆணையர் அலுவலகம் மற்றும் கணிப்பொறி மையம் ஆகிய அலுவலகங்களுக்கு ரூ.3.57 கோடி செலவில் முதற்கட்டமாக கணினி வழங்கப்பட்டது. வணிக வரித் துறை தொடர்பான பொது விவரங்கள், பதிவு செய்வதற்கான வழிமுறைகள், வரி செலுத்தும் முறை மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள பொருட்களுக்கான வரிவீதங்கள் ஆகியவற்றை

"ww.tnsalestax.com" என்ற வலை தளத்தில் பொதுமக்கள் அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் மென்பொருள் குழு, கேட்பு, வசூல், நிலுவை தொடர்பான ஒரு மென்பொருள் தொகுப்பை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. [2000 மே 9

11. வருவாய் வசூல் நிலை:

1999-2000 ஆம் நிதியாண்டில், பின்னடைவு மற்றும் பொருளாதாரத் தேக்கநிலை இருந்தபோதிலும், இத்துறையின் அயராத முழு முயற்சியால் 7380.65 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

I. இத்துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின் கீழ், கடந்த 1995-96 முதல் 1999-2000 ஆண்டுகளில் வசூல் செய்யப்பட்ட வருவாய் நிலை பின்வருமாறு:-

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	4,118.57
1996-97	4,717.19
1997-98	4,963.06
1998-99	5,455.46
1999-2000	6,185.37*

* கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(ஆ) மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	590.63
1996-97	672.06
1997-98	706.82
1998-99	779.31
1999-2000	812.62*

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

2000 மே 9]

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச்சட்டம், 1939.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	98.96
1996-97	107.82
1997-98	108.55
1998-99	90.95
1999-2000	86.01*

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(ஈ) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச்சட்டம், 1935.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	6.67
1996-97	6.42
1997-98	6.52
1998-99	5.40
1999-2000	5.48*

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(உ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச்சட்டம், 1981.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	50.77
1996-97	60.69
1997-98	64.71
1998-99	68.85
1999-2000	70.60*

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

[2000 மே 9

(ஊ) தமிழ்நாடு விளம்பர வரிச்சட்டம், 1983.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	இல்லை
1996-97	0.05
1997-98	இல்லை
1998-99	இல்லை
1999-2000	இல்லை

இந்தச் சட்டத்தின்கீழ் வருவாய் ஏதும் கிடைக்கப்பெறாததால் இச்சட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(எ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச்சட்டம், 1990.

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1995-96	157.77
1996-97	185.96
1997-98	213.02
1998-99	182.63
1999-2000	220.57*

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

2000 மே 9]

2. வணிகவரித் துறையின் வருவாயும், செலவும்:-

ஆண்டு	வருவாய் (ரூபாய் கோடியில்)	செலவு (ரூபாய் கோடியில்)	வருவாயில் செலவின் விழுக்காடு
1995-96	5023.37	52.52	1.05
1996-97	5751.19	59.93	1.04
1997-98	6062.68	70.24	1.15
1998-99	6583.00	93.29	1.41
1999-2000	7380.65*	76.68 (டிசம்பர் 1999 வரை)	1.03

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

12. ஏனைய சிறப்பு அம்சங்கள்

(1) இந்த 2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்துறைக்கென பகுதி-II திட்டங்களின் கீழ் பின்வரும் பணிகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

(1) வணிகவரித் துறை

1. சென்னை வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள துணை ஆணையர் (வணிகவரி) அலுவலகங்களுக்கும் அவர்கள்தம் கோட்டங்களில் உள்ள வரிவிதிப்பு கோட்டங்களில் உள்ள வரி விதிப்பு வட்டங்களுக்கும் (142) கூடுதல் பதிவேடு, அடுக்ககங்கள் வழங்குதல். 3.55
2. படிப்படியான முறையில் 150 வரிவிதிப்பு வட்டங்களுக்கு ரொக்கப் பெட்டகம் அளித்தல் -முதல் கட்டமாக 50 வரி விதிப்பு வட்டங்களுக்கு. 4.00
3. சென்னை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் செயல்பட்டு வரும் வணிகவரி அலுவலகங்களுக்கு உள்தொலைபேசி வசதிகள் செய்து கொடுத்தல். 0.75

4. அரசுக் கட்டடங்களில் செயல்படும் வணிக வரி அலுவலகங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல். 10.00

(II) த்மிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்குதல். 4.05

(III) தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்

திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர் களுக்கும், தற்போதுள்ள பணியாளர்களுக்கும் அறைகலன்கள் வாங்குதல். 2.07

(2) விற்பனை வரி ஆலோசனைக் குழு:—

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு என்னுடைய தலைமையில் இயங்கி வருகிறது. இக்குழுவின் கூட்டம் 11-3-2000ஆம் நாளன்று என் தலைமையில் நடைபெற்றது. வணிகக் கழகங்களின் சார்பாளர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறு தொழில் மற்றும் மிகச்சிறிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபெற அழைக்கப்பட்டனர். அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு ஆலோசனைகளும், கருத்துக்களும் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தயாரித்தபோது கருத்தில் கொள்ளப்பட்டது.

மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு:—

மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைவர்களாக உள்ளனர். இக் குழுக்கள் மாவட்ட அளவிலான பிரச்சினைகள் பற்றி விவாதிக்கின்றன.

3. தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி சலுகைகள் (காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை):—

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்துத் தொழிற் பெருக்கத்திற்கு வித்திடும் வகையில் மிகப் பின்தங்கிய வருவாய்

வட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு, வரித்தொகையைக் கைவிட அனுமதித்தும், புதிய தொழிலகங்கள், தொழில் விரிவாக்கங்கள், நலிந்துபோன தொழிலகங்கள், நூற்பாலைகள் போன்றவற்றிற்கு அவை செலுத்தவேண்டிய வரிகளைக் காலம் தள்ளி வட்டியின்றிச் செலுத்தும் சலுகையினையும் அரசு 22-1-2000 வரை வழங்கி வந்தது. இவ்வகையில் ஏப்ரல் 1998 முதல் மார்ச் 1999 முடிய ரூ. 580.68 கோடிக்குச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

(4) உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி:—

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்தத் தொகையில் 30 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கொப்ப, மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு 31-3-1997 வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகத்தை மேம்படுத்த அவற்றின் வருவாய் ஆதாரங்களை அதிகரிக்கும்பொருட்டு 1-4-1997 முதல் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் நிதி மானியம் ஒரே சீராக 90 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. 1999-2000ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 85.12 கோடி ஆகும்.

(5) குறை தீர்க்கும் குழு:—

வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கும் அமைப்பாக 1999ஆம் ஆண்டு வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக இணை ஆணையர் (நிருவாகம்) அவர்களும், குழு உறுப்பினர்களாக இணை ஆணையர் (சுயச் சிராய்வு மனு) மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) ஆகியோரும் உள்ளனர்.

13. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்:—

வணிகர்களுக்கு உதவும் நோக்கத்துடன் 1989-ல் தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அரசால் அமைக்கப்பட்டது. பின்னர் இவ்வாரியம் 1997-ல் என்னைத் தலைவராகவும், அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர் அல்லாதோரையும் உறுப்பினர்களாகக் கொண்டு

திருத்தியமைக்கப்பட்டது. இந்த வாரியத்தின் செயல்பாடு பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

திட்டத்தின் பெயர்	1998-99 முடிய		1999-2000-ல் மட்டும்		1999-2000 முடிய	
	வழங்கப்பட்ட தொகை ரூபாய்	பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை ரூபாய்	பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை ரூபாய்	பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை
1. குடும்ப உதவித் திட்டம்	10,25,000	36	20,80,000	44	31,05,000	80
2. மருத்துவ உதவித் திட்டம் (சிறுநீரகம்/ இருதயம் அறுவை சிகிச்சை)	83,000	5	1,83,000	8	2,66,000	13
3. கல்வி உதவித் திட்டம்	46,000	23	60,000	26	1,06,000	49
4. தீ விபத்து நிவாரணம்	1,10,000	23	15,000	3	1,25,000	26
5. மாணவர் மதிப்பெண் ஊக்கத் திட்டம்	20,000	6	இல்லை	இல்லை	20,000	6
மொத்தம்	12,84,000	93	23,38,000	81	36,22,000	174

இதுவரை 29,797 வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 1989ஆம் ஆண்டு முதல் ரூ. 47,69,110 உறுப்பினர் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த அரசு ரூ. 35,49,000 மானியம் வழங்கியுள்ளது. 30-6-1999 அன்று,

அரசின் தலைமைச் செயலரால் தொடக்கி வைக்கப்பட்ட வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள வணிகர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம், தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

-திருக்குறள்.

(பொருளுரை:—முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்).


[2000 மே 9
அனைத்து வணிகவரிச் சட்டங்கள் மூலம் பெறப்பட்ட வருவாய்
1990–1991 முதல் 1999–2000 வரை
ரூபாய் கோடியில்
2167
2578
3017
3399
4165
5023
5751
6063
6583
7381
1990-1991
1991-1992
1992-1993
1993-1994
1994-1995
1995-1996
1996-1997
1997-1998
1998-1999
1999-2000
0
1000
2000
3000
4000
6000
7000
8000


2000 மே 9]
தமிழ்நாடு பொது விற்பனை வரி மூலம் வருவாய்
1995 – 1996 முதல் 1999 – 2000 வரை
ரூபாய் கோடியில்
4118.57
4717.19
4963.06
5455.46
6185.37
1995-1996
1996-97
1997-98
1998-99
1999-2000
0
10
20
30
40
50
60
70

[2000 மே 9



2000 மே 9]



இணைப்பு–II

(256 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 11 – மாவட்ட நிர்வாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு 2000–2001

1. முன்னுரை

தமிழ்நாட்டின் நிர்வாக அமைப்பில், மாவட்டங்கள் மிக முக்கிய நிர்வாக அலகுகளாக அமைந்துள்ளன. வருவாய் நிர்வாகத்தில் மாவட்ட நிர்வாகம், இன்றியமையாத முக்கிய பங்கு வகிக்கிறது.

(2) 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்னர், வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம் குறித்த பணிகள், வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று செயல் ஆணையர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(3) மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல்வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், மறுவாழ்வு அளித்தல் மற்றும் சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகள் வருவாய் நிர்வாகத் துறையின் பொறுப்பில் உள்ளன.

(4) நில நிர்வாகத் துறையின் பொறுப்பில் நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டுமனை ஒப்படை, நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் நிலப்பட்டாக்கள் வழங்கல் ஆகிய பணிகள் உள்ளன. வேளாண்மை நில உச்சவரம்பு, குடிவார உரிமைகள், வேளாண் பணிக்கு மிகை நிலத்தை ஒப்படை செய்தல், வேளாண்மை வருமானவரி மற்றும் நகர்ப்புற நிலவரி வசூல், நகர்ப்புற நில உச்சவரம்பு (நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நீக்கறவு செய்யப்பட்ட பிறகு எஞ்சிய பணிகள்) போன்ற நிலச்சீர்திருத்தப் பணிகள், நிலச்சீர்திருத்தத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(5) மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வருவாய் அலுவலரும், வருவாய்க் கோட்டாட்சியர், துணை ஆட்சியர்கள் மற்றும்

வட்டாட்சியர்கள் உதவியுடன் இவ்வகைப் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார்கள்.

2. மாவட்ட வருவாய் நிர்வாகம்:

மாவட்ட நிர்வாகத்தை, வெளிப்படையானதாகவும், மக்களுடன் நட்புடையதாகவும், முடிவுகள் மேற்கொள்வதில் திறனுள்ளதாகவும் உருவாக்க, அரசு மேற்கொண்டு வரும் பெருமுயற்சிகளால், நிர்வாகத்தின்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை தற்பொழுது வெகுவாக உயர்ந்துள்ளது. இதனால், நலத் திட்டப் பயன்களைப் பெறுவதிலோ, ஒழுங்குபடுத்தும் பணிகளை நிறைவேற்றுவதிலோ தங்களுக்கு உள்ள குறைகள் களையப்படும் என்பதில் மக்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

(2) நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை, ஆக்கிரமிப்பை முறைப்படுத்துதல், பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள் வழங்குதல், கடன்கள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் பெறுதல் போன்ற தேவைகளுக்காக, பல்வேறுபட்ட நிலைகளில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்களை பொதுமக்கள் அணுகுகிறார்கள். சாமானிய மக்களின் தேவைகளை விரைவாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் முடிப்பதை உறுதிசெய்யவும், பல்வேறுபட்ட நிலைகளிலுள்ள வருவாய்த் துறை அலுவலர்களை நேரிடையாகவும் மாவட்ட அளவிலான அலுவலர்களை குறிப்பிட்ட நாட்களில் சந்திக்கும் வாய்ப்பினை உருவாக்கவும் மனுநீதித் திட்டம் மற்றும் குறை தீர்க்கும் நாள் ஆகிய இரு பெரும் திட்டங்களை அரசு உருவாக்கியுள்ளது. அனைத்து வருவாய்த் துறைப் பணிகளையும் கணினிமயமாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கு வருவாய்த் துறை அதிகாரிகளுடனான நெருக்கம் அதிகரித்துள்ளது.

(அ) மனுநீதித் திட்டம்:

இந்தியாவில் முதன்முதலில் தமிழகத்தில்தான் மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கென மனுநீதித் திட்டம் 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை மேலும் பயனுள்ள வகையில் அமைக்கும் வண்ணம் இந்தத் திட்டம், அரசு ஆணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 17-2-1997 இல் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி, இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் நடத்தப்படுகிறது. இதர அரசுத் துறை மற்றும்

வங்கி அலுவலர்கள் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர். நிர்வாகம் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து முடிந்தவரை அந்த இடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

(2) மனுநீதித் திட்டம் மாதம் ஒருமுறை இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. மூன்றாண்டு காலத்திற்குள் எல்லா கிராமங்களிலும் நடத்தப்படும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(3) மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அனைத்து அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்களும் எந்தெந்த கிராமங்களில் எந்தெந்த தேதியில் இத்திட்டத்தை நடத்த வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை மாவட்ட ஆட்சியர் முன்னதாகவே தயாரிக்கிறார். மாதம் ஒருமுறை நடத்தப்படும் இம்மனுநீதித் திட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் தள்ளிவைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(4) மனுநீதித் திட்டத்தின் அட்டவணை பின்வருமாறு:—

(i) குறிப்பிட்ட நாளுக்கு 4 வாரத்திற்கு முன்பே சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு ஒரு அலுவலர் சென்று, மனுநீதிநாள் நடத்தப்படுவது பற்றி விரிவாக விளம்பரம் செய்து மனுக்களைப் பெறுவார். அவ்வாறு பெறப்படும் மனுக்கள், வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல், இதர துறைகள் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும்; எனவே, மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் நடத்தும் மனுநீதித் திட்டக் கூட்டங்களுக்கு அனைத்துத் துறைகளையும் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் தவறாது பங்குகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல, வருவாய்க் கோட்டாட்சியர்/அரசிதழ் பதிவுபெற்ற இதர அலுவலர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு இதர துறைகளைச் சேர்ந்த வட்ட நிலையிலான அலுவலர்கள் கலந்துகொள்ள வேண்டும்.

(ii) மனுநீதித் திட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமத்திலிருந்து நான்கு வாரங்களுக்கு முன்னதாகப் பெறப்பட்ட மனுக்களின்மீதான அறிக்கைகள், சம்பந்தப்பட்ட இதர துறை அலுவலர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளனவா என்பதை மனுநீதி நாளன்று கிராமத்திற்குச் செல்வதற்கு முன்னதாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மனுநீதித் திட்டம் நடைபெறும்பொழுது, முதலில்

[2000 மே 9

ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களின்மீதான முடிவுகளைச் சம்பந்தப்பட்ட மனுதாரர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

(iii) மனுநீதித் திட்ட நாளன்று பெறப்படும் மனுக்களை முடிவு செய்யும்பொருட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அம்மனுக்களுக்கான முடிவுகளை அன்றே மனுதாரர்களுக்குத் தெரிவிக்க இயலுமா என்பதை ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அந்த இடத்திலேயே உடனுக்குடன் முடிவெடுக்க இயலாத மனுக்களை அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவுசெய்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஆய்வு செய்து மனுதாரர்களுக்கு மனுநீதி நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் முடிவான பதில் கொடுக்க வேண்டும்.

(iv) மனுநீதித் திட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, மக்களின் குறைகள் களையப்படவேண்டும். பின்வரும் இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களுக்குள் உதவிகள் வழங்கப்பட வேண்டும்:—

(அ) கர்ப்பிணிப் பெண்களுக்கு கருவுற்ற 7-வது மாதத்திலிருந்து 30 நாட்களுக்குள் நிதி உதவி வழங்கப்பட வேண்டும்.

(ஆ) விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும்.

(இ) முதியோர் உதவித் தொகை கோரும் மனுக்கள்மீது 60 நாட்களுக்குள் முடிவெடுக்கப்பட வேண்டும்.

(ஈ) எந்த மனுவும் 100 நாட்களுக்கு மேல் முடிவெடுக்கப்படாமல் நிலுவையாக இருக்கக்கூடாது. எந்த மனுவாவது 100 நாட்களுக்கு பின்பும் முடிவெடுக்க இயலாமல் இருக்குமானால், அலுவலகத்தின் தலைமை அலுவலர் நாள்தோறும் அம்மனுக்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

(உ) 200 நாட்களுக்குமேல் நிலுவையிலுள்ள மனுக்கள், நிக்நெட் மூலம் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு அவற்றை முடிவு செய்வது தொடர்பான முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியர் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

2000 மே 9]

(5) துறைத் தலைவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும்போது மனுநீதித் திட்ட மனுக்கள் பதிவேட்டை தணிக்கை செய்ய வேண்டும். இத்தகைய நடவடிக்கை, மனுக்களை விரைவாக முடிவு செய்ய வழிவகுக்கும். மனுநீதித் திட்டத்தினை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாக கண்காணித்து ஆய்வு மேற்கொண்டு, அதுகுறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்கு முன்னர் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும். வருவாய் நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை ஆய்வுசெய்து இந்தத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைளை மேற்கொண்டு, அரசுக்கு காலாண்டு அறிக்கை ஒன்றை அனுப்புவார். 1997-1998 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் 8,729 கிராமங்களில் மனுநீதித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் (29-2-2000 வரை) பெறப்பட்ட மனுக்கள், முடிவு செய்யப்பட்டவை குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

01-01-1999 முதல் 31-12-1999 வரை பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	2,36,544
முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	2,11,798
நிலுவை	24,746
01-01-2000 முதல் 29-02-2000 வரை பெறப்பட்டவை	30,985
மொத்தம்	55,731
முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	25,372
நிலுவை	30,359

(ஆ) பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்:—

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் பின்பற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்/வருவாய்க் கோட்ட அலுவலர்/வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடங்களிலேயே இருந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பிற துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்று, குறிப்பிட்ட நாளில் மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்கிறார்கள்.

[2000 மே 9

(2) ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு தொடங்கப்பட்டு ஒரு தனித் துணை ஆட்சியர் (மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) கட்டுப்பாட்டிலும், மாவட்ட ஆட்சியரது மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. தனித்துணை ஆட்சியருக்கு தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தும் 'நிக்நெட்' கணிப்பொறி மூலம் கிடைக்கும் விவரங்களைக்கொண்டும், மக்கள் குறைதீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின்மீது மாவட்டத்தின் அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்கிறார். 1999-2000 ஆம் ஆண்டில் (29-2-2000 வரை) பொதுமக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட மனுக்கள், முடிவு செய்யப்பட்ட மனுக்கள் ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

1-1-1999 முதல் 31-12-1999 வரை பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	3,20,323
முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	2,93,704
நிலுவை	26,619
1-1-2000 முதல் 29-2-2000 வரை பெறப்பட்டவை	38,203
மொத்தம்	64,822
முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	42,362
நிலுவை	22,460

(இ) சாதிச் சான்றிதழ்கள் முதலியன வழங்குவதில் புதிய முறை:—

பள்ளிப் படிப்பை முடித்தபின், மேற்படிப்புக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

(2) வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, பள்ளிகள் மூலமாக சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறை, அரசாணை (நிலை) எண் 165, வருவாய், நாள் 1-4-1999இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின்படி, 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே

2000 மே 9]

இச்சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தலைமை ஆசிரியர் அத்தாட்சியுடன் வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். வருவாய்த் துறை அலுவலர்களின் விசாரணைக்குப்பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு, பள்ளிகளுக்கு அனுப்பப்படும். படிப்பு முடிந்தவுடன், அந்தச் சான்றிதழ்கள், மாறுதல் சான்றிதழ் (TRANSFER CERTIFICATE) உடன் மாணவர்களுக்கு, ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாகத்தால் வழங்கப்படும்.

(3) இப்புதிய முறையில் சான்றிதழ்கள் வழங்குவதற்காக 16,52,720 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 14,58,848 சான்றிதழ்கள் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மாவட்டங்களில் இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால் மாணவர்களுக்கு சங்கடமின்றிச் சான்றிதழ்கள் வழங்க முடிகிறது.

3. வருவாய் அலுவலர்களுக்குப் பயிற்சி:—

விரைவாகவும் சிறப்பாகவும் கடமையாற்ற உதவும் வகையில், நிர்வாகம் குறித்த அனைத்து வகை விவரங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அறிந்து கொள்வதற்காகவும், துடிப்புடனும், வேகத்துடனும் தங்களது கடமைகளை நிறைவேற்றவும் பொதுமக்களின் தேவைகளை நன்கு உணரவும் மாவட்ட வருவாய் அலகில் கிராம நிர்வாக அலுவலர் முதல் வட்டாட்சியர் வரை உள்ள அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் தொடர்பயிற்சி அளிக்கும் பயிற்சித் திட்டம் ஒன்றை நடத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இப்பயிற்சி இரு கட்டங்களைக் கொண்டது.

(அ) பயிற்சியாளர்களுக்காக நடத்தப்படும் பயிற்சி:—

(i) பல்வேறுபட்ட பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான திறமைகளைப் பெறவும், அவற்றை மேம்படுத்திக் கொள்ளவும்;

(ii) அவர்களது தனிப்பட்ட திறமைகளை மேம்படுத்துவதற்கும், நிர்வாகத்திற்கு அதனைப் பயன்படுத்தவும்;

[2000 மே 9

(iii) சார்நிலை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து ஒரு குழுவாக பணியாற்றல், பல்வேறு நிலைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்குள் உறவு மற்றும் பண்பாட்டை வளர்த்தல் ஆகியவற்றில்,

துணை ஆட்சியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஆ) கிராம நிர்வாக அலுவலர்கள் முதல் வட்டாட்சியர்கள் நிலை வரை வருவாய்த் துறை அலுவலர்களுக்கான பயிற்சி:—

பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் (துணை ஆட்சியர்கள்) வருவாய்த் துறை பொருள்கள் குறித்து கிராம நிர்வாக அலுவலர்கள் முதல் வட்டாட்சியர்கள் நிலை வரையான அலுவலர்களுக்கு மாவட்டங்களில் பயிற்சி அளிப்பார்கள்.

(2) சென்னையில் உள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தில் "பயிற்சியாளர்களுக்கான பயிற்சி" திட்டத்தின்கீழ் வட்டாட்சியர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர் 75 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் மாவட்டங்களில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். 1995 ஆம் ஆண்டு முதல் நாளதுவரை 14,467 வருவாய்த் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. (கிராம நிர்வாக அலுவலர்-7,675, இளநிலை உதவியாளர்/உதவியாளர்-4,598, துணை வட்டாட்சியர்/வட்டாட்சியர்-2,057, மற்றும் துணை ஆட்சியர்-137). இப்பயிற்சி வருவாய், நில நிர்வாகம் மற்றும் நிர்வாகத்தின் நவீன கருத்துக்கள் சம்பந்தமாக சமீபகால விவரங்களை அறிந்து கொள்வதையும், திறனை மேம்படுத்துவதையும் உள்ளடக்கியதாகும்.

(3) புதிதாக பணி நியமனம் செய்யப்பெறும் வருவாய்த் துறை அலுவலர்கள், பவானிசாகரில் பயிற்சி முடித்தவுடன் அவர்களுக்கு நில ஒப்படை, நில உரிமை மாற்றம், நிலமாற்றம் மற்றும் நில எடுப்பு போன்ற வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட பொருள்கள் குறித்து தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் உள்ள நில அளவைப் பயிற்சி பள்ளியில் 10 தினங்களுக்கு தனி பயிற்சி அளிக்க சமீபத்தில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

2000 மே 9]

4. கிராம நிர்வாகம்:

மாவட்ட வருவாய் நிர்வாகத்தில் அடிப்படை அலகு கிராம நிர்வாகம் ஆகும். பகுதிநேர கிராம அலுவலர் பதவிகள் 14-11-1980 முதல் நீக்கப்பட்ட பிறகு, வருவாய் கிராமங்களில் முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(2) 14-11-1980-க்கு முன்னர் பதவி இழந்த முன்னாள் கிராம அலுவலர்களை நிர்வாகத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பின்படி அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு தகுதி பெற்றிருப்பின், அவர்களையும் பணியமர்த்த அரசாணை எண் 954, வருவாய், நாள் 16-10-1997இல் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன்பின், இவ்வாணையை மேலும் தளர்வு செய்து, நீதிமன்றத்தில் மனு செய்யாதவர்களுக்குக்கூட இச்சலுகையை வழங்க அரசாணை எண் 391, வருவாய், நாள் 19-07-1999இல் அரசு ஆணை வெளியிட்டது. இவ்வகையோர் முதுநிலைப்படி அந்தந்த மாவட்டத்தில் வேலையில் அமர்த்தப்பட்டு வருகின்றனர்.

(அ) முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்:—

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பணி வழங்கும் திட்டம் தவிர, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், அரசு ஆணை (நிலை) எண் 828, வருவாய், நாள் 23-08-1996இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(i) 14-11-1980 அன்று பணியிலிருந்த முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 175/- அதற்குரிய படிகளுடன் வழங்கப்பட்டு வந்ததை, அரசு ஆணை (நிலை) எண் 629, வருவாய், நாள் 22-07-1998இல் ரூ. 250/-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(ii) 14-11-1980 அன்று பணியிலிருந்து உயிரிழந்த முன்னாள் கிராம அதிகாரிகள் குடும்பத்திற்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 100/- குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்ததை, அரசாணை (நிலை) எண் 629, வருவாய், நாள் 22-07-1998இல் ரூ. 150/-ஆக உயர்த்தி ஆணையிடப் பட்டுள்ளது.

முன்னாள் கிராம அலுவலர்கள் பதவு ஒழிப்பு நாளான 14-11-1980 அன்று தற்காலிக பணிநீக்கம்/விடுப்பில் இருந்த கிராம அலுவலர்களுக்கும் இச்சிறப்பு ஓய்வூதியத்தை அரசு நீட்டித்துள்ளது. அரசின் இத்திட்டத்தால் 12,260 முன்னாள் கிராம அலுவலர்களும் அவர்களது குடும்பத்தாரும் பயனடைந்துள்ளார்கள்.

(ஆ) கிராம உதவியாளர்கள்:—

அரசு தனது ஆணை எண் 625, வருவாய், நாள் 06-07-1995இல் மாநில முழுவதுமுள்ள 28,000 கிராம உதவியாளர்களை முழுநேர அரசு ஊழியர்களாக்கி உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தக் 'கிராம அதிகாரிகளுக்கு ரூ.600-10-750 என்ற ஊதிய விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டு 01-06-1995 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 6-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி, இவர்களது ஊதிய விகிதம் ரூ.1800-20-2040 என மாற்றியமைக்கப்பட்டது. முழுநேர கிராம உதவியாளர்களின் பணி விதிகள், அரசாணை (நிலை) எண் 521, வருவாய், நாள் 17-06-1998-ல் வெளியிடப்பட்டுள்ளன. பணிவரன்முறை செய்யப்பட்ட, 01-06-1995-க்குப் பிறகு பணியிலிருக்கும்போது இறந்த, கிராம உதவியாளர்களது வாரிசுகளுக்கு நடைமுறையிலுள்ள விதிகளுக்குட்பட்டு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க அரசாணை (நிலை) எண் 362, வருவாய், நாள் 07-07-1999இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. ஆட்சி எல்லைகள் சீரமைத்தல்:—

மாவட்ட நிர்வாகம் மேலும் பயனுள்ளதாகவும், பொதுமக்களுடைய தேவைகளுக்கு பரிவுள்ளதாக இருப்பதற்காகவும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்ப்பாடு ஏற்படும் காலங்களில் உதவவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும், அவசியம் ஏற்படும்போது பெரிய மாவட்டங்கள் சீரமைக்கப்பட்டு, புதிய மாவட்டங்கள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு, 4 புதிய மாவட்டங்களும், 8 கோட்டங்களும், 24 வட்டங்களும், 11 உள் வட்டங்களும் (பிர்காக்கள்), ஒரு வருவாய்க் கிராமமும் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளின் விளைவாக தற்போதுள்ள மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு:—

மாவட்டங்கள்	—	29
கோட்டங்கள்	—	73
வட்டங்கள்	—	206
உள் வட்டங்கள்	—	1,120
கிராமங்கள்	—	17,274

(2) தற்போதுள்ள பெரம்பலூர் மாவட்டத்தைப் பிரித்து பெரம்பலூர், குன்னம், வேப்பந்தட்டை ஆகிய மூன்று வட்டங்களை பெரம்பலூர் மாவட்டத்தில் இருத்திக் கொண்டு, எஞ்சியுள்ள அரியலூர், உடையார்பாளையம், .செந்துரை ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கி, அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்குவதற்கான பூர்வாங்கப் பணிகளை 27-12-1999 முதல் மேற்கொள்வதற்காக அரசாணை (நிலை) எண் 678, வருவாய், நாள் 24-12-1999இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக (இ.ஆ.ப. - நிலையில்) சிறப்பு அலுவலர் பணியிடம் ஒன்று அதற்குண்டான சார் அலுவலர்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

6. வருவாய்த் துறைக் கட்டடங்கள்:

வருவாய்த் துறை நிர்வாகம் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிக்கு, அரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

(அ) பெருந்திட்ட வளாகத்தில் மாவட்டாட்சியர் கட்டடங்கள் கட்டுதல்:—

தமிழ்நாட்டில் தற்போதுள்ள 29 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுள், 21 அலுவலகங்கள், அவைகளுக்காக விரிந்த பரப்பில் நன்கு வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட அரசுக் கட்டடங்களில் அமைந்துள்ளன. மாவட்டப் பெருந்திட்ட வளாகம் என இவை அழைக்கப்படுகின்றன. இவற்றுள் அனைத்து முக்கிய மாவட்ட அலுவலகங்கள் அமைந்துள்ளன. இக்கட்டடங்கள் அப்பகுதியில் மிக முக்கிய இடமாகவும் அனைவரையும் கவரக்கூடிய வகையிலும் அமைந்துள்ளன. 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் தூத்துக்குடி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டப் பெருந்திட்ட வளாகங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டாட்சியர் அலுவலகம் மட்டும், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதர ஏழு மாவட்டாட்சியர் அலுவலகங்கள், அரசுத் துறைக்கு/அரசு நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

(2) திருவாரூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், கரூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் மாவட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு ரூ. 38.54 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றின் கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

(ஆ) வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்: [2000 மே 9

தமிழ்நாட்டில் உள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் 59 அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களிலும் எஞ்சிய 14 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்ட்டங்களிலும் இயங்கி வருகின்றன.

(2) இவற்றுள், 13 வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது. பெரம்பலூர், உத்தமபாளையம் மற்றும் திருவாரூர் ஆகியவற்றில கட்டடப்பணி முடிக்கப்பட்டுவிட்டது. மதுராந்தகம், திருத்தணி மற்றும் குளித்தலை ஆகிய இடங்களில் பணிமுடியும் தருவாயில் உள்ளது. கள்ளக்குறிச்சி, லால்குடி, உடையார்பாளையம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் கட்டுமானப்பணி நடைபெற்று வருகின்றது. பொன்னேரி மற்றும் விழுப்புரம் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கு உண்டான வரைபடம் மற்றும் மதிப்பீடுகளுக்கு திருத்திய நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்க செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளது. ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கான நடவடிக்கை இனி மேற்கொள்ளப்படும்.

(இ) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்:--

தமிழ்நாட்டில் 206 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. இவற்றுள் 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்ட பேரையூர், அரவக்குறிச்சி, செந்துரை, குன்னம், திருவையாறு, அம்பத்தூர் ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட 175 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதர 31 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் பின்வரும் 7 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிட்டுள்ளது:

1. போச்சம்பள்ளி
2. பாப்பிரெட்டிபட்டி
3. திருவையாறு
4. ஒட்டன்சத்திரம்
5. சிவகாசி
6. கடலாடி
7. தாம்பரம்

2000 மே 9]

(2) இவற்றுள் திருவையாற்றில் கட்டடப்பணி முடிவுற்று அண்மையில் தொடங்கப்பட்டது. போச்சம்பள்ளி மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் கட்டடப்பணி முடியும் தருவாயில் உள்ளது. ஒட்டன்சத்திரம், கடலாடி, தாம்பரம் ஆகிய இடங்களில் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை இனி மேற்கொள்ளப்படும்.

(3) ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானி வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், மொத்தம் ரூ. 21 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டும்பணி 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) குடியிருப்புகள்:—

(i) மாவட்ட ஆட்சியர்கள்:—

29 மாவட்டங்களில் 18 மாவட்ட ஆட்சியர்களுக்கு ஏற்கெனவே அரசுக் கட்டடங்களில் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னர், விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் மாவட்டாட்சியர் குடியிருப்புக் கடடடம் கட்ட வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. சென்னையில் மாவட்டாட்சியர் குடியிருப்புக்கு தருந்ததோர் இடம் தேர்வு செய்ய வேண்டும். எஞ்சியுள்ள எட்டு மாவட்டங்களில் மாவட்டப் பெருந்திட்ட வளாகங்களிலேயே மாவட்டாட்சியர் குடியிருப்புக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(ii) மாவட்ட வருவாய் அலுவலர்கள்:—

சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் பணியிடங்கள் உள்ளன. 20 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசுக் கட்டடங்களில் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர், சிவகங்கை, விழுப்புரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு கட்டப்பட்ட குடியிருப்புகளும் இதில் அடங்கும். இதர மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டும்பணி காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்படும்.

(iii) வருவாய்க் கோட்ட அலுவலர்கள்:

73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில், 58 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 15 வருவாய்க் கோட்ட அலுவலர் குடியிருப்புகள் தனியார் கட்டிடங்களில் இருக்கின்றன. பரமக்குடி மற்றும் விழுப்புரம் வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இதர வருவாய்க் கோட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கை இனி மேற்கொள்ளப்படும்.

(iv) வட்டாட்சியர்கள்:

206 வட்டாட்சியர்களில் 168 வட்டாட்சியர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்ட பல்லடம் வட்டாட்சியர் குடியிருப்பும் இதில் அடங்கும். திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் வட்டாட்சியருக்கு, ரூ. 9.87 இலட்சம் செலவில் குடியிருப்பு கட்டுவதற்கான திட்டம் 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்திலுள்ள 5 வட்டாட்சியர்கள் நீங்கலாக ஏனைய வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(v) வருவாய் ஆய்வாளர்கள்:

1120 வருவாய் ஆய்வாளர்களில் 1080 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர், இராமநாதபுரம் மாவட்டத்தில் 15 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகளுக்கு மராமத்துப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் (வடக்கு) வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள 20 வருவாய் ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் தேவை எழவில்லை. ஏனெனில் வருவாய் ஆய்வாளர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கு போதுமான அளவில் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள் உள்ளன. சென்னை நகரில் எந்தப் பகுதியிலிருந்தும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் செல்லுவதற்கு எளிய வசதிகள் உள்ளன. மேலும் வெளியூர் பகுதிகளைவிட சென்னை நகரில் தகவல் அறிவிப்பு வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் மேம்பட்ட நிலையில் உள்ளன.

ஏனைய வருவாய் ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

(vi) கிராம நிர்வாக அலுவலர்கள்:

மாநிலத்தில் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. மலைப்பகுதிகளிலுள்ள கிராமங்கள், கடலோரப் பகுதியிலுள்ள கிராமங்கள் மற்றும் பிரச்சினை உருவாக வாய்ப்புள்ள கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மலைப்பகுதியில் 60 குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு 20 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டு மீதி 40 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.

7. வருவாய்த் துறைக்கு உள்கட்டமைப்பு வசதிகள்:

(அ) மோட்டார் வாகனங்கள்:

(i) வருவாய் அலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்குவது அத்தியாவசியத் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு, 1996-97 முதல் 1997-98 வரை ரூ. 3.10 கோடி செலவில், 92 ஈப்புகளும், 21 சீருந்துகளும் வழங்கப்பட்டன.

(ii) கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வாங்க, துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) அதன்படி 1-4-1998 முதல் 31-3-1999 வரை ரூ. 3.58 கோடி செலவில் 85 ஈப்புகளும், 24 சிருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர ரூ. 73.38 இலட்சம் செலவில் 1-4-1999 முதல் 10-3-2000 வரை 9 ஈப்புகளும் 13 சிருந்துகளும் வாகனத்தை பயன்படுத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(iv) இவற்றைத் தவிர, புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மாவட்டத்திற்கு 2 சிருந்துகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியருக்கு ஒன்றும், மாவட்ட வருவாய் அலுவலருக்கு ஒன்றும், ஆக 2 சிருந்துகள் ரூ. 13.41 இலட்சம் செலவிலும் மற்றும் ரூ. 16.72 இலட்சம்

செலவில் 5 ஈப்புகளும் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(ஆ) ஈப்பு நிறுத்தகம் மற்றும் மிதிவண்டி நிறுத்துமிடம்:

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குனேரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ. 1.39 இலட்சம் செலவில் ஈப்பு நிறுத்தகம் கட்டுவதற்கான திட்டமும், தஞ்சாவூர் மாவட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ. 2.55 இலட்சம் செலவில் மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டுவதற்கான திட்டமும் 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இருவழித் தகவல் தொடர்புத் திட்டம்:

இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடிகளின்போது, உடனுக்குடன் எளிதில் தொடர்புகொள்வதற்கு வசதியாக, அரசு, இருவழித் தகவல் தொடர்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. முதற்கட்டமாக இருவழித் தகவல் தொடர்பு சாதனம் 12 கடலோர மாவட்டங்களிலுள்ள 36 வட்டங்களிலும் 19 கோட்டங்களிலும் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலும் அமைக்கப்பட உள்ளது. இதற்கு தொடராச் செலவினமாக ரூ. 99.25 இலட்சமும், தொடரும் செலவினமாக ரூ. 11.50 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது. இதற்கான சாதனங்கள் வாங்குவதற்கு வருவாய் நிர்வாக ஆணையரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. மேற்படி கருவிகள் வாங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழில்நுட்பத் துறைகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

(ஈ) மின்னணு தொலைபேசித் திட்டம்:

தொலைபேசி தொடர்புத் திட்டத்தை மேம்படுத்தவும், பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும் ஆற்றுவதற்கும், திண்டுக்கல், நாகப்பட்டினம், கடலூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் சாதாரண தொலைபேசியகத்தை, மின்னணுத் தொலைபேசியகமாக மாற்றம் செய்ய ரூ. 10 இலட்சத்திற்கும், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ரூ. 2.81 இலட்சத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.

இணைப்பு-III

(256ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 11-ன் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த

கொள்கை விளக்கக் குறிப்பு 2000–2001

3454. மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளிவிவரம் — **ஒதுக்கீடு: ரூ.7,32,64,000**

மக்கள் தொகை கணக்கெடுப்பு இந்தியாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் நிகழ்வு ஆகும். பொருளாதாரத் திட்டங்கள் வகுத்தல், மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் நலத் திட்டங்கள் செயலாக்கம் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு நாட்டிற்கும், அரசிற்கும் மக்களின் வாழ்க்கை பற்றிய பல்வேறு தகவல்கள் தேவையாயுள்ளன. எனவே, இன்றைய அளவில், மக்கள் கணக்கெடுப்பு என்பது மக்கள் தொகையை எண்ணுவது மட்டுமே என்றில்லாது, மக்கள் குறித்த புள்ளி விவரங்களுக் கான அடிப்படை ஆதாரம் ஆகும். மக்கள் தொகை கணக்கெடுப்பு மூலமாக பல்வகை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. நாடாளுமன்றம், மாநில சட்டமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையை நிர்ணயம் செய்யவும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதி எல்லைகளை வரையறை செய்யவும் இந்த மக்கள் தொகை கணக்கெடுப்புத் தகவல் பயன்படுத்தப்படுகிறது. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும், இடையறாத வரிசையில் பதினான்காவதும், 21-ஆம் நூற்றாண்டின் முதலாவதுமாகிய 'மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001' க்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

2. மக்கள் தொகை கணக்கெடுப்பு மத்திய அரசின் பொறுப்பில் வருவதாகும். 1948ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் அளிக்கின்ற அதிகாரங்களின்படி மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் தலைமைப் பொறுப்பு அதிகாரியாக இந்திய தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகை ஆணையர் உள்ளார். தமிழ்நாட்டில், மாநிலம் முழுவதும் கணக்கெடுப்புப் பணிக்கு ஒத்துழைப்பதும், தகவல்களைத் தொகுக்க ஏற்பாடு செய்வதும், ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளியீட்டு காலவரைப்படி, மக்கள் தொகை கணக்கெடுப்பு அட்டவணை/அறிக்கைகளை

[2000 மே 9

வெளியிடுவதும், தமிழ்நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலாக்க இயக்குநரின் பொறுப்பாகும். மாவட்ட அளவில், மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 4-ன்கீழ், முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகளாக மாவட்ட ஆட்சியர்களும், மாநகராட்சி ஆணையர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்கள் தொகை கணக்கெடுப்பு பொறுப்பு அதிகாரிகளாக, வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள், மாநகராட்சி மண்டல அலுவலர்கள், இராணுவக் குடியிருப்பு செயல் அலுவலர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கணக்கெடுப்பாளர்களையும் மேற்பார்வையாளர்களையும் நியமிக்கின்றனர். இரயில்வே நிர்வாக அமைப்புகளுக்கு, தென்னக இரயில்வே பொது மேலாளர், படைப் பிரிவு இடங்களுக்கு அந்தந்தப் பிரிவுத் தலைவர்கள் (Commandants) போன்றவர்கள் சில சிறப்பு பொறுப்பு அதிகாரிகளாக உள்ளனர். கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களைத் தேர்வு செய்வதும், நியமன ஆணைகள் வழங்குவது, அவர்களுக்குத் தீவிர பயிற்சி அளிப்பதை உறுதி செய்வது, அட்டவணைப் படிவங்களை அளிப்பது, நிரப்பப்பட்ட படிவங்களை மீளப்பெறுவது, வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் மக்கள் தொகை தகவல் சேகரித்தல் ஆகியவற்றை கால அட்டவணையின்படி கடைபிடித்தல், எந்தப் பகுதியும் விட்டுப்போகாமலும் பிழையற்ற தகவல்களைச் சேகரித்தல் ஆகியவற்றை உறுதி செய்வதும் பொறுப்பு அதிகாரிகளின் கடமையாகும்.

3. ஒவ்வொரு மக்கள் தொகை பொறுப்பு பகுதியும் கணக்கெடுப்புப் பகுதிகளாக கூறுபடுத்தப்படுகிறது. சாதாரணமாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அல்லது நகர்ப்புறங்களில் அவர்களுக்கு நிகரான உள்ளாட்சி அலுவலர்கள் கணக்கெடுப்பாளர்களாக நியமிக்கப் படுகின்றனர். ஒரு கணக்கெடுப்பாளர் பகுதி 100 முதல் 125 வீடுகள் உள்ளடக்கியிருக்கும் அல்லது 600 முதல் 650 நபர்களைக் கொண்டதாக அமையும். அத்தகைய 6 பகுதிகள் 1 வட்டமாக அமைந்து, மூத்த ஆசிரியர் அல்லது வருவாய்/சுகாதார ஆய்வாளர் நிலையிலுள்ள மேற்பார்வையாளர் பொறுப்பில் இருக்கும். தமிழ்நாட்டில் ஏறக்குறைய 1.05 இலட்சம் கணக்கெடுப்பாளர்களும் 18000 மேற்பார்வையாளர்களும் 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது பணிசெய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. மக்கள் தொகை கணக்கெடுப்பு இரு கட்டங்களில் நடைபெறும். 2000ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை

2000 மே 9]

வீடுகள் பட்டியலிடுதல் நடைபெறும். 2001 ஆம் ஆண்டு முக்கிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது எல்லா குடும்பங்களும், தனி நபர்களும் விடுபடாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், இவ்வாண்டு நடைபெறும் வீடுகள் பட்டியலிடும் பணியின்போது அனைத்து கட்டடங்களும் வீடுகளும் (அனைத்துக் குடியிருப்புகள்) கணக்கிடப்பட்டு, தேவையெனில், வீட்டிலக்க எண் வழங்கப்படாத கட்டடங்களுக்கு 'ம.தொ.க.' என்ற குறியீட்டுடன் உரிய எண்கள் கொடுக்கப்படுகின்றன. முதல் கட்டத்தில், குடியிருப்பு வசதி குறித்த சில தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. வீடுகள் பட்டியல் தரும் தகவல் அடிப்படையில் இரண்டாம் கட்ட கணக்கெடுப்பாளர் பகுதி பிரிக்கப்படும்.

5. இரண்டாம் கட்டமாக கணக்கெடுப்பின் முக்கிய பணி 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 முதல் 28 தேதி வரை 20 நாட்களில் மேற்கொள்ளப்படும். முக்கிய கணக்கெடுப்பின்போது கணக்கெடுப் பாளர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஒவ்வொரு குடும்பம் குறித்த அனைத்து தகவல்களையும் கணக்கெடுப்பார்கள். மீண்டும் மார்ச் மாதம் 1ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை மறு ஆய்வு சுற்று நடைபெறும். அப்போது 2001 ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி மையமாகக் கொண்டு ஏற்கெனவே எடுத்த தகவல்கள் சரிசெய்யப்படும். கணக்கெடுப்பாளர்கள் அவர்கள் பகுதிக்கு மீண்டும் சென்று அப்பகுதியில் இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் பிறப்பு, இறப்பு உள்ளதா என்று உறுதி செய்வார்கள். வீடற்றவர்கள் மற்றும் நடைபாதை குடியிருப்போர் ஆகியவர்கள் 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி இரவு கணக்கெடுக்கப்படுவார்கள்.

6. 1991 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது தனிநபர் சீட்டுகள் மூலம் தனி நபர் தகவலும் வீட்டு விவரங்கள் அட்டவணை மூலம் வீடுகள் குறித்த தகவல்களும் சேகரிக்கப்பட்டன. 2001-ல் கணக்கெடுப்பின்போது அவ்வாறன்றி வீட்டு விவரங்கள் குறித்த அட்டவணை மூலமே தனி நபர் தகவல் மற்றும் வீட்டு விவர தகவல்கள் சேகரிக்கப்படும். வீடுகள் பட்டியலிடுதல் தொடர்பான வினா பட்டியல் மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு தமிழக அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது. இது போலவே மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான வினா பட்டியலும் மத்திய அரசால் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கையாக வெளியாகும்.

நிர்வாக எல்லைகள் நிலைத்திருத்தல்

7. மக்கள் தொகை கணக்கெடுப்பு முடியும் வரை நிர்வாக அமைப்பு எல்லைகள் மாற்றப்படாதிருத்தல் மிகவும் அவசியம். கணக்கெடுப்பு பணி நடைபெறும்போதும் அது முடிந்தவுடனேயும் நிர்வாக அமைப்பு எல்லை மாற்றப்பட்டால் கணக்கெடுப்பின்போது செயல்பாட்டு சிக்கல் களையும் ஏற்படுத்துவது மட்டுமின்றி மக்கள் தொகை கணக்கெடுப்பு தகவல்களின் உபயோகமும் கணிசமாகக் குறையும். எனவே மாநில அரசு, மத்திய அரசின் அறிவுரைகளுக்கிணங்க 1-2-2000 முதல் 31-3-2001 வரை புதிய நிர்வாக அமைப்புகளை உருவாக்குவதையும் நிர்வாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றுவதையும் தடை செய்து ஆணைகள் வெளியிட்டுள்ளன.

கணக்கெடுப்பு பணியாளர்களின் மதிப்பூதியம்

8. கணக்கெடுப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வீடுகள் பட்டியலிடுதலின்போது ரூ.700 என்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது ரூ.1500 என்றும் மத்திய அரசு தொகை நிர்ணயித்துள்ளது.

2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்போது நகர்ப்புற பகுதிகள்

9. 1991ஆம் கணக்கெடுப்பின்படி தெரிவு செய்யப்பட்டுள்ள நகர்ப்புற பகுதிகள் மறு ஆய்வு செய்யப்பட்டு, சில வரையறை குறிப்புகளின் அடிப்படையில், 2001 கணக்கெடுப்பின்போது நகர்ப்புறங்களாக ஒப்புக் கொள்ளக்கூடிய இடங்களின் புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 2001ஆம் கணக்கெடுபபின்போது பின்வருபவை, நகர்ப்புறம் எனக் குறிக்கப்படும்:

(அ) மாநகராட்சி, நகராட்சி, இராணுவக் குடியிருப்பு அல்லது அறிவிக்கை செய்யப்பட்ட நகர்ப் பகுதி குழு ஆகியவற்றின்கீழ் வரும் எல்லா இடங்களும்.

(ஆ) பின்வரும் தகுதிகளைக்கொண்ட மற்ற பிற இடங்கள்:

(1) 5000-க்கு குறையாத மக்கள் தொகை கொண்ட இடங்கள்.

(2) 75 விழுக்காட்டிற்குக் குறையாமல் வேளாண்மை தவிர்த்த பிற பணிகளில் வேலை செய்யும் ஆண் தொகை கொண்ட இடங்கள்.

(3) மக்கள் நெருக்கம் சதுர கிலோ மீட்டருக்கு 400 (அல்லது சதுர மைலுக்கு 1000) குறையாதிருக்கும் இடங்கள்.

தமிழ்நாட்டில் மேற்கண்ட தகுதிகளின் அடிப்படையில் 832 நகர்கள் நகர்ப்புற பகுதிகளாகவும் எஞ்சிய இடங்கள் கிராமப் பகுதிகளாகவும் கண்டறியப்பட்டுள்ளன.

கணக்கெடுப்புப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

10. முதற் கட்டமாக, மாவட்ட முதன்மை கணக்கெடுப்பு அதிகாரிகளுக்கு பயிற்சி தரப்பட்டு, அவர்கள் பொறுப்பு அதிகாரிகளான வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர்களை பயிற்றுவித்தனர். வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளனர். கீழ்க்கண்ட பணியினங்கள் மக்கட் தொகை கணக்கெடுப்பில் முக்கியமானவை:

(அ) பல்வேறு ஊராட்சிகளில் உள்ள கிராமங்கள் அல்லது கிராமங்களின் பகுதிகள், காடுகள், மேலும் மற்ற பகுதிகளைப் பட்டியலிடுதல்.

(ஆ) மொத்த இடங்களையும் கிராமம், நகர்ப்புறம் என வகைப்படுத்துதல்.

(இ) மக்கள் தொகை பொறுப்புப் பகுதிகள், அதாவது வட்டாட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றுக்கு குறியீட்டு எண் பட்டியல் தயாரித்தல்.

(ஈ) கணக்கெடுப்பாளர் பகுதிகள் மற்றும் மேற்பார்வையாளர் வட்டங்களை காட்டும் பொறுப்பு பதிவேடுகளை தயாரித்தல் மற்றும் வீடுகள் பட்டியலிட பகுதி நேர கணக்கெடுப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் ஆகியோரை நியமித்தல்.

(உ) வீடுகள் பட்டியலிடுவதற்கான பயிற்சி வகுப்புகளை நடத்துதல் மற்றும் வீடுகள் பட்டியலிடுவதற்கான அட்டவணைகளை பகிர்ந்தளித்தல்.

(ஊ) வீடுகள் பட்டியலிடும் களப்பணி நடத்துதல் (மே-2000).

(எ) பொறுப்புப் பதிவேட்டினை முக்கிய மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு ஏற்ப மாற்றுதல்; கணக்கெடுப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர்களை நியமித்தல்.

(ஏ) மக்கள் தொகை கணக்கெடுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல் மற்றும் கணக்கெடுப்பிற்கான 'அட்டவணைகளைப் பகிர்ந்தளித்தல்.

(ஐ) 2001, பிப்ரவரி-மார்ச்சில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துதல்.

(ஒ) நிரப்பப்பட்ட அட்டவணைகளையும், இதர கணக்கெடுப்பு ஆவணங்களையும் சேகரித்தல் மற்றும் அவற்றை தொகுப்புக் கூடங்களுக்கு அனுப்பிவைத்தல்.

மேற்கண்ட அம்சங்கள் குறித்து விரிவான குறிப்புகள் அடங்கிய பல்வேறு சுற்றறிக்கைகளை மக்கள் தொகை கணக்கெடுப்பு செயல்பாட்டு இயக்குநர் அனுப்பியுள்ளார்.

நிர்வாகப் பணியாளர்

11. இறுதியான மக்கள் தொகை கணக்கெடுப்பின்போதும் வீடுகள் பட்டியலிடும்போதும் தேவையான களப் பணியாளர்களைத் தவிர, (அதாவது கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள்) 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடியும்வரை, கணக்கெடுப்பு செயல்பாட்டில், கணக்கெடுப்பு அதிகாரிகளுக்கு உதவ மாவட்டம் தோறும் நிர்வாகப் பணியாளர்களும் வழங்கப்பட்டுள்ளனர்.

கணக்குத் தலைப்பு

12. "3454. மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஆய்வு மற்றும் புள்ளிவிவரமும்" என்ற முக்கிய கணக்குத் தலைப்பின்கீழ், மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள தனி கணக்குத் தலைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்குத் தலைப்பு வருவாய் நிர்வாகத் துறை ஆணையரின் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டில் இருக்கும். மக்கள் தொகை கணக்கெடுப்பு மத்திய அரசினால், மாநில அரசின் ஒருங்கிணைப்போடு மேற்கொள்ளப் படுவதால் மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலாக்கம் தொடர்பான அனைத்து செலவுகளையும் மத்திய அரசு ஏற்கிறது. எனினும், மாநில அரசால் முதலில் செலவு செய்யப்பட்டு மத்திய அரசால் பின்னர் திரும்ப அளிக்கப்படுகின்றது. 2000-2001ஆம் ஆண்டிற்கான மாநில வரவு-செலவு திட்டத்தில், நிர்வாக பணியாளர்கள் சம்பளம், கணக்கெடுப் பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான மதிப்பூதியம், பயணச் செலவுகள் ஆகிய செலவினங்களுக்காக ரூ.7,32,64,000/- அளிக்கப்பட்டு இந்தக் கணக்குத் தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து செலவிடப்படும்.